வெளியீடு - 5

## ஆவணங்களில்

# காரைக்கால்

## 1817 - 1870



திருநள்ளாறு

முனைவர் **சோ. முருகேசன்**

புதுச்சேரித் திராவிடவியல் ஆராய்ச்சி நிறுவனம், புதுச்சேரி

# காவிரி நதி

காவிரி கிளை நதிகள்
(விளக்கம்)

R. Grand Cavery = அகண்ட காவிரி
Ile de Siringham = ஸ்ரீரங்கம் தீவு
TRICHINAPOLY = திருச்சிராப்பள்ளி
R. Coléron = கொள்ளிடம் நதி
R. Cavéry = காவிரி நதி
R. Vennar = வெண்ணாறு நதி
Poudouchatrom = புதுச்சத்திரம்
R. Codamourouty = குடமுருட்டி நதி
TANJORE = தஞ்சாவூர்
Ponts et déversoirs = பாலம், மதகு
R. Arselar = அரசலாறு
R. Tiroumoulrasenar = திருமலைராஜனாறு
R. Paravadéanar = பிராவடையானாறு
Nidamangalam = நீடாமங்கலம்
Codavasal = குடவாசல்
R. Virasojanar = வீரசோழனாறு

Coumbacanom = கும்பகோணம்
R. Natarvaikal = நாட்டார் வாய்க்கால்
Peralom = பேரளம்
R. Nandalar = நண்டலாறு
R. Vanjiar = வாஞ்சியாறு
R. Noular = நூலாறு
R. Vettar = வெட்டாறு
KARIKAL = காரைக்கால்
Grande-Aldée = திருமலைராஜன்பட்டினம்
Nagour = நாகூர்
Negapatam = நாகப்பட்டினம்
Velangany = வேளாங்கண்ணி
Vedarnam = வேதாரண்யம்
Pointe Calimère = கோடிக்கரை
Tranquebar = தரங்கம்பாடி

Caveripatnam = காவிரிப்பூம்பட்டினம்
Tiroumoulvasal = திருமுல்லைவாசல்
Devicotté = தேவிகோட்டை
Côte de Coromandel = சோழமண்டலக்கரை




நன்றி : Dr. GODINEAU - Etudes sur l'Etablissement de Karikal - Paris - 1870 - Bibliothèque Nationale, Paris.

ஆவணங்களில்

# காரைக்கால்

**1817 - 1870**

## BIBLIOGRAPHICAL DATA


| | | |
|---|---|---|
| Title of the Book | : | AAVANANGALIL KARAIKAL 1817-1870 |
| Author | : | Thirunallar Dr. S.S. MOUROUGUESSANE |
| Language | : | Tamizh |
| Edition | : | First Edition - 11th Dec. 2005<br>(Mahakavi Bharathiar's Birthday) |
| Copyright Holder | : | Author |
| Paper used | : | Maplitho 60 GSM |
| Size of the Book | : | 1 x 8 Demmy |
| Type in used | : | 11 Point |
| No.of Page | : | xx + 152 = 172 |
| Price | : | Rs. **90.** |
| Publication | : | Pondicherry Institute of Dravidology,<br>Pondicherry - India. |
| Printed by | : | Jupitar Art Printers<br>Chennai - 24. |
| Copies can be had from | : | Amma Muthu Pathipagam<br>Amma Manthraalaya<br>No.6, Chellan Nagar<br>Pondicherry - 605 011. |
| Branch | : | No. 123, M.M.G. Nagar,<br>P.K. Salai, Karaikal - 609 602. |
| Subject | : | History - Archeological Research |

புதுச்சேரித் திராவிடவியல் ஆராய்ச்சி நிறுவன வெளியீடு எண்.5

# ஆவணங்களில்
# காரைக்கால்
# 1817 - 1870

நீதிநாயகம் **தவித் அன்னுசாமி**
சென்னை உயர்நீதிமன்ற நீதிநாயகம் (ஓய்வு)
தலைவர், புதுச்சேரி சட்ட ஒப்பீடு சங்கம்
Chevalier de la Légion d'Honneur
Membre de l'Académie des Sciences d'Outre-mer
அவர்களின் அணிந்துரையுடன்

திருநள்ளாறு
முனைவர் **சோ. முருகேசன்**

**அம்மா முத்து பதிப்பகம்**
அம்மா மந்த்ராலயா, 6, செல்லான் நகர்,
புதுச்சேரி - 605 011, இந்தியா.

முதல் பதிப்பு

2005 டிசம்பர் 11 (மகாகவி பாரதியார் பிறந்த நாள்)

பார்த்திப ஆண்டு கார்த்திகைத் திங்கள் 26ஆம் நாள்

உரிமை : ஆசிரியருக்கே

விலை : ரூ. **90.**

வெளியீடு : புதுச்சேரித் திராவிடவியல் ஆராய்ச்சி நிறுவனம். புதுச்சேரி

நூல் கிடைக்குமிடம் :

அம்மா முத்து பதிப்பகம்
6, செல்லான் நகர்,
புதுச்சேரி - 605 011.

45, வடக்கு வீதி
திருநள்ளாறு - 609 607

## பட விளக்கம்

படம் : 1 அட்டைப்படம் முகப்பு
நிர்வாகி மாளிகை
நன்றி : *Planning & Research Department Karaikal (Govt. of Pondicherry)*

படம் : 2 முன் அட்டை உள்பக்கப் படம்
காவிரியும் அதன் கிளை நதிகளும்
நன்றி : *Dr. Godineau*

படம் : 31 பின் அட்டை உள்பக்கம்
காரைக்கால் நகரமும், அரசலாறும் – வரைபடம்
நன்றி : *Dr. Godineau*

# காணிக்கை

புதுச்சேரி மாநிலத்தின் முதல் முதலமைச்சர்
காரைக்கால் இராம.அ.சா.பக்கிரிசாமிப்பிள்ளை
(08.09.1906 - 13.01.1956)
அவர்களுக்கு



நூற்றாண்டு விழாக் காணும் பிள்ளையவர்கள்,
காரைக்கால் மேயராக நீண்ட காலமும்,
சேனாத்தேராக ( பாரீஸ் பாராளுமன்ற உறுப்பினர் )
31.10.1954 வரையிலும்
சிறப்பாகப் பணியாற்றியவர்.

அன்புடன்
சோ. முருகேசன்

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| | அணிந்துரை | ix |
| | வாழ்க நீடூழி! | xiii |
| | முன்னுரை | xv |
| 1. | காரைக்காலில் மீண்டும் பிரெஞ்சுக்காரர்கள் | 1 |
| 2. | காரைக்காலின் சீரழிவு | 3 |
| 3. | சுங்கச்சாவடி | 5 |
| 4. | உப்பு உற்பத்தி | 11 |
| 5. | கஞ்சா விற்பனை | 14 |
| 6. | மக்கள் நிலை | 15 |
| 7. | இந்து சமயத்தினர் | 22 |
| 8. | காரைக்கால் போராட்டம் | 36 |
| 9. | வேளாண்மையும் நீர்ப்பாசனத் திட்டங்களும் | 44 |
| 10. | மீன்வளம் | 66 |
| 11. | நிலவரி | 72 |
| 12. | இதர வரிகள் | 76 |
| 13. | இயற்கைச் சீற்றங்கள் | 77 |
| 14. | நிர்வாகி மாளிகை | 81 |
| 15. | காரைக்கால் பிரதேச மாகாணங்கள் | 83 |
| 16. | அரசு நிர்வாக முறை | 89 |
| 17. | பிரெஞ்சிந்திய நிர்வாகம் (புதுச்சேரி) | 92 |
| 18. | அரசலாறு சீரமைப்பு | 94 |
| 19. | சாலைகள் | 106 |
| 20. | பாலங்கள் | 109 |
| 21. | கடல் வாணிகம் | 114 |
| 22. | அரிசி ஏற்றுமதி | 117 |
| 23. | எண்ணெய் ஏற்றுமதி | 120 |
| 24. | துணி ஏற்றுமதி | 122 |
| 25. | கூலிகள் ஏற்றுமதி | 124 |
| 26. | காரைக்கால் - நாகப்பட்டினம் இரயில்பாதை வோர்ம்ஸ் திட்டம் | 134 |
| 27. | அகழாய்வு செய்ய வேண்டிய இடங்கள் | 142 |
| | முடிவாகக் கூறுமிடத்து | 145 |
| | சொல்லடைவு | 151 |
| | துணை நூற்பட்டியல் | |

# பட விளக்கம்


1. முகப்பு அட்டை - நிர்வாகி மாளிகை
2. முன்பக்க அட்டை உட்புறம் - காவிரி
3. காணிக்கை v
4. இந்தியா படம் - பிரெஞ்சிந்திய மாகாணம் viii
5. காரைக்கால் அரசலாற்றங்கரை xx
6. 18ஆவது லூயி 6
7. மூன்றாவது நெப்போலியன் 7
8. அரசலாறு - வாஞ்சியாறு சங்கமம் 36
9. பெரமசாமிப்பிள்ளை 42
10. வேளாண்மை வாய்க்கால் (வரைபடம்) 49
11. நண்டலாறு மணவாங்கல் 7 + 2 53
12. தலைகாணி வாய்க்கால் - 5 கண்மாய் மதகு 54
13. தலைகாணி வாய்க்கால் - 3 கண்மாய் மதகு 54
14. அரசலாறு - நூலாறு - ஆண்டார்பந்தி 57
15. நூலாறு தலைப்பு 57
16. வாஞ்சியாறு மதகு 61
17. மானாமுட்டி மதகு 62
18. நிரவி வாய்க்கால் தலைப்பு 63
19. கருக்களாச்சேரி (காரைக்கால்) கோட்டை 67
20. காரைக்கால் - 5 மாகாணங்கள் 84-85
21. முல்லையாறு திருப்புதல் 95
22. அரசலாறு சீரமைப்புக்கு முன் 101
23. அரசலாறு சீரமைப்புக்குப் பின் 102
24. அரசலாறு பாலம் 111
25. பிராவிடையானாறு 112
26. பண்டக சாலை 116
27. கூலிகள் கடல்வழிப்பாதை 125
28. கூலிகள் கடல்வழிப்பாதை - கப்பல் 127
29. Wilberforce 131
30. Schoelcher 132
31. பின் அட்டை உட்பக்கம் -
காரைக்கால்/அரசலாறு வரைபடம்

## 4 : பிரெஞ்சிந்திய மாகாணங்கள்

(இந்தியா)



# அணிந்துரை

இதோ திருநள்ளாறு முனைவர் சோ. முருகேசனின் ஐந்தாம் படைப்பு! இது ஆழ்ந்த ஆராய்ச்சி நூல். இத்தகைய நூல் தமிழ்மொழியில் அரிது.

இதனைப் புதுவை வாசகர்கள் புரிந்துகொள்வதற்குக் காரைக்கால் எத்தகைய மண் என்றும் காரைக்காலுக்கும், புதுவைக்கும் எவ்வாறான தொடர்பு இருந்து வந்ததென்றும் தெரிந்துகொள்வது நன்று.

காரைக்கால் அரசலாறு கடலில் சங்கமம் ஆகும் இடத்தில் அமைந்துள்ளது. காவேரி கழிமுகப் பகுதியின் ஒரு துண்டாகும். வளம் பெற்ற மண் என்று சொல்லத் தேவையில்லை. அங்கு வசித்து வந்த மக்களும் தொன்றுதொட்டே நன்கு கற்றறிந்தவர்கள். முதல் நாயன்மார் அதுவும் மகளிராக உதித்த இடமன்றோ! மற்றக் கலைகளும் அங்கு நன்கு செழித்திருந்தன. நிறைய பஞ்சலோகச் சிலைகள் கண்டெடுக்கப் பெற்று, அங்கு அரும்பொருட்காட்சி நிலையம் இல்லாத காரணத்தினால் புதுவைக்குக் கொண்டுவரப்பட்டுள்ளன.

நல்ல துறைமுகம் என்ற காரணத்தினால் காரைக்கால் வெளியூர் வாணிகத்தில் ஈடுபட்டுச் செல்வம் அடைந்துள்ளது. இந்த வாணிகத்தில் மரைக்காயர்கள் அதிகமாக ஈடுபட்டுள்ளனர்.

தஞ்சாவூர் மன்னனுக்கும், பிரெஞ்சுக் கவர்னருக்கும் 1738ஆம் ஆண்டில் ஏற்பட்ட ஒப்பந்தப்படி பிரெஞ்சுக்காரர்கள்

காரைக்காலை விலைக்கு வாங்கினர். தென்னிந்தியாவில் பிரெஞ்சுக்காரர்களுக்கும் ஆங்கிலேயர்களுக்கும் அடிக்கடி நிகழ்ந்த போர்களின் காரணத்தால் காரைக்காலுக்கும், புதுவைக்கும் உடனே நிரந்தர தொடர்புகள் ஏற்படுவதற்கு வாய்ப்பு இல்லாமல் போயிற்று. அப்போர்களெல்லாம் 1814ஆம் ஆண்டில் பிரெஞ்சுக்காரர்களுக்கும், ஆங்கிலேயர்களுக்கும் ஏற்பட்ட ஒப்பந்தத்திற்குப் பிறகு ஓய்ந்தன. காரைக்காலுக்கும், புதுவைக்கும் மக்கள் நடமாட்டம் அதிகரித்தது. காரைக்கால் என்ற பெயர் புதுவை மக்கள் மனதில் ஆழப்பதிந்துவிட்டது. சிறுவர்களும் "காரைக்கால் கருப்பு, சென்னைப்பட்டினம் சிவப்பு" என்று குண்டுமணிக்கு ஒரு விடுகதையாகச் சொல்லிக் கொள்வதுண்டு.

காரைக்கால் மக்கள் புதுவை வளர்ச்சிக்கு ஏதுவாக இருந்தனர். முக்கியமாகக் குறிப்பிட வேண்டுமென்றால் ஏராளமான வெள்ளாழ கிறிஸ்தவக் குடும்பங்கள் புதுவையில் குடிபுகுந்து உயர்ந்த பதவியில் பணியாற்றி இருக்கின்றனர்.

புதுவை மாகாண அரசியலில் காரைக்கால் பகுதியினர் பெரும்பங்கு பெற்றுள்ளனர். காரைக்கால் பிரதிநிதிகள் ஒரே கட்சியைச் சேர்ந்தவர்களாக இருப்பர். புதுவைப் பிரதிநிதிகள் அதிகமாக இருந்தபோதிலும் இரண்டு கட்சியினராகப் பிரிந்திருந்த காரணத்தினால், காரைக்கால் பிரதிநிதிகள் எந்தக் கட்சியினராக உள்ளார்களோ அக்கட்சியே பெரும்பான்மை பெறும். முதலமைச்சர் பதவியும் அடைவார்கள்.

எனினும் புதுவை மாகாணத்தின் தூரத்தில் உள்ள பகுதிகளாகிய காரைக்கால், மாஹே, ஏனம், சந்திரநாகூர் ஆகியவைகளின்மேல் அரசாங்கத்தின் முழுக் கவனம் செலுத்தப்படுவதில்லை என்று குறைகூறியே வந்திருந்தனர். அதை முழுமையாகத் தீர்த்துவைக்கும் பொருட்டு பாரீஸ் பிரெஞ்சு அரசாங்கம் 1947இல் ஒரு சட்டம் பிறப்பித்தது. அதன் பிரகாரம்

ஒவ்வொரு பகுதியும் தனி சுய ஆட்சி நகரங்களாக அமைக்கப்பட்டது. அந்தச் சட்டம் சந்திரநாகூரில் மட்டும் அமலாக்கப்பட்டது. மீதி மாகாணங்களில் அதை அமல்படுத்தக்கூடாதென்று அப்போதைய அரசியல்வாதிகள் எதிர்ப்புத் தெரிவித்தனர். ஆனால் அவர்கள் மக்களுக்குக் காரணம் ஒன்றும் சொல்லவில்லை. ஆகையால் அது அவர்களுடைய தற்காலிக சுயநலத்தைப் பொறுத்து இருக்கலாம் என்று ஊகிக்க இடமுண்டு.

1817 ஆம் ஆண்டில் இருந்து தொடர்ந்து பிரெஞ்சு ஆட்சி காரைக்காலில் நிலவி வந்தது. காரைக்காலுக்கென ஒரு பிரெஞ்சு நிர்வாகி அமைக்கப்பட்டிருந்தார். அவருக்குப் பொழுதுபோக்கு வசதி ஒன்றும் இல்லாத காரணத்தினால் அவர் முழுக் கவனத்தையும் நிர்வாகத்திலேயே செலுத்திவந்தார். காரைக்கால் பகுதி புதுவைப் பகுதிபோலத் துண்டுதுண்டாக இல்லாமல் ஒரே கண்டமாக இருந்ததனால் அங்குப் பாசன வசதியை அற்புதமாகப் பிரெஞ்சுப் பொறியாளர்கள் அமைத்துத் தந்துள்ளனர்.

பிரெஞ்சு நிர்வாகிகள் சிறிது காலத்திலேயே காரைக்கால் நிலங்களில் கொத்தடிமைகள் வேலை புரிந்துவருவதைக் கண்டுணர்ந்தனர். இது பிரெஞ்சு அடிப்படை சட்டத்திற்கு விரோதமானது என்று பட்டெனத் தென்பட்டது. ஆனால் அதைத் திடீரென நீக்க முயற்சித்தால் எதிர்ப்பு ஏற்படும் என்பதையும், விவசாயம் பாதிக்கப்படுமென்பதையும் மனதிற்கொண்டனர். 1854ஆம் ஆண்டில் இரண்டு விரிவான சட்டங்கள் மூலம் அதனைப் பக்குவமாகப் படிப்படியாக அகற்றினர். அச்சட்டங்கள் அமலுக்கு வர, கல்வி வளர்ச்சியும் எல்லோருக்கும் வழங்கப்பட்ட வாக்குரிமையும் மிக உதவின. 19ஆம் நூற்றாண்டின் இரண்டாவது பகுதி காரைக்கால் பொற்காலம் என்று நூலாசிரியர் குறிப்பிடுவது சரியே.

இந்த நூல் காரைக்காலின் ஒரு குறுகிய காலத்தின் (1817 – 1870) வரலாற்று ஆய்வாகும். ஆசிரியர் எடுத்துக்கொண்ட முயற்சியினால் அவருக்கு நிறையத் தகவல்கள் கிடைத்துள்ளன. அவைகளைச் சிறு சிறு பத்திகளாக எடுத்துரைத்துள்ளார். அவைகளை எளிதாகப் புரிந்து கொள்வதற்கும், மனதில் அமைத்துக் கொள்வதற்கும், அரிய புகைப்படங்களும், நிலப்படங்களும், புள்ளிவிவரத் தொகுப்புகளும் அளித்துள்ளார்.

நூல் முழுமையும் எளிய தெளிவான நடையில் எழுதப்பட்டுள்ளது. கிடைத்துள்ள தகவல்களை எந்த அளவிற்கு ஆசிரியர் ஆராய்ந்துள்ளார் என்பதனை அது தெளிவுபடுத்துகிறது. இது வரலாற்று ஆய்வு நூலாதலால் இலக்கிய அலங்காரத்திற்கு ஆசிரியர் இடங்கொடுக்கவில்லை. இழையளவும் உண்மைக்குப் புறன் ஆகாமல் நூலை வடித்துள்ளார்.

நூலாசிரியர் கல்வித்துறையில் ஆற்றிய தொண்டை யாவரும் நன்கறிவர். இப்பொழுது வரலாற்று ஆராய்ச்சி நிபுணராகத் திகழ்ந்து வருகிறார். இந்த நூல் முடித்த பிறகும் நூலகங்களிலேயே அவர் பெரும்பாலும் காலத்தைப் பயன்படுத்துகிறார். அவரது ஆராய்ச்சிப்பணி மென்மேலும் தொடரட்டும்.

*நீதி நாயகம் தவித் அன்னுசாமி*

# வாழ்க நீடுழி!

வைரவிழா வயதைக் கடந்தவர், வளமிக்க வரலாற்று வாலிபராகத் தோற்றமளிக்கும் மாமனிதர் டாக்டர் முருகேசனார். இவர் வடித்தளித்துள்ள இவ்வரலாற்று நூல் ஆய்வுக்குச் சான்றாகும்; அறிஞர்க்கு விருந்தாகும்.

தலைப்பே நம்மைச் சுண்டியிழுக்கிறது. ஆணி அடித்ததுபோல் அசத்துகிறார். ஆவணங்களில் காரைக்கால்! ஆ! எவ்வளவு திண்மை! எத்தகைய உண்மை!

நெஞ்சில் அறைவது போலவும், உதிரம் உறைவது போலவும் அடிமைகளாய் மக்கள் அவலத்தில் அழிந்த துயரம் மிக்க ஆவணச் செய்திகள் அல்லற்படுத்துகின்றன.

மண்வளமும் நீர்வளமும் இருந்தாலும் மனவளம் மாந்தரிடம் இல்லையே என்று மாளாத்துயரம் மண்டிடச் செய்கிறது இந்நூல்.

ஊர்ப்பற்றும் உளப்பற்றும், உறங்காமல் ஊற்றெடுத்த ஊக்கத்தால் உழைத்தவரின் கண்டுமுதல் நமக்கெல்லாம் நல்விருந்து. நாட்டார்க்குச் சொல்விருந்து.

ஆறுகளின் போக்கும் அதன் நீர் மடக்கும் நோக்கும், வேளாண்மைக்கும் வணிகத் தாளாண்மைக்கும் வழிவகுத்து மக்கள் துயர் தீர்க்கும் நோக்கம், எவ்வாறெல்லாம் இருந்தன என்பதைப் புள்ளி விவரங்கள் காட்டிப் புரிய வைக்கும் பள்ளியாசிரியராகிறார் நூலாசிரியர். படிப்போம்; பாடம் பெறுவோம்!

சலிப்பின்றிச் சலித்தெடுத்த சத்தான செய்திகளைச் சரிபார்த்து நாம் கொள்ள, சாட்சிகளாய்ச் சான்றுகளை, சரம் சரமாய்ப் படைக்கின்றார்; குவிக்கின்றார்.

காவேரித்தாய்க்கு இத்தனைக் கால்களா? ஒருசேரக் கண்டறிந்தோர் ஒருவருண்டா? இதோ இவர் கண்டுவிட்டார்; நமக்கும் காட்டிவிட்டார்.

காரைக்கால் நிலப்படமும் கண்மாய்கள் கட்டப்பட்ட நீரோட்டக் காட்சிகளும் சாலைகளும், மக்கள் நலனுக்கு மாளா முயற்சியுடன் நாளும் உழைத்து நலஞ்சேர்த்த நல்லோர் திருஉருவங்களும் நாம் காணத் தந்துள்ளார், நள்ளாறு கண்டெடுத்த நல்முத்து முருகேசர்!

நூறாண்டுகளைக் கடந்து நுழைந்து தேடிப் பழமைச் சான்றுகளைப் படியளந்து பார்த்துப் பிடியளவு தந்துள்ளார். அடி முடி அறியேன்; அண்ணாந்து நோக்கி ஐயா வணங்குகிறேன்.

அக்கால நாணயங்களின் மதிப்பும், அளவைகளின் குறிப்பும், கப்பல் வந்து போன கதைகளும், ஆள்வோரின் நிலையும் அல்லற்படும் வாழ்வும் அடுக்கடுக்காய்க் காட்டுகிற அழகான கண்ணாடி! ஆய்வுக்கு முன்னோடி! அவர் வாழ்க நீடூழி!
வணக்கத்துடன்,

அன்பன்

***வெள்ளையாம்பட்டு சுந்தரம்***

# முன்னுரை

*கங்கை நதிப்புறத்துக் கோதுமைப் பண்டம்*
*காவிரி வெற்றிலைக்கு மாறு கொள்ளுவோம்.*

**- மகாகவி பாரதியார்**

வேளாண்மையையும் வணிகத்தையும் இருகண்களாகக் கொண்டு இயங்கும் காரைக்காலின் வரலாற்றில் ஒரு பகுதியை (1817 - 1870), கிடைத்த ஆவணங்களின் துணைக்கொண்டு, புதுச்சேரித் திராவிடவியல் ஆராய்ச்சி நிறுவனம் தனது ஐந்தாவது வெளியீடாக இந்நூலை வரலாற்றறிஞர்களுக்குப் படைக்கிறது.

வடக்கு அட்சரேகை $10^{0}$ - $15^{1}$ அளவிலும், கிழக்குத் தீர்க்கரேகை $77^{0}$ - $41^{1}$ அளவிலும் அமைந்துள்ள காரைக்கால் மாகாணம் (பிரதேசம்) 161 சதுர கி.மீ. பரப்புடையது. காரைக்கால் சோழமண்டலக்கரையில் அரசலாற்றங்கரையோரம் அமைந்துள்ள ஒரு பழம்பெரும் துறைமுகப்பட்டினம். காரைக்காலும், அதன் சுற்றுப்புறக் கிராமங்களும் பிரெஞ்சிந்திய ஆட்சிக்காலத்தில் ஒரு மாகாணமாக விளங்கின.

கடந்த 15 ஆண்டுக் காலமாக, நான் பிரான்ஸ் செல்லும்போதெல்லாம், பாரீசிலுள்ள புகழ்வாய்ந்த தேசிய நூலகத்திலும், தேசிய ஆவணக் காப்பகத்திலும், இதுபோன்ற வேறு ஆய்வு நிறுவனங்களிலும், அத்துடன் புதுச்சேரியிலுள்ள ஆய்வு நிறுவன நூலகங்களிலும், பிற நிறுவனங்களிலும் திரட்டிய செய்திகளிலிருந்தும், கள ஆய்வுகளிலிருந்தும் வேறு பல வரலாற்று நூல்கள், செய்தித்தாள்கள் இவைகளிலிருந்தும் கிடைத்த தகவல்களிலிருந்து இந்நூல் உருவாக்கப்பட்டது.

பிரெஞ்சுக்காரர்கள் காரைக்காலிலும், அதன் சுற்றுப்பிரதேசங்களிலும் முதன் முதலில் ஆட்சி அமைத்தது 1739

பிப்.14இல் ஆகும். 21 ஆண்டு ஆட்சிக்குப்பின், ஆங்கிலேயர்களுடன் நடந்த போரால், 1760 மார்ச் 10இல் காரைக்காலை விட்டு வெளியேறினர். பின்னர்க் காரைக்காலில் 5 ஆண்டுக் காலம் பிரிட்டிஷ் ஆட்சி!

1765 பிப். 18இல் இரண்டாவது முறையாக, பிரெஞ்சுக்காரர்கள் மீண்டும் காரைக்கால் பிரதேசத்தில் ஆட்சி அமைத்தனர். 1778 ஆகஸ்டு 9இல் ஆங்கிலேயர்களுடன் நடந்த போரினால், பிரெஞ்சுக்காரர்கள் 13 ஆண்டு ஆட்சிக்குப்பின் காரைக்காலை விட்டு வெளியேறினர். இதன் விளைவாகக் காரைக்காலில் 7 ஆண்டு ஆங்கில ஆட்சி!.

1785 பிப்.26இல் 3ஆவது முறையாகப் பிரெஞ்சுக்காரர்கள் ஆட்சி காரைக்கால் பிரதேசத்தில் அமைந்தது. 1793 சூன் 19இல் முன் கூறிய அதே காரணத்தால் 8 ஆண்டு ஆட்சிக்குப்பின் பிரெஞ்சுக்காரர்கள் வெளியேறினர்.

அதன்பிறகு 24 ஆண்டு ஆங்கிலேய ஆட்சி (1793 - 1817)! ஆங்கிலேய ஆட்சி என்பதைவிடக் கொடுமையான மாற்றாந்தாய் ஆட்சி எனலாம்! வேளாண்மை, வணிகம் தொழில்கள் அனைத்தும் பாழ்! நீதி நிர்வாக அலங்கோலம்! மக்கள் அவதி!!

1817 சன. 14இல் (தைப் பொங்கலன்று) 4ஆவது தடவை இறுதியாகப் பிரெஞ்சுக்காரர்கள் காரைக்கால் பிரதேசத்தில் ஆட்சியில் அமர்ந்தனர். பிரான்சு மாமன்னன் நெப்போலியன் தோல்விக்குப்பின், 1814 மே 30 பாரீஸ் ஒப்பந்தத்தின்படி ஆங்கிலேயர்கள் பிரெஞ்சிந்தியாவை, இதற்கு முன் 1792 சன.1இல் அது எப்படி இருந்ததோ, அப்படியே மீண்டும் பிரான்சிடம் ஒப்படைத்தனர்.

இவ்வொப்பந்தப்படி, பிரெஞ்சிந்தியாவில் ராணுவமோ அல்லது அளவுக்கு மீறிய காவலர்களோ இருத்தல் கூடாது என முடிவாயிற்று. ஆகவே, இனி, பிரெஞ்சிந்தியாவில் ராணுவத் தளமோ, கடற்படைத் தளமோ ஆங்கில அரசு அமைக்க முடியாத நிலை ஏற்பட்டுவிட்டது.

மேலும், கிழக்கிந்தியக் கம்பெனியின் முன்னோடிகளின் பொறாமையாலும், அடாவடித்தனத்தாலும் இங்கு வணிகமும் வளர்ச்சியடைய வாய்ப்பில்லாமல் போய்விட்டது. ஆகவே தான் காரைக்கால் நிர்வாகிகளுள் ஒருவரான சைந்திலேர் பின்வருமாறு கூறினார் :

"பிரான்சுக்கு இந்தியாவிலிருப்பதெல்லாம் ஒரு பெரும் பண்ணை மட்டுமே! அதைப் பல மிராசுதாரர்களும் விவசாயிகளும் பயிரிட்டு நல்ல கண்டுமுதல் செய்கின்றனர். ஆகவே, நாம் செய்ய வேண்டுவது யாதெனில், அந்த உற்பத்தியைப் பெருக்குவது, விவசாயிகளை மகிழ்ச்சியாக வைத்திருப்பது மட்டுமேயாகும்."

1817லிருந்து 1852 வரை பிரான்சில் வலுவான, சீரான ஆட்சி நடைபெறாததால், (18ஆவது லூயி, 10ஆவது ஷார்ல், லூயி பிலிப் ஆட்சிகள்) அதுவரை எந்தவொரு வளர்ச்சித் திட்டமும் நிறைவேற முடியவில்லை. 1852க்குப் பின்னர், பேரரசன் மூன்றாவது நெப்போலியன் ஆட்சியிலிருந்து பல முன்னேற்றங்களும், கடல்வணிக விரிவாக்கங்களும் நடந்தன. இதனைக் காரைக்காலின் பொற்காலம் என்றே கூறலாம்.

இருப்பினும் 1852க்கு முன்னதாகவே பல பாசனத் திட்டங்களும், மதகுகள், பாலங்கள் கட்டும் பணிகளும், காரைக்கால் நிர்வாகி லெஸ்பர்தா காலத்தில் தொடங்கி நிர்வாகி சைந்திலேர் காலத்தில் முடிவடைந்துள்ளன என்பதை நன்றியுடன் இங்கு நினைவு கூர்தல் வேண்டும்.

எக்காலத்திலும் வளர்ச்சித் திட்டங்கள் நிறைவேறுவதைப் பிரிட்டிஷ் இந்தியாவிலிருந்த கிழக்கிந்தியக் கம்பெனியர் (ஐரோப்பிய வணிகர்கள்) தங்கள் பெருஞ்செல்வாக்கைப் பயன்படுத்திப் பலவித இடையூறுகளை விளைவித்துத் தடுத்து வந்துள்ளனர். பின்னர், வெர்னியாக், துய்ப்ரே போன்ற சிறந்த குவர்னர்கள் காலத்தில் காரைக்காலில் மேலும் பல முன்னேற்றங்கள் நடைபெற்றன.

· ஆய்வுகள் முடிவதில்லை. இந்நூலில் நிறை குறை காணில் ஆசிரியருக்கு எழுத வேண்டுகிறேன். மேலும், இந்தியாவில் மட்டுமின்றி, வெளிநாட்டு ஆய்வு நிறுவனங்களிலும் (பிரான்சு, ஹாலந்து, டென்மார்க், இங்கிலாந்து) காரைக்கால் வரலாற்று ஆவணங்கள் மலைமலையாய்க் குவிந்து கிடக்கின்றன. இளந்தலைமுறை ஆய்வர்கள் இவைகளை உரிய முறையில் கையாண்டு, நூல் வடிவில் தமிழுலகிற்கு அளிக்கலாமல்லவா? நாம் ஆற்ற வேண்டிய தொண்டும் அதுதானே!

இந்நூலை எழுதவும் சிறப்புடன் உருவாகி வெளிவர ஆக்கமும் ஊக்கமும் தந்ததோடு அரியதோர் அணிந்துரையும் வழங்கிய சென்னை உயர்நீதிமன்ற நீதிநாயகம் தவித் அன்னுசாமி அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிரான்சு நூலகங்களில் ஆய்வு செய்தபோது என்னோடு உடனிருந்து உதவிபுரிந்த திரு. மு. பழனிராஜனுக்கும், திரு. மு. கோவிந்தராஜனுக்கும் எனது அன்பான பாராட்டுதல்கள்.

இவ்வெளியீடு சிறக்க தேவைப்படும் உதவிகள் நல்கிய புதுச்சேரித் திராவிடவியல் ஆராய்ச்சி நிறுவன உறுப்பினர்கள் அனைவருக்கும், திரு. ச. செந்தில்குமாருக்கும், சீரிய முறையில் நிழற்படம் எடுத்துதவிய எம். பன்னீருக்கும் எனது உளங்கனிந்த நன்றி!

நூல் எழுத தேவையான ஆவணக்குறிப்புகள் எடுக்க பேருதவிபுரிந்த புதுச்சேரி பிரெஞ்சு ஆய்வுக் கழகத்தின் நூலகர்கள் திருமதி அனுரூபா நாய்க், திரு. கே. ராமானுஜம், திரு. ஆர். நரேந்திரன், முனைவர் என். முருகேசன், திரு. ஜி. சரவணன் ஆகியோருக்கும் எனது உளமார்ந்த நன்றி.

நூலின் கையேட்டைக் கணினி தட்டச்சு செய்து முறைப்படுத்திய திரு. ப.குமாரவேலுவிற்கும், நூல் எழுதும்போது எனக்கு உறுதுணையாக இருந்த ஆ. வெங்கட்சுப்பராய நாயகர், ஐ. அய்யப்பன், ப. தனபாலு, மு. சோமசுந்தரம், மு. செல்வசுந்தரி, மு. பர்வதசுந்தரி, சோ. சுமதி ஆகியோருக்கும் எனது

பாராட்டுதல்களையும் நல்வாழ்த்தினையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

நூல் அச்சாகும்போது செவ்விய முறையில் படி திருத்திய புலவர் ம. அய்யாசாமி, புலவர் இரா. அன்பழகன், திரு. மு. செல்வராஜன் ஆகியோருக்கும் எனது நன்றியைப் புலப்படுத்திக் கொள்கிறேன். திரு. இராம. அ.சா. பக்கிரிசாமிப்பிள்ளை நிழற்படத்தைத் தேடிக் கண்டுபிடித்துக்கொடுத்த திரு. கனகராசு, திரு. மாரிசெட்டி, திரு. செல்லான் செட்டி ஆகியோருக்கு எனது மனமார்ந்த நன்றி.

தனது உடல்நலத்தையும் பாராமல் இந்நூலை அச்சிட்டு வெளியிடவும், படங்கள் சிறப்பாக அமைத்து வாழ்த்துரையும் வழங்கிய நூல் பதிப்பியல் அறிஞர் வெள்ளையாம்பட்டு சுந்தரம் அவர்களுக்கும், கல்வெட்டு அறிஞர் வில்லியனூர் ந. வேங்கடேசன் அவர்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றி!

அம்மா மந்த்ராலயம் — அன்புடன்

புதுச்சேரி — **சோ. முருகேசன்**

5 : காரைக்கால் அரசலாற்றங்கரை, கப்பல் துறை



# 1

# காரைக்காலில் மீண்டும் பிரெஞ்சுக்காரர்கள்

1817 சனவரி 14 (பொங்கலன்று) காரைக்கால் பிரதேசம் மீண்டும் பிரெஞ்சுக்காரர்கள் வசம் வந்தடைந்தது.

காரைக்கால் நிர்வாகியாக நியமிக்கப்பட்ட பெரான்ழேயிடம், தஞ்சாவூர் கலெக்டர் ஜான்தக்காரே, மாகாணத்தை முறைப்படி ஒப்படைத்தார்.

காரைக்கால் அரசு மைதானத்தில், ஏராளமான பொதுமக்களிடையே பிரெஞ்சு தேசியக் கொடியை நிர்வாகி ஏற்றிவைத்து, கீழ்க்கண்ட அறிக்கையை வெளியிட்டார். (1817, சன 14, பகல் 12 மணி) :-

பிரிவு-1 - காரைக்காலும் அதன் மாகாணங்களும், 1792 சன.1இல் இருந்தவாறு, பிரான்சு மன்னர் 18ஆவது லூய் அவர்களின் ஆட்சியின்கீழ் ஒப்படைக்கப்படுகிறது.

பிரிவு-2 - ஆங்கிலேயர்களின் ஆட்சி இன்றுடன் முடிவுக்கு வருகிறது. மக்கள் இன்று பிரெஞ்சு சட்டங்களின்படி மட்டுமே நடத்தப்படுவார்கள்.

பிரிவு-3 - காரைக்கால் மாகாண வருமானம் அனைத்தும் பிரெஞ்சு அரசாங்கத்திற்கே சொந்தம்.

பிரிவு-4 - காரைக்கால் அரசு மைதானத்தில் இன்று பிரெஞ்சு தேசியக் கொடி ஏற்றப்படுகிறது.

புதுச்சேரியிலுள்ள பிரெஞ்சிந்திய குவர்னர்[1] "துய்ப்புய்"யின் ஆணைப்படி, இம்மாகாணத்தில் இதுவரை பணியாற்றிவந்த அனைத்து அரசு ஊழியர்களும் தொடர்ந்து அதே பணியில் நியமிக்கப்பட்டனர். இந்த அரசு ஊழியர்கள் ஆங்கிலேயர்களால் நியமிக்கப்பட்டவர்கள். இவர்கள் ஓய்வு பெற்றபின், பிரெஞ்சிந்தியக் குடிமக்கள் அந்த இடங்களுக்கு நியமிக்கப்படுவார்கள்.

காரைக்கால் அரசின் மொழிபெயர்ப்பாளராகவும், திவானாகவும் "லுய் பாகூ பிரகாசம்" என்பவர் நியமிக்கப்பட்டார். திவானுக்கு உரிய அனைத்து மரியாதைகளும் அவருக்கு அளிக்கப்பட்டன. அதாவது - தங்கப்பூண் போட்ட கைத்தடி, வெள்ளை நிறக் குடை, பல்லக்கு.

மாகாணத்தின் எல்லைகள் 1792 சன.1இல் இருந்தவாறு மீண்டும் நிர்ணயித்து உறுதிசெய்யப்பட்டது. இது மிகவும் எளிதாகவே நடந்தேறியது. (சில சிறு தகராறுகள் நீங்கலாக)



---

குவர்னர் - *Gouverneur* - பிரெஞ்சிந்தியாவின் ஆளுநர் இவர் பிரான்சு மன்னரின் அதிகாரத்திற்குக் கட்டுப்பட்டவர். இவரது நிர்வாக அலுவலகம் புதுச்சேரியில் உள்ளது

# 2

# காரைக்காலின் சீரழிவு[1]

காரைக்காலை விட்டு 1793இல் வெளியேறிய பிரெஞ்சு ஆட்சி, மீண்டும் 1817இல் அமைக்கப்படுகிறது.

இந்த 24 ஆண்டு இடைக்காலத்தில் நடைபெற்ற ஆங்கில ஆட்சியில், வேளாண்மை, வர்த்தகம், தொழில், நிர்வாகம் அனைத்துமே சீரழிக்கப்பட்டன. மக்கள் பல இன்னல்களை அனுபவிக்க நேர்ந்தது. சான்றாக,

- 1790இல் இங்குப் பயிரிடப்பட்ட நன்செய் நிலம் 2720 வேலி ஆகும். ஆனால் 1817இல் 1800வேலி நிலங்கள் மட்டுமே பயிரிடப்பட்டிருந்தன. இதனால் நெல் உற்பத்தியில் பெரும் பின்னடைவு ஏற்பட்டது.

  இதற்கு முக்கிய காரணம், வேளாண்மைக்கு உயிராகிய பாய்கால் வடிகால் வாய்க்கால்கள் பராமரிப்பு இல்லாமல் பாழடைந்து போனதேயாகும்!

  ஆங்கிலேயர்கள், மாற்றாந்தாய் மனப்பான்மையில், எந்தப் பொறுப்புமின்றி ஆட்சி நடத்தி வந்துள்ளனர் அந்த 24 ஆண்டுகளும்!

  இது மட்டுமல்ல :

- காவல்துறையில் போதிய காவலர்கள் இல்லை. மேலதிகாரிகளும் இல்லை.

---

1 *Jacques WEBER - Les Etablissements Francais en Inde au XIXe Siecle - Librairie de I'Inde, Paris - 1988 - P. 18*

இருப்பினும் நாட்டில் அமைதி, ஒழுங்கு நிலவியிருந்தது என்றால் அது மக்களின் இயல்பான பண்பாடேயாகும்.

- நீதித்துறையும் அதே கதிதான். போதிய நீதிபதிகள் இல்லை. அத்துடன் முந்தைய பிரெஞ்சு ஆட்சிக் காலத்தில் ஏற்பட்ட வழக்குகளைத் தீர்த்துவைக்க, அக்காலச் சட்டதிட்டங்கள் அறிந்த வல்லுநர்களும் கிடையாது.
- அரசின் இதரத் துறைகளின் செயல்பாடுகளும் இதே மாதிரிதான்.
- இருப்பினும், காரைக்கால் மாகாணத்தில் பணிபுரிந்த 4-5 ஆங்கில அதிகாரிகளுக்கு (ஐரோப்பியர்) ஏராளமான சம்பளம், இதர படிகள் வழங்கப்பட்டு வந்துள்ளன.

ஆகவே, அரசு இயந்திரத்தை மீண்டும் உரிய முறையில் இயக்கி வைக்க, பிரெஞ்சிந்திய அரசு மாபெரும் முயற்சிகள் எடுக்க வேண்டியிருந்தது.



# 3

# சுங்கச்சாவடி

ஆங்கிலேயர்களிடமிருந்து மீண்ட காரைக்கால் பகுதியிலும், மற்றும் புதுச்சேரி, மாயே, ஏனம், சந்திரநகர் போன்ற இதர பிரெஞ்சிந்தியப் பகுதிகளிலும் உழவுத்தொழிலும், வாணிபமும், தொழில்களும் புத்துயிர் பெற்று மீண்டும் கிளர்ந்தெழத் தொடங்கின. இதனைக் காணச் சகியாத ஆங்கில அரசு பிரெஞ்சிந்தியாவின் ஒவ்வொரு பகுதியைச் சுற்றிலும் சுங்கச்சாவடி அமைத்தது.

ஆகவே, 1817 மார்ச்சு 1 முதல் காரைக்கால் மாகாணத்தைச் சுற்றிலும் சுங்கச்சாவடி அமைத்து, இங்கிருந்து வெளியேறும் பொருட்களுக்கும், உள்ளே வரும் பொருட்களுக்கும், 16% சுங்கவரி வசூலிக்கத் தொடங்கியது பிரிட்டிஷ் இந்திய அரசு.

இது 1670இல், ஔரங்கசீப்புடன் பிரெஞ்சுக்காரர்கள் செய்துகொண்ட ஒப்பந்தத்திற்கும், 1814 மே 30இல் நடந்த பாரீஸ் ஒப்பந்தத்திற்கும் முரண்பாடு உள்ளது.

பிரான்சு நாட்டு அக்கால மன்னர் “18ஆவது லூயி”[1] ஆங்கிலேயர்களுடன் பகைத்துக் கொள்ள விரும்பவில்லை. ஆகவே, புதுச்சேரியிலிருந்த குவர்னரால் சுங்கச்சாவடி அமைப்பைத் தடுத்து நிறுத்த முடியவில்லை.

அக்காலத்தில் பிரான்சில் ஆட்சி நடத்தியவர்கள் வருமாறு:

1815 - 18ஆவது லூயி

1824 - 10ஆவது ஷார்ல்

1 *Jacques WEBER - Pondichery et Comptoirs de I'Inde apres Dupleix - DENOEL, Paris - 1996 - P. 26-27*

1830 - லூயி ஃபிலிப்
1848 - 2ஆவது குடியரசு
1852 - இரண்டாவது பேரரசு (2e EMPIRE) மாமன்னன் 3ஆவது நெப்போலியன்
1870 - 3ஆவது குடியரசு (III Republique)



6 : 18ஆவது லூயி, பிரான்ஸ் மன்னன் 1815 - 1824

இருப்பினும், "வல்லவனுக்கு வல்லவன் வையகத்துண்டு" என்றபடி குவர்னர் துய்ப்புய்யும், ஒரு மாற்றுத் திட்டம் தீட்டினார். 1817 சூன் 1 முதல் பிரெஞ்சிந்தியத் துறைமுகங்களை, சுங்கமற்றத் துறைமுகங்களாக (Free Port) பிரகடனப் படுத்தினார்! சொல்வானேன்? அந்த தேதி முதல் காரைக்கால் ஒரு குட்டி சிங்கப்பூராக மாறத் தொடங்கியது.



7 : 3 ஆவது நெப்போலியன் பிரான்ஸ் பேரரசன் 1852-1870

சுங்கமற்றத் துறைமுகமான காரைக்காலுக்கு வெளியூர்க் கப்பல்கள் பெருமளவில் வரத் தொடங்கின. ஏற்றுமதி, இறக்குமதி பன்மடங்கு பல்கியது! நாட்டில் தொழில் வளமும், வேலைவாய்ப்பும், வேளாண்மையும் தலைதூக்கின.

அரிசி, துணிவகைகள், எண்ணெய், தேங்காய் போன்றவை பெருமளவில் ஏற்றுமதியாயின.

பிரான்சு, ஜப்பான், சிங்கப்பூர், சீனா, சிலோன் போன்ற நாடுகளிலிருந்து தேவையான பொருட்களும், அத்துடன் ஏராளமான ஆடம்பரப் பொருட்களும் இறக்குமதியாயின.

அவைகளில் ஜப்பான் சில்க் துணிகள், கைக்கெடிகாரங்கள், பேனா, சைக்கிள், வாசனைத் திரவிய வகைகள், மதுபான வகைகள்,

தங்கம், வெள்ளி, வைரம், சீன வெடிகள், மத்தாப்பு முதலியன குறிப்பிடத்தக்கவை.

குறிப்பு : அக்காலத்தில் ஒரு ரூபாயுடன் காரைக்கால் சென்று, 1 சில்க் வேட்டி, 1 சில்க் சட்டை, 1 சில்க் துண்டு வாங்கிக்கொண்டு, அத்துடன் 1 வடையும், காபியும் சுவைத்துவிட்டு வீடு திரும்புவார்களாம்!

- ஒரு தீபாவளியின்போது சீன வெடிக்கட்டு ரூபாய்க்கு 96 விற்றதாம்!

**கள்ளக்கடத்தல்**

எல்லாவற்றிற்கும் மேலாக, இங்கிருந்து பூஜி சில்க், கிரேப் சில்க் துணிகள், கெடிகாரம், மதுபானம், தங்கம் போன்ற இறக்குமதியான பொருட்கள் கள்ளக்கடத்தலாக அண்டை பிரிட்டிஷ் இந்தியாவுக்குத் திருட்டுத்தனமாக எடுத்துச் சென்று விற்பனை செய்து அதனால் பெருந்தனக்காரர்கள் ஆனவர் பலர்! அவர்களிடம் ஆயிரக்கணக்கான பணியாட்கள்! அவர்களுக்கு நல்ல வருமானம்!! இதனால் ஊரில் பணப்புழக்கம் அதிகரித்தது. வாணிபமும் உச்சக்கட்டத்தை அடைந்தது.

கள்ளக்கடத்தல் தொழில் புரிந்து பெரும்பணம் ஈட்டும் நோக்கில் ஏராளமானோர் அண்டை பிரிட்டிஷ் இந்தியாவிலிருந்து இங்குக் குடியேறினார்கள் ( IMMIGRATION ). மக்கள் தொகை ஏறிக்கொண்டே போயிற்று! கணிசமாக உயர்ந்தது! "வந்தாரை வாழவைக்கும் சிங்காரக் காரைக்கால்" என்ற சொற்றொடர் அக்காலத்தில் ஏற்பட்டதாகக் கூட இருக்கலாம்!

# நாணயங்களும் அளவை முறைகளும்

காரைக்கால் பிரதேசத்தில் அக்காலத்தில் வழக்கிலிருந்த நாணய மாற்று முறைகளும் அளவை முறைகளும்:

**1 . நாணயமாற்று முறை**

| PAGODE<br>பகோடா | ROUPIE<br>ரூபாய் | FANON<br>பணம் | CACHE<br>காசு | FRANC<br>ஃப்ரான் |
|---|---|---|---|---|
| 1 | 3½ | 28 | 560 | 8, 40 |
| | 1 | 8 | 160 | 2, 40 |
| | | 1 | 20 | 0, 30 |
| | | | 1 | 0, 015 |

குறிப்பு : ஃப்ரான் [F] என்பது பிரான்சு நாட்டு நாணயம்.

**2. அரிசி/நெல் அளவை முறை**

| Garce<br>கார்ஸ் | கலம் | மரக்கால் | படி | மாகாணி | Litre<br>லிட்டர் |
|---|---|---|---|---|---|
| 1 | 125 | 1500 | 6000 | 4800 | 5238,996 |
| | 1 | 12 | 48 | 586 | 41,911 |
| | | 1 | 4 | 52 | 3',492 |
| | | | 1 | 8 | 0',873 |
| | | | | 1 | 0,109 |

குறிப்பு : லிட்டர் / Litre என்பது மெட்ரிக் அளவு முறை- பிரான்சு நாட்டில் உள்ளது. 1 படி = 0.873 லிட்டர்

அக்கால அகவிலை

1 கார்ஸ் அரிசி விலை 200 F அதாவது 1 கலம் அரிசி விலை- 1 F. 6 அதாவது 66 காசுகள்

## 3. எண்ணெய் அளவு முறை

| Legre<br>லேக்ர் | Velte<br>வெல்த் | Gallon<br>காலன் | Pot<br>தோண்டி<br>கலயம் | Serre<br>சேர் | Litre<br>லிட்டர் |
|---|---|---|---|---|---|
| 1 | 75 | 150 | 600 | 1200 | 563.6832 |
| | 1 | 2 | 8 | 16 | 7.5158 |
| | | 1 | 4 | 8 | 3.7578 |
| | | | 1 | 2 | 0.93947 |
| | | | | 1 | 0.46975 |



# 4

# உப்பு உற்பத்தி[1]

காரைக்கால் பகுதியில் உப்பு உற்பத்தித் தொழில் நல்ல வருமானத்தை அளித்துவந்தது. காரைக்கால் உப்பளங்கள் தனிச்சிறப்பு வாய்ந்தவை.

இங்கு விளையும் உப்புக்கு அண்டை மாகாணங்களிலும், கடலோர நகரங்களிலும் நல்ல வரவேற்பு இருந்தது.

திருநள்ளாற்றுத் தர்ப்பாரண்யேசுவரர் கோவில் கல்வெட்டொன்றில், காரைக்கால் உப்பு உற்பத்தியைப் பற்றிய தகவல் ஒன்று நம்மை மெய்சிலிர்க்க வைக்கிறது. அக்கல்வெட்டு விவரம் வருமாறு :

நான்காம் சடையவர்மன் சுந்தரபாண்டியன் காலம் - கி.பி. 1323 - ஆண்டறிக்கை எண். 454 (1965-66)[2]

செய்தி : திருநள்ளாற்றுடையார்க்கும் (நள்ளாறன்), நாடகமாடும் பெருமானுக்கும் (நடராஜர்), நாடுடைய நாயகப் பெருமானுக்கும் (தியாகராசர்), மார்கழி மாதத்துத் திருவாதிரை நாளில் அபிஷேகம் செய்யவும், உலா எழுந்தருளச் செய்யவும், திருவமுது, படையல் சாத்துப்படி உள்ளிட்ட தேவைகளுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டது. காரைக்கால் உப்பளத்தில் இக்கோயிலுக்குச் சொந்தமான தரிசு நிலத்தின் ஒரு துண்டத்தையும், ஒரு கேணியையும் திருத்தி உப்பு விளைவித்து, அவ்வுப்பைப் புறநாட்டில் விற்று அதனால் வரும் முதலைக் கொண்டு மேற்கூறிய அறச்செயல்கள் நிகழ்த்தப் பெற வேண்டுமென்று கோயில் தானத்தார்களுக்கு உத்தரவிடப் பெற்றது.

---

1 *Jacques WEBER - Pondichery et Comptoirs de I'Inde apres Dupleix - DENOEL, Paris - 1996-P.28*

2 நன்றி - வில்லியனூர் ந. வேங்கடேசன், காரைக்கால் பகுதியில் கல்வெட்டுக்கள், சேகர் பதிப்பகம், சென்னை, பக். 222.

ஆக, தானத்தார்கள் (ஸ்தானிகர்கள்) கோவில் திடலின் ஒரு துண்டத்தில் (சிறு பகுதியில்) உப்பளம் அமைத்து அதன் வருவாயைக் கொண்டு இம்மாபெரும் அறச்செயலைச் செய்துள்ளனர் என்றால் காரைக்கால் பகுதி உப்பளங்களின் வளம் எப்படி இருந்திருக்கும் என்பது தெரிகிறதல்லவா?

காரைக்கால் கடலோர உப்பளங்கள், இம்மாகாணத்தின் பொருளாதாரத்திற்கும், வேலைவாய்ப்பிற்கும் ஆணிவேராக அமைந்திருந்தது. அதன் விவரம் வருமாறு :

| | | |
|---|---|---|
| வாஞ்சியூர் | - | 2100 பாத்திகள் |
| அக்கரைவட்டம் | - | 1000 பாத்திகள் |
| பூவம் | - | 300 பாத்திகள் |

( ஆதாரம் : *Catalogue Gaudart 1824* நவ.4 )

இந்நிலையில் 1815 மார்ச் 7இல், பிரான்சுக்கும், இங்கிலாந்துக்கும் இடையே நடந்த இலண்டன் ஒப்பந்தப்படி :

காரைக்கால், புதுச்சேரியில் விளையும் உப்பு முழுவதையும், (உள்ளூர் உபயோகம் நீங்கலாக) ஒரு நியாயமான விலைக்கு (?) ஆங்கிலேயர்கள் வாங்கிக் கொள்வார்கள்.

அத்துடன் ஆண்டொன்றிற்கு 2 இலட்சம் மணங்கு உப்பு வங்காளத்திற்கு விற்கும் தனியுரிமையையும் பிரெஞ்சிந்தியா இழந்துவிட வேண்டும்.

இவைகளுக்கு ஈடாக பிரிட்டிஷ் அரசு பிரான்சுக்கு (பாரீசுக்கு) ஆண்டுதோறும் 4 இலட்சம் ரூபாய் மானியமாகக் கொடுத்துவிடும்.[3]

சுருங்கக்கூறின், இவ்வொப்பந்தம் காரைக்கால் உப்பளங்களில் விழுந்த பேரிடியாகும்!

---

3 இந்த மான்யம் 4 இலட்சம் ரூபாயும் பாரீஸ் சென்று விடுவதால், அது பிரெஞ்சிந்தியாவிற்குத் திரும்புவதில்லை. இதனால் பண நெருக்கடி!

இதிலும் திருப்தியடையாத பிரிட்டிஷ் இந்திய அரசு, புதுச்சேரி குவர்னர் "துய்ப்புய்"யுடன் 1818 மே 13இல் மற்றொரு ஒப்பந்தம் செய்துகொண்டது. அதன்படி,

காரைக்கால் / புதுச்சேரி உப்பளக்காரர்கள் இந்த தேதியிலிருந்து உப்பு உற்பத்தி செய்வது தடுக்கப்படுகிறது. அதற்கு ஈடாக அவர்கள் ஆண்டொன்றிற்கு 22400 ரூபாய் மான்யம் பெற்றுக் கொள்வார்கள்.

இவ்வொப்பந்தத்தால் காரைக்கால் புதுச்சேரியில் உப்புத்தொழிலும் உப்பளங்களும் மூடப்பட்டன. உப்பளக்காரர்களும், உப்பளத்தொழிலாளர்களும் பிச்சைக்கார நிலைக்குத் தள்ளப்பட்டனர்.

இதனால் காரைக்கால் வருமானத்திலும், பிரெஞ்சிந்திய வரவு - செலவுத் திட்ட வருவாயிலும் பேரிழப்பு ஏற்பட்டது.



# 5

# கஞ்சா விற்பனை[1]

பிரான்சுக்கும், இங்கிலாந்துக்கும் ஏற்பட்ட பழைய ஒப்பந்தப்படி, பிரெஞ்சிந்தியாவில் கஞ்சா / அபீன் உற்பத்தி செய்தல் கூடாது.

ஈடாக, பிரிட்டிஷ் இந்தியா ஆண்டுதோறும் 300 பெட்டி கஞ்சா / அபீனை உற்பத்தி விலையில் பிரெஞ்சிந்தியாவுக்குக் கொடுத்துவிடும்.

ஆனால் 1815இல் ஏற்பட்ட புது ஒப்பந்தப்படி, மேற்கண்ட 300 பெட்டி கஞ்சா / அபீனை, உற்பத்தி விலையில் கொடுக்காமல், சந்தை விலையில் மட்டுமே கொடுப்பதாக முடிவாகியது. இதனால் பிரெஞ்சிந்தியாவுக்குப் பெரும் இழப்பு ஏற்பட்டது.

உதாரணமாக 1917இல், 1 பெட்டி கஞ்சா **உற்பத்தி விலை** ரூ. 300 மட்டுமேயாகும். ஆனால் **சந்தை விலை** ரூ. 3917 ஆகும். இதனால் இழப்பு (3917-300) x 300 = 10,85,100 ரூபாய். அதாவது ஏறத்தாழ 11 இலட்ச ரூபாய் பிரெஞ்சிந்தியாவுக்கு இழப்பு!

குறிப்பு : உப்பு விற்பனையாலும், கஞ்சா விற்பனையாலும் ஏற்பட்ட நெருக்கடி, பிரெஞ்சிந்தியா வருமானத்தையே நிலைகுலைய வைத்துவிட்டது.

---

1 *Jacques WEBER - Pondichery et Comptoirs de l'Inde apres Dupleix - DENOEL, Paris - 1996-P.29*

# 6

# மக்கள் நிலை

காரைக்கால் பகுதி மக்கள் நல்லவர்கள், சாந்த குணமுடையவர்கள், இறையன்பு பூண்டவர்கள். ஆனால் அவர்களின் சமயச் சடங்குகளிலும், பழக்க வழக்கங்களிலும் (மாமூல்) கை வைத்தால் புயலாக மாறிவிடுவார்கள் எனப் பல மேனாட்டு வரலாற்று ஆசிரியர்கள் கூறியுள்ளனர். இஃது இவ்வாறிருக்க, காரைக்கால் மக்கள் தொகை, 19 ஆம் நூற்றாண்டு தொடக்கத்திலிருந்து கிடுகிடு என உயர்ந்து கொண்டே சென்றது. அட்டவணையைப் பார்ப்போம்.[1]

**இந்தியர்கள்**

| ஆண்டு | மக்கள் தொகை | பிறப்பு | இறப்பு |
|---|---|---|---|
| 1823 | 31,875 | | |
| 1824 | 33,176 | | |
| 1833 | 41,130 | | |
| 1839 | 49,193 | 2,540 | 342 |
| 1840 | 50,938 | 5,432 | 723 |
| 1841 | 52,629 | 2,996 | 1,154 |
| 1842 | 54.251 | 6,734 | 1,818 |
| 1843 | 43,257 | 7,883 | 2,620 |
| 1844 | 56,840 | 4,499 | 1,629 |
| 1845 | 57,998 | 4,600 | 1,792 |
| 1846 | 59,309 | 4,972 | 1,174 |
| 1847 | 59,807 | 2,790 | 666 |
| 1850 | 57,242 | | |
| 1854 | 49,625 | | |
| 1880 | 92,599 | | |

1 *Memoire de Maitrise - Aix-en- Provence 1971 - P. 20, 21&22 - (Thanks - Nallam Clinic - Mini Conference Hall Library)*

**ஐரோப்பியர்**

| ஆண்டு | ஐரோப்பியர் | சட்டைக்காரர்கள் |
|---|---|---|
| 1839 | 43 | 71 |
| 1840 | 55 | 72 |
| 1841 | 56 | 83 |
| 1842 | 56 | 79 |
| 1843 | 47 | 101 |
| 1844 | 62 | 100 |

சராசரி மக்கள் தொகை விகிதம் (Density of Population) பின்வருமாறு :

| | |
|---|---|
| 1823 | 195 |
| 1833 | 251 |
| 1843 | 264 |
| 1850 | 350 |
| 1880 | 564 |

## இம்மக்கள் பெருக்கத்திற்கு முக்கிய காரணம்

பிறப்பு விகிதம், இறப்பு விகிதத்தை விட அதிகம்.

அக்காலங்களில் குடும்பக் கட்டுப்பாடு கிடையாது.

ஏராளமான பேர் பக்கத்து பிரிட்டிஷ் இந்தியாவிலிருந்து இங்குக் குடியேறியது. (இங்கு வாழ்க்கை வசதி அதிகம், சம்பாதிப்பதும் எளிது!)

1839இல் 300 நெசவாளர் குடும்பங்கள் திருமலைராஜன் பட்டினத்தில் குடியேறினர். அவர்களின் அமைதியான பண்பாடு அனைவரையும் கவர்ந்தது. எந்த எதிர்ப்பும் இல்லை!

## காலரா கொள்ளை நோய் [1]

இம்மக்கள் பெருக்கத்திற்கிடையே காலரா, கொள்ளை நோய் தனது கைவரிசையைக் காட்டிக் கொண்டிருந்தது. டாக்டர் கொதினோ[1] கணக்கின்படி, 1832லிருந்து 1849 வரை இந்நோய்க்கு 2,519 பேர் பலியாகியுள்ளனர்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1832 | - | 313 பேர் | 1843 | - | 152 பேர் |
| 1837 | - | 1,005 பேர் | 1845 | - | 207 பேர் |
| 1838 | - | 84 பேர் | 1846 | - | 171 பேர் |
| 1841 | - | 136 பேர் | 1848 | - | 167 பேர் |
| 1842 | - | 283 பேர் | 1849 | - | ஒருவர் |

## வேலை வாய்ப்புகள்

விவசாயம் மற்றும் அதனைச் சார்ந்த தொழில்களில் பெரும்பாலோர் ஈடுபட்டனர். மற்ற ஏழைமக்கள் (பெரும்பாலும் பெண்கள்) நெல்லை உரலில் குத்தி அரிசியாக்கும் வேலையில் (வலியன் குத்துதல்) ஈடுபட்டிருந்தனர். அத்துடன் வேறு சில தொழில்கள், குலத்தொழிலாகவே நடைபெற்றன.

தச்சு வேலை
இரும்பு, பித்தளை, செம்பு வேலை
நகை தயாரித்தல்
மட்கலன்கள் (பானை, சட்டி...) செய்தல்
கூடை, முறம் பின்னுதல்
எண்ணெய் ஆலைகள்
நெசவுத் தொழில்
வீடுகட்டும் தொழில்
கோவில் கட்டுமானம் - கல்தச்சர்கள்
மீனவர்கள் (மீன்பிடித்தல்)
கடல்வணிகம், ஏற்றுமதி - தோணி, வத்தல், படகு ஓட்டுதல்

1 *Dr. GODINEAU - quoted by Jacques WEBER - Un Etablissement Francais en Inde - Karikal 1832 - 1849 - memorie de maitrise - Aix-en-Provence 1971 - P-34 (thanks - Nallam Clinic - Mini Conference Hall Library)*

**சமய குல இணக்கம்**

இந்தியாவில் வேறெங்கும் காணமுடியாத அளவிற்கு, காரைக்காலிலும் பிரெஞ்சிந்தியாவிலும் சமய குல இணக்கம் நிலவியது.

**முஸ்லீம்கள்**

காரைக்காலில், இங்கு வந்த ஐரோப்பியர்களிடம், முஸ்லீம்கள் நல்ல உறவு வைத்திருந்தனர். இந்நட்புறவிற்குக் காரணம், அவர்களிடையே நிலவிய ஒருமித்த ஒத்தக்கருத்தும், ஒருமித்த வாழ்க்கை முறையுமேயாகும்.

அதாவது :

வர்த்தகத்தால் பொருளீட்டுவது

தேவையான அனைத்து வசதிகளுடனும் வாழ்வது

மக்களிடையே ஏற்றத்தாழ்வோ, ஜாதிப்பிரிவினையோ கிடையாது.

இதுவே அவர்களின் ஒருமைப்பாட்டிற்கு அடிப்படையாகும்.

**இந்துக்கள்**

இந்துக்களுக்கு இவ்வுலக இன்பங்களைவிட மறுவுலக இன்பத்திற்கே முக்கியத்துவம் அதிகம். ஆன்மீக வாழ்வே அவர்களின் சமயவாழ்வு. இவ்வுலக வாழ்வு ஒரு மாயை என்பார்கள். ஆகவே, ஐரோப்பியர்களுக்கும் இவர்களுக்கும் எந்த ஒற்றுமையும் இல்லாமல் போய்விட்டது. மேலும், ஐரோப்பியர்களை மிலேச்சர்கள் என்றும் தீண்டத்தகாதவர்கள் என்றும் இந்துக்கள் கருதினர்.

**கிறிஸ்தவர்கள்**

கிறிஸ்தவர்களும், ஐரோப்பியர்களும் ஒரே மதத்தைச் சார்ந்தவர்கள் என்பதால் அவர்களிடையே ஒற்றுமை அதிகம். பல உதவிகளும் பெற்றனர்.

முக்கிய குறிப்பு : அன்றாட வாழ்க்கையில், இம்மூன்று மதத்தினர்களுக்கிடையே எவ்வித பகைமையும் கிடையாது! ஒன்றுபட்டே வாழ்ந்தனர்.

**மக்கள் தொகை** ( மத அடிப்படையில் )

| ஆண்டு | இந்துக்கள் | முஸ்லீம்கள் | கத்தோலிக்கர் | மொத்த மக்கள் தொகை |
|---|---|---|---|---|
| 1823 | 24762 | 5084 | 2129 | 31975 |
| 1824 | 25162 | 5084 | 2930 | 33176 |
| 1833 | 30075 | 5011 | 4044 | 41130 |
| 1854 | 37618 | 6829 | 5024 | 49625 |
| 1880 | 63973 | 14825 | 13801 | 92599 |

**மக்கள் விகிதாச்சாரம்** ( மத அடிப்படையில் )

| ஆண்டு | இந்துக்கள் | முஸ்லீம்கள் | கிறிஸ்தவர்கள் |
|---|---|---|---|
| 1823 | 77.4% | 15.5% | 6.9% |
| 1854 | 75.8% | 13.7% | 10.4% |
| 1880 | 69% | 16% | 14.9% |

## முஸ்லீம்களிடையே உட்பிரிவு

அனைத்துலகிலும் நிலவுவது போல், முஸ்லீம்களுக்கு இடையே இரண்டு பிரிவுகள் உண்டு.

1. சன்னி முஸ்லீம் (Sunny)
2. ஷியா முஸ்லீம் (Shia)

ஆனால் இப்பிரிவினையைக் காரைக்கால் பகுதி முஸ்லீம்கள் பாராட்டுவதில்லை.

ஆதாரம் - நேர்காணல் - திரு.தீன், எழுத்தாளர், திருநள்ளாறு.

இருப்பினும் காரைக்கால் மேல்பகுதி பள்ளிவாசலுக்குக் கீழ்ப்பகுதி முஸ்லீம்கள் செல்லமாட்டார்கள். அதே மாதிரி, கீழ்ப்பகுதி பள்ளிவாசலுக்கு மேல்பகுதி முஸ்லீம்கள் செல்ல மாட்டார்கள்.

இதில் கடல் வணிகத்தில் ஈடுபட்ட முஸ்லீம்கள் மரைக்காயர் என அழைக்கப்பட்டனர். வெற்றிலைக் கொடிக்கால் தொழிலில் ஈடுபட்டவர்கள் இராவுத்தர் என அழைக்கப்பட்டனர்.

(ஆதாரம் - டாக்டர் கொதினோ)

## கிறிஸ்தவர் சமயத்தினர்களுக்கிடையே உட்பிரிவு

1. கத்தோலிக்க கிறிஸ்தவர்கள்
2. புரோஸ்தெஸ்தான் கிறிஸ்தவர்கள்

இதனிடையில், கத்தோலிக்க கிறிஸ்தவர்களுக்கிடையே மறைமுகமாக ஜாதிப்பிரிவினையுண்டு. (இந்துக்களாக இருந்தவர்கள் அல்லவா?) திருமணங்கள் அவரவர்கள் குலத்தில் மட்டுமே நடைபெறும். அத்துடன் மாதா கோவிலில், கீழ்ஜாதியிலிருந்து வந்த கிறிஸ்தவர்களுக்குத் தனியிடம் ஒதுக்கப்பட்டிருந்தது. இதனை எதிர்த்துப் பல போராட்டங்கள் நடந்துள்ளன!

1839இல் காரைக்கால் மாதாகோவிலில், ஐரோப்பிய வேதபோதகருக்கும் உள்ளூர் கிறிஸ்தவர்களுக்கும் நடந்த கலகத்தில், மாதாகோவில் சூறையாடப்பட்டது. தாமஸ் என்ற ஆங்கில வேதபோதகர் தரங்கம்பாடியிலிருந்து வரவழைக்கப் பட்டார். விரைவில் அவர் விரட்டப்பட்டார். நிர்வாகி லெஸ்பெர்தா முயன்று சமாதானம் செய்துவைத்தார்.

## 1844இல் முஸ்லீம் - கிறிஸ்தவ தகராறு

காரைக்கால் கந்தூரி விழாவின்போது அலங்கரிக்கப்பட்ட கூடு மாதாகோவிலுக்கு எதிரே சென்றது. இது வழக்கத்திற்கு (மாமூல்) மாறானது. கிறிஸ்தவர்கள் ஒன்று திரண்டு எதிர்ப்பு தெரிவித்துப் பெரும் கிளர்ச்சி செய்தனர். நிர்வாகி தலையிட்டு அமைதிப்படுத்தினார். பின்னர் நட்புறவுதான்!

## 1829இல் இந்து - முஸ்லீம் தகராறு

1829இல் காரைக்கால் கந்தூரி உற்சவத்தின்போது, இந்து - முஸ்லீம்களுக்கிடையே சில தகராறுகள் ஏற்பட்டன. இதன் விவரம் கிடைக்கவில்லை. ஆனால் இதுவே முதல் முறையென வரலாறு கூறுகிறது. இதனால், 1829 மார்ச் 6இல் இவ்விரு மதத்தினர்களுக்கிடையே ஓர் ஒப்பந்தம் ஏற்பட்டது. இதில் முஸ்லீம் மதத் தலைவர்களும், இந்து மத ஜாதித் தலைவர்களும் கையெழுத்திட்டனர்.

இதன்படி :

1, 120 ஆண்டுகள் வாழ்ந்த மகான் மஸ்தான் சாஹிப் வலியுல்லாவின் ஆண்டு விழாவாகக் கொண்டாடப்படும் கந்தூரி பெருவிழாவிற்கு இந்துக்கள் ஒரு சிறு இடையூறுகூடக் கொடுக்கக்கூடாது

2. அதேமாதிரி, இந்துக்களின் மத விழாக்களிலும், முஸ்லீம்கள் எந்தவித இடையூறும் செய்தல் கூடாது

என்பதாகும்.

**வெற்றிலைச் சண்டை**

இப்பகுதியில் அம்பகரத்தூரில் மட்டுமே இராவுத்தர்கள் கொடிக்கால் வைத்து வெற்றிலை பயிரிட்டார்கள். இந்த உயர்தர வெற்றிலை மாகாணம் முழுவதிலும் விற்பனை செய்யப்பட்டது.

பிரிட்டிஷ் இந்தியாவில் விலையேற்றம் காரணமாக, வெற்றிலை பெருமளவில் அங்கு அனுப்பப்பட்டது. இதனால் காரைப் பகுதியில் வெற்றிலைப் பஞ்சம்! மக்கள் எழுச்சி ஏற்பட்டது. காரைக்கால் நிர்வாகி எவ்வளவோ கேட்டுக் கொண்டும் இராவுத்தர்கள் இணங்கவில்லை. பின்னர் மக்கள் போராட்டத்தில் இறங்கினர். (அரிசியை விட வெற்றிலை அவர்களுக்கு அவ்வளவு முக்கியம்!!)

காவல்துறையின்மூலம் இராவுத்தர்கள் மிரட்டப்பட்டனர். உடனே இராவுத்தர்கள் அம்பகரத்தூரிலுள்ள தொழிலை விட்டுவிட்டு, அண்டை பிரிட்டிஷ் இந்தியாவுக்கு ஓடிவிடுவோம் என மிரட்டினார்கள். சிறிது சிறிதாக நிலைமை சீரடைந்தது!



# 7

# இந்து சமயத்தினர்

மக்களிடையே நூற்றுக்கணக்கான குலங்கள் (சாதிகள்) பெருகிவிட்டிருந்தன. அவைகளிடையே மேற்குலம், கீழ்க்குலம், தீண்டத்தகாதவர் எனப் பல பிரிவுகள்.

ஒவ்வொரு குலத்திலும் பல கோத்திரங்கள் (இக்காலத்தில் தங்கள் கோத்திரம் தெரியாதவர் பலருண்டு) - "கோத்திரம் அறிந்து பெண்ணைக் கொடு" என்பது முதுமொழி.

திருமணங்கள் ஒரே குலத்தைச் சேர்ந்தவர்களிடையே மட்டும் நடைபெறும். இதை மீறினால் கலப்புத் திருமணம் என்பர்.[1]

ஆகவே, இங்கு நிலவிய குலப்பிரிவினை மேனாட்டினருக்கு ஒரு புரியாத புதிராகவே காட்சியளித்தது. இத்துறையில் பலர் ஆய்வு செய்துள்ளனர்.

1. கொர்தியே (Cordier) எனும் வரலாற்றறிஞர் (இவர் காரைக்கால் நிர்வாகியாகவும் இருந்துள்ளார்) கணக்கெடுப்பு நடத்தி இந்துக்களிடையே 58 குலங்கள் இருப்பதாகக் கூறுகிறார்.

அவைகளில் அதிக எண்ணிக்கையிலுள்ள சில குலங்களைக் கீழே காண்போம் (1824இல்)

| | | |
|---|---|---|
| பிராமணர் | - | 1501 |
| வெள்ளாழர் | - | 7169 |
| அகமுடியர் | - | 703 |
| கவரே (நாயுடு) | - | 1392 |

1 வேறு குலத்துடன் திருமணஞ் செய்தல் கூடாது என்பதால், காரைக்கால் பல திருமணங்களில் மாப்பிள்ளை / மணப்பெண் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்களாக இருப்பர்.

| | | | |
|---|---|---|---|
| யாதவாள் | - | 778 | |
| செட்டியார் | - | 232 | |
| கோமுட்டி | - | 178 | |
| ரெட்டியார் | - | 175 | |
| கைக்கிளவ முதலியார் | - | 1378 | |
| சேணியர் | - | 369 | |
| பள்ளி | - | 3860 | |
| வன்னியர் | - | 371 | |
| கம்மாளர் | - | 896 | |
| சாணார் | - | 690 | |
| கொசவர் (குயவர்) | - | 163 | |
| பட்டணவர் | - | 255 | மீனவர் |
| கரையர் (கரையாளர்) | - | 220 | மீனவர் |
| செம்படவர் | - | 71 | மீனவர் |
| பரவர் | - | 54 | மீனவர் |
| நாவிதர் | - | 301 | |
| வண்ணார் | - | 294 | |
| கள்ளர் | - | 175 | |
| குறவர் | - | 12 | |
| ஒட்டர் | - | 78 | |
| வள்ளுவர் | - | 95 | |
| வலங்கா (ஆதிதிராவிடர்) | - | 4197 | |
| பள்ளர் | - | 543 | |
| கூத்தாடி | - | 2 | |

**குறிப்பு - 1**

பிராமணர்களோடு கோவில் அருச்சகர்களையும் இணைத்து 1501 என்று கணக்கெடுத்துள்ளனர் : ஆனால், இவர்கள் வேறு, அவர்கள் வேறு.

"கோவில் அருச்சகத் தொழிலுக்கு உரிமையுடையவர்கள் ஆதிசைவ அந்தணர்கள் அல்லது குருக்கள் ஆவார்கள். ஏனைய பிராமணப் பிரிவினர் இவர்களுடன் உணவுக்கலப்பும், இரத்தக்கலப்பும் கொள்ளுவதில்லை. ஆதிசைவரின் கோத்திர

சூத்திரங்களுக்கும், ஏனைய பிராமணரின் கோத்திர சூத்திரங்களுக்கும் ஆழ்ந்த வேறுபாடு உண்டு.

பிராமணர் அல்லாத சைவக் குலத்தினருக்குச் சிவதீட்சை கொடுக்கும் உரிமை ஆதிசைவருக்கே உண்டு.''[1]

**குறிப்பு - 2**

வெள்ளாழக் குலத்தினரிடையே பல பிரிவுகள் உண்டு. சுருங்கக் கூறின்,

1. தொண்டை மண்டல வெள்ளாழர் -

தொண்டை மண்டலப் பகுதியைச் சேர்ந்தவர். பெண்ணையாற்றிற்கு வடக்கே, இக்குலத்தினரிடையே இரு பிரிவுகள் :

அ. கீழ்நாட்டார் ஆ. மேல்நாட்டார்

இக்குலத்தினரிடையே மற்றொரு பிரிவு :

"கொண்டைக்கட்டி வெள்ளாழர்"

2. சோழிய வெள்ளாழர் - சோழ நாட்டிலுள்ளவர்கள்

3. கார்காத்த வெள்ளாழர் - பாண்டிய நாட்டைச் சேர்ந்தவர்கள்.

4. துளுவ வெள்ளாழர் - துளுவ நாட்டைச் சேர்ந்தவர்கள். இக்குலத்தினரிடையே உட்பிரிவு :

அ) புது முதலியார்
ஆ) பொன்னேரியார்
இ) கருங்குழி வெள்ளாழர்
ஈ) உள்ளூர் வெள்ளாழர்

( நன்றி : ஆதாரம் - *Jules Vinson - Indianiste* )

1 நன்றி : ஆதாரம் - தமிழக வரலாறு - மக்களும் பண்பாடும் - டாக்டர் கே கே.பிள்ளை - உலகத் தமிழாராய்ச்சி நிறுவன வெளியீடு - சென்னை 113 - 2004 பக். 491

**வெபேர் ஆய்வு**

வெபேர் (WEBER)[1] எனும் வரலாற்றாசிரியர் குலங்களைத் தொழில் அடிப்படையில் பிரித்துக் கீழ்க்கண்டவாறு கூறியுள்ளார். அதாவது -

| | |
|---|---|
| வெள்ளாழர் | - வேளாண்மைத் தொழில் பெரும்பாலானவர் மிராசுதார். |
| ரெட்டி | - வேளாண்மை - பெரும்பாலானவர் மிராசுதார். |
| கவரே | - காவல்துறை - வைரவியாபாரம், |
| யாதவாள் | - பால் வணிகம் - சிலர் மிராசுதார் |
| செட்டி | - வாணிபம் - வங்கி - ஏற்றுமதி, இறக்குமதி |
| கோமுட்டி | - வாணிபம் - மிகுந்த ஆச்சாரம் |
| கணக்கர் | - கணக்கப்பிள்ளை |
| சேனைக்கொடை | - பழ வியாபாரிகள் |
| மலையமான் | - வேளாண்மை, வாணிபம் (கடை) |
| வாணிய செட்டியார் | - எண்ணெய் வணிகம், செக்கில் எண்ணெய் தயாரிப்பு. |
| சேணியர் | - துணி நெய்தல், துணி வணிகம் |
| வன்னியர் | - வேளாண்மை |
| கம்மாளர் | - இவர்களில் 5 பிரிவுகள் |
| தட்டான் | - தங்க வேலை (தொழில்) |
| கொல்லர் | - இரும்பு வேலை |
| தச்சர் | - மரவேலை |
| கன்னார் | - செம்பு வேலை |
| சிற்பி | - கருங்கல் சிற்பி, உலோக வார்ப்பு சிற்பி |
| சாணார் | - தென்னை மரத்திலிருந்து கள் இறக்குபவர். (பனைமரம், ஈச்ச மரத்திலிருந்தும் கள் இறக்குவது உண்டு) |

1 நன்றி - *J. WEBER - Pondichery - Editon DENOEL, Paris 1995 - Pages 36-39*

| | | |
|---|---|---|
| சத்தானி | - | பூ வணிகம், பூமாலை கட்டுதல். |
| போய் (Boy) | - | பல்லாக்குத் தூக்குபவர். |
| கொசவர் | - | மண்பாண்டம் செய்பவர் |
| மீனவர் | - | மீன்பிடித்தொழில் பட்டணவர், செம்படவர் எனவும் அழைக்கப் படுவர் |
| பனிட்சவர் | - | இறந்தவர்கள் வீட்டில் மதச் சடங்குகள் செய்பவர். |
| நாவிதர் / அம்பட்டர் | - | முடி திருத்தம் செய்பவர். |
| வண்ணார் | - | துணிவெளுக்கும் தொழில் (லாண்டரி) |
| சக்கிலியர் | - | செருப்பு தயாரித்தல் செருப்புத் தைத்தல் |
| குறவர் | - | காடை, கவுதாரி, வேட்டையாடுதல், மூங்கில் முறம், சல்லடை, தட்டி பின்னி விற்பவர்கள். |
| சணப்பர் | - | சணல் சாக்கு தயாரிப்பவர், பழுதுபார்ப்பவர். |
| தொம்பர் | - | பாம்பாட்டி acrobate |
| நோக்கர் | - | வைத்தியர் |
| வில்லி | - | கை, கால்களை அமுக்கி வலியை நீக்குபவர். |
| வேடர் | - | வில், அம்புடன் மான் போன்ற மிருகங்களை வேட்டையாடுபவர், தேன் எடுப்பவர்கள். |
| தோட்டி | - | கழிவறை துப்புரவு செய்பவர். |
| வள்ளுவர் | - | தாழ்த்தப்பட்டோருக்கு மதச் சடங்குகள் செய்பவர் |

என்ற அடிப்படையில் குலங்களைப் பிரித்துள்ளார். (குறிப்பு : இதில் சில குலங்கள் விடுபட்டுள்ளன)

ஆகவேதான், மகாகவி பாரதியார்

***ஆயிரம் உண்டிங்கு ஜாதி - எனில்***
***அன்னியர் வந்து புகல்என்ன நீதி?***

என்று பாடினார்.

**வலங்கை - இடங்கை பூசல்கள்**

இந்துக்களிடையே வலங்கை - இடங்கை என்ற இரு பெரும் பிரிவுகள் இருந்தன. சில குலங்கள் வலங்கை பிரிவைச் சேர்ந்தவை. வேறு சில குலங்கள் இடங்கை பிரிவினர். இவ்விரு வகுப்பினரிடையே அடிக்கடி சச்சரவு ஏற்படும். உயிர்ச்சேதம், பொருட்சேதம் பெருமளவில் ஏற்பட்டுள்ளன. அப்பூசல்கள் இரு வகுப்பினர்களும் அனுபவித்து வந்த சில உரிமைகளைப் பற்றியனவேயாகும்.

இடங்கையினர் அனைவரும் தொழிலாளர்கள் - கிழக்கிந்தியக் கம்பெனி வணிகர்களுடன் தொடர்புடையவர்கள். வலங்கையினர் சுயமாகத் தொழில் செய்பவர்கள். பெரும்பாலும் மிராசுதார்கள் - இவர்கள் செல்லும்போது முன்பு தப்பட்டை அடித்துக் கொண்டும், கரண்டிகளைத் தூக்கிக் கொண்டும், மணியடித்துக் கொண்டும் நடக்க உரிமை படைத்தவர்கள். இவ்வுரிமை இடங்கையினருக்குக் கிடையாது. இதேபோன்று, இடங்கையினர் தெருப்பக்கம் திண்ணைவைத்து தூண்களுடன் வீடு கட்டும் உரிமை கிடையாது. ஆனால் வலங்கையினருக்கு உண்டு. இவ்வுரிமைகளின் தொடர்பாகவே அனைத்துக் கலவரங்களும் தொடங்கி, சில சமயம் கொலையிலும் முடிந்துள்ளன.

இதனைக் கண்ணுற்ற செயல்திறமிக்க குவர்னர் வெர்னியாக் இரண்டு சட்டங்களை வெளியிட்டு உடனடியாக அமலாக்கம் செய்தார்.

ஒன்று - 1856 நவம்பர் 5இல் பிறப்பித்த அரசாணையின்படி (Arrete) "புதுச்சேரி, காரைக்காலிலுள்ள அனைத்து வீட்டுமனை உரிமையாளர்களும், திண்ணை, தூண், மாடி கொண்ட வீடுகளை எல்லா வீதிகளிலும் தங்கள் மனையில் கட்டிக் கொள்ள முழு உரிமை அளிக்கப்படுகிறது."

இரண்டு - 1857 பிப்ரவரி 25 அரசாணையின்படி (Arrete) எல்லாத் தெருக்களிலும் எல்லாக் குலத்தினரும் நடமாட முழு சுதந்திரம் அளிக்கப்பட்டுள்ளது.

குவர்னரின் நடவடிக்கையால், வலங்கை, இடங்கை சண்டைகளும் ஓய்ந்தது. ஊரில் அமைதியும் ஏற்பட்டது. வெர்னியாக் புகழேணியின் உச்சிக்குச் சென்றுவிட்டார்.

**ஐரோப்பியர்களின் கதி என்ன?**

இந்து சமயத்திற்கு ஐரோப்பியர்களும் தீண்டத் தகாதவர்களே! அவர்களைத் தொடுவதற்கு வேதம் அனுமதிக்கவில்லை! அதுமட்டுமல்ல, இந்தியாவுக்கு வெளியே பிறந்து, குலம் இல்லாமல், சுருதி சாத்திரங்கள் தெரியாமல், இந்து தர்மத்தைப் புறக்கணித்து, மாட்டுக்கறியைத் தின்று, தீண்டாதார் வீடுகளுக்குச் செல்லும் வெள்ளைக்காரர்களைத் தொட்டால் தீட்டு ஒட்டிக் கொள்ளும்! (தலை முழுகினால்தான் தீட்டுத் தொலையும்) வெள்ளைக்காரர்களுடன் கூட உட்கார்ந்து சாப்பிடுவது பெரும்பாவம்!

அருணாசலம் சபாபதி என்பவர் வெள்ளாழர், மிகப்பெரிய கடல்வணிகர், ஐரோப்பிய வணிகர்களின் துணையுடன் பெரும்பணம் சம்பாதித்தவர், அவரிடம் பல கோடி ரூபாய் (அக்கால ரூபாய்) சொத்து, அவர் மகனுக்குத் திருமணம் - 5 நாள் ஆடம்பரத் திருமணம், அனைவருக்கும் விருந்து, செலவு 3 இலட்சம் ரூபாய்க்குமேல்.

அதே அருணாசலம் சபாபதி தனக்கு உதவிய ஐரோப்பிய வியாபாரிகளுக்கும், ஐரோப்பிய உயர்அதிகாரிகளுக்கும், பிரமுகர்களுக்கும் ஒரு விருந்து மறுநாளே ஏற்பாடு செய்தார். குவர்னர் வெர்னியாக்கையும் அழைத்தார். அவரும் வந்தார். மிகச் சிறப்பான உணவு! நாட்டியம், கேளிக்கை அனைத்தும்.

ஆனால் அருணாசலம் சபாபதி அங்கு வரவில்லை, தலையைக் காட்டவில்லை. அவருடைய நெருங்கிய நண்பர் லூய் ஷரோலுவா (ஐரோப்பியர்) என்பவர் அனைத்தையும் நிர்வகித்து நடத்தினார். அருணாசலம் சபாபதி சார்பாக அவரே

அனைவரையும் கைகொடுத்து வரவேற்றார். விருந்தினர் அனைவரும் மகிழ்ந்தனர்! குவர்னர் வெர்னியாக் உட்பட!!

இதுதான் அன்றைய நிலை!

## தீண்டத்தகாதவர்

மக்களிடையே ஒரு பகுதியினர் "தீண்டத்தகாதவர்" எனும் அமைப்பு முறை நிலவியது. இதுபோன்ற கொடுமையான பழக்கம் முற்காலத்தில், அதாவது சங்ககாலத்தில் சமூகத்தில் இருந்ததாகத் தெரியவில்லை.

**யாதும் ஊரே யாவரும் கேளிர்**

எனப் புறநானூறு கூறுகிறது. எல்லா ஊரும் எனது ஊர், எல்லா மக்களும் என் உறவினர் என்பதுதானே இதன் பொருள்?

மற்றொரு கொடுமை யாதெனில், சமுதாயத்தில் பொருளாதார வளர்ச்சிக்குத் தேவையான அனைத்துக் கடின உடலுழைப்பையும், பணிகளையும் செய்பவர்கள் பெரும்பாலும் இந்தத் "தீண்டத்தகாதவர்" எனும் தாழ்த்தப்பட்ட பிரிவினரே! அவர்களுக்குக் கிடைக்கும் பரிசுகள் - போதிய ஊதியம் இல்லை, சரியான உணவு, உடை, உறைவிடம் இல்லை, அத்துடன் அவர்களுக்கு உரிய மரியாதையுமில்லை!

## சமூகச் சீர்திருத்தங்கள்

அக்காலத்தில், அதாவது 19ஆம் நூற்றாண்டின் நடுவில், பல மனிதநேயங்கொண்ட சிந்தனையாளர்கள் இக்குலப் பிரிவினையையும், தாழ்த்தப்பட்ட மக்கள் என்ற பிரிவினையையும் எதிர்த்து, இவற்றை வேரோடு சாய்க்கப் பாடுபட்டனர். அவர்களது முயற்சி இன்று பலன் தரத் தொடங்கிவிட்டது என்பது மகிழ்ச்சியான செய்தியேயாகும்! அவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் பின்வருபவர் ஆவார்கள்:

வட இந்தியாவில்[1] இராஜாராம் மோகன்ராய், தேவேந்திரநாத் தாகூர், கேசவ சந்திரசேன், தயானந்த சரஸ்வதி, இராமகிருஷ்ண

[1] ஆதாரம் - நன்றி : "தமிழக வரலாறு - மக்களும், பண்பாடும்" டாக்டர் கே.கே.பிள்ளை - உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, பக் 498-501

பரமஹம்சர் ஆகியோர் இந்து சமயக் கோட்பாடுகளில் பல அடிப்படையான புரட்சிகரமான திருத்தங்கள் செய்தனர்.

தமிழ்நாட்டில், இராமலிங்க அடிகள் அதே காலத்தில் தோன்றிச் சமயத்துறையிலும் சமூகத்துறையிலும் பல புரட்சிகரமான மாறுதல்களைச் செய்தார். அடிகள் சமயவழக்கில் ஏற்பட்டிருந்த பல தீய சடங்குகளையும், மரபுகளையும் அறவே ஒழிக்க முயன்றார்.

புராணங்களையும், சாத்திரங்களையும், வெறும் கற்பனையென்றும், அவை அறிவு வளர்ச்சிக்கு இடப்பட்ட தளைகள் என்றும் கூறி,

**கலையுரைத்த கற்பனையே நிலையெனக் கொண்டாடும்**
**கண்மூடிப் பழக்கமெல்லாம் மண்மூடிப்போக**

என்று அவற்றின்மேல் தம் வெறுப்பைக் கொட்டினார்.

தமிழகத்தில் முதன்முதல் 'கருணையிலா ஆட்சி கருகி ஒழிக' என்னும் குரலை எழுப்பியவர் அடிகளார்தாம்!

**பிறப்பு - இறப்புப் பதிவகம்** (ETAT - Civil) : [1]

1842 மக்கள் தொகைக் கணக்கெடுப்புக்கும், வளர்ச்சித் திட்டங்கள் வகுப்பதற்கும், தேர்தல் நடந்தால் வாக்காளர் பட்டியல் தயாரிப்பதற்குமாக, பிறப்பு - இறப்புப் பதிவகம் (ETAT - Civil) ஏற்படுத்தப்பட்டது. தேவைப்படும் இடங்கள் அனைத்திலும் அலுவலகம் திறக்கப்பட்டது. ஆனால் மக்கள் இதைப் புறக்கணித்தனர்.

அவர்கள் கூறும் காரணம் விந்தையானது கீழ்ஜாதிக்காரர்கள் பதியும் அதே இடத்தில், அதே பதிவேட்டில், மேல்ஜாதிக்காரர்களும் பதிவு செய்தால் இதில் என்ன நியாயம் இருக்கிறது என்ற கேள்வியை எழுப்பினர்.

1842லிருந்து 1854 வரை, இப்பதிவகங்களில் 684 பேர்கள் மட்டுமே பதிவு செய்திருந்தனர். அவர்களும் அரசு ஊழியர்கள்!

1 *Jacques WEBER - Un Etablissment Francais en Inde - Karikal 1832 - 1849 - memoire de maitrise - Aix - en - Provence 1971 - P. 33-34. (Thanks - Nallam Clinic - Mini conference Hall Library)*

## அம்மை நோய்த்தடுப்பு

காரைக்கால் பிரதேசத்தில் பெரியம்மை நோயினால் (Small Pox) மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டு வந்தனர். சிலர் கண்பார்வை இழந்தனர். பலர் இறந்தேவிட்டனர்.

இதனைத் தடுப்பதற்காக, காரைக்காலில் அம்மைத்தடுப்பு ஊசி போடுவதற்கு அரசு எல்லா ஏற்பாடும் செய்தது. அரசு மருத்துவமனை முழு மூச்சில் செயலில் இறங்கியது. ஆனால் ஒருவர்கூட அம்மைக் குத்திக்கொள்ள முன்வரவில்லை.

பின்னர் அம்மைக் குத்திக்கொண்டால் ஊக்கத்தொகை அளிக்கப்படும் என அரசு அறிவித்தது. அதற்கும் பதிலில்லை.

சமயத்தின் பெயராலும், சனாதான தர்மத்தின் பெயராலும், சமுதாயத்தில் ஏற்பட்டிருந்த பல தவறான நம்பிக்கைகளால், அறிவியல் அடிப்படையில் ஏற்பட்ட நோய்த்தடுப்பு நடவடிக்கை மிகச் சாதாரணமாகப் புறக்கணிக்கப்பட்டுவிட்டது! என் செய்வது?

## குறிப்பு

அம்மை நோய் தடுப்பு முறை, எட்வர்ட் ஜென்னர் (Edward Jenner) என்ற பிரபல ஆராய்ச்சி மருத்துவரால், இங்கிலாந்தில் 1796இல் கண்டுபிடிக்கப்பட்டு, உலகில் கோடிக்கணக்கான மக்கள் பயனடைந்து வந்தனர். (குறிப்பாக ஆசியா, ஆப்ரிக்கா நாடுகளில்).

இதன் விளைவாக, 1979இல் உலகிலிருந்து அம்மைநோய் ஒழிக்கப்பட்டுவிட்டது என உலக சுகாதார நிறுவனம் (WHO) அறிக்கை வெளியிட்டது!

## 1848இல் காரைக்காலில் பாராளுமன்றத் தேர்தல்

இரண்டாவது குடியரசு, பிரான்சில் 1848 பிப்.25இல் ஏற்பட்டது. பின்னர் பிரெஞ்சிந்தியாவிலும் (காரைக்காலிலும்) குடியரசு பிரகடனப்படுத்தப்பட்டது.

இதன் தொடர்பாக, பிரான்சு பிரெஞ்சிந்தியாவிலிருந்து ஒரு மக்களவை உறுப்பினரை (Deputé) தேர்ந்தெடுக்க அரசாணை வெளியாயிற்று. அதனால், காரைக்கால், புதுச்சேரி, மாயே, ஏனம்,

சந்திரநகர் ஆகிய ஐந்து மாகாணங்களின் வாக்காளர்கள் (21 வயதுக்கு மேற்பட்ட ஆண்கள்) அனைவரும் வாக்களித்து இந்த உறுப்பினரைத் (தெப்புய்த்தே) தேர்ந்தெடுத்து பாரீஸ் பாராளுமன்றத்திற்கு அனுப்ப வேண்டும். காரைக்காலில் சர்வஜன வாக்குரிமை (அதாவது 21 வயதுக்கு மேற்பட்ட அனைத்து ஆண்களுக்கு மட்டில்) மற்றொரு சட்டத்தின்மூலம் பிரகடனமாயிற்று. சமய, குல வேறுபாடின்றி அனைவருக்கும் வாக்குரிமை!

காரைக்கால் நிர்வாகி சைந்திலேரும், குவர்னர் புய்ழோலும் தேர்தல் சிறப்பாக நடைபெற அரும்பாடுபட்டனர். வாக்காளர்களுக்கு உரிய வேண்டுகோளும் விடுத்தனர். காரைக்கால் வாக்காளர்கள் தங்கள் பெயரை நீதிமன்ற நீதிபதி முன்னிலையிலும், திருநள்ளாறு, நல்லழந்தூர், நெடுங்காடு, கோட்டுச்சேரி பகுதி மக்கள், அங்குள்ள ''மணியக்காரர்'' முன்னிலையிலும் பதிவு செய்துகொள்ளுதல் வேண்டும்.

தேர்தலுக்கு முன்னைய நாள் 1849 சன. 22 அன்று, காரைக்கால் பிரதேசம் முழுவதும் 4314 பேர் வாக்காளர்களாகப் பதிவு செய்திருந்தனர்.

- 1849 சன.23இல் தேர்தல் தொடங்கி சன.31 வரை நடைபெற்றது. ஆனால், காரைக்காலில் 4314 வாக்காளர்களில் 212 பேர் மட்டுமே வாக்களித்தனர்! அவர்களும் அரசாங்க ஊழியர்கள்!

- நடந்ததென்ன? (இதில் நிர்வாகி சைந்திலேர் அஞ்சியது உண்மையாகிவிட்டது.) அதாவது, கீழ்க்குலத்தினரும் தீண்டத்தகாதவர்களும் வாக்களிக்கும் வாக்குச்சாவடிக்கு உயர்குலத்தினர் வருவார்களா? வரவில்லை. பலம்பொருந்திய உயர்குலம் வரவில்லை என்பதால் மற்றோரும் வரவில்லை. இதுதான் நடந்தது! வாக்களித்த ஒருசிலர் அரசு ஊழியர்கள்!

- இந்தியாவிலேயே முதன்முதலாக குடியரசு (République) ஆட்சிமுறை ஏற்படுத்தப்பட்டு, மக்களாட்சியின் ஆணிவேராகிய பாராளுமன்ற உறுப்பினரைத் தேர்ந்தெடுக்க தேர்தலும் வைத்து, குலசமய பேதமின்றி

அனைவருக்கும் வாக்குரிமையும் கொடுத்துத் தேர்தல் நடந்தது காரைக்காலில் (பிரெஞ்சிந்தியாவில்) மட்டுமே ஆகும்.

- ஆனால் பிரெஞ்சிந்திய மக்கள் சுதந்தரம், சமத்துவம், சகோதரத்துவம் என்ற மக்களாட்சியின் மரபுக்கு எதிராக - உயர்ஜாதி, தாழ்ந்த ஜாதி பல்லவியைப் பாடிக்கொண்டே - தேர்தலைப் புறக்கணித்தது, பிரான்சு நாட்டில் பெரும் அதிர்ச்சியையும் ஆச்சரியத்தையும் ஏற்படுத்தியது.
- இந்தியாவிலுள்ள நாளிதழ்களும் இதனைக் கேலிசெய்து தலையங்கம் எழுதின.

**பின்னர் நடந்ததென்ன?**

தேர்தல் முடிந்து ஒரு மாதத்திற்குமேல், 1849 மார்ச். 9இல் பிரெஞ்சிந்திய ஐந்து மாகாணங்களின் வாக்குகளையும் சேர்த்து எண்ணி முடிவு அறிவிக்கப்பட்டது. அதில் லெக்கூர் (Lecour) 12774 வாக்கில் வெற்றியடைந்தார். ரொகான் 6828 வாக்குகளிலும், தெபாசேன் 6250 வாக்குகளிலும் தோல்வியடைந்தனர்.

மார்ச் 9இல் சட்டபூர்வ தேர்தல் முடிவு அறிவிக்கப்பட்டது. 1849 மார்ச் 15 தேதியிட்ட சட்டத்தின்மூலம் (LOI) பிரெஞ்சிந்தியாவுக்குக் கொடுக்கப்பட்டிருந்த ஒரு பாராளுமன்ற உறுப்பினர் சீட் பறிக்கப்பட்டது!

இந்நிலையில், மனிதநேயமும், அரசியல் நாகரிகமும் படைத்த ஷெல்ஷேர் என்ற பாராளுமன்ற உறுப்பினர் “பிரெஞ்சிந்தியாவுக்கு இருந்த ஒரேயொரு உறுப்பினர் பதவியை எடுத்தது அநீதி என்றும், பிரெஞ்சிந்தியாவின் தேவைகளை எடுத்துரைக்கப் பாராளுமன்றத்தில் உறுப்பினரே இல்லாமல் போய்விட்டது என்றும் வருந்தினார். அத்துடன், இப்பதவி பறிப்பு - சட்டத்திற்கும், மக்களாட்சிக்கும் எதிரானது எனக் கூறினார்.

இதனைக் காணும்போது,

**ஓராயிரம் வருடம் ஓய்ந்து கிடந்த பின்னர்**
**வாராது போலவந்த மாமணியைத் தோற்போமோ?**

என்ற மகாகவி பாரதியின் பாடல்தான் நினைவுக்கு வருகிறது.

## காரைக்காலில் பிறந்த நாயன்மார்கள்

சைவ சமயத்தினர் போற்றும் 63 நாயன்மார்களில் இருவர் காரைக்கால் பிரதேசத்தில் பிறந்தவர்கள்.

### காரைக்காலம்மையார்

ஊர் - காரைக்கால், தொழில் - வணிகக்குடும்பம்,

குலம் - செட்டியார்.

1. "அம்மையே" எனச் சிவபெருமானால் அழைக்கப்பட்டவர்.
2. அனைத்து நாயன்மார்களையும்விடக் காலத்தால் மூத்தவர்.
3. இவர் பரிமாறிய உணவை இறைவன் சுவைத்து உண்டார் என்பது குறிப்பிடத்தக்கது. ஏனைய நாயன்மார்களிடம் உணவு உண்டதில்லை.
4. காரைக்காலம்மையார் தென்னிந்திய இசையின் தாய் : காரைக்காலம்மையார் பாடிய அற்புதத்திருவந்தாதி, திருவிரட்டை மணிமாலை, திருவாலங்காட்டு மூத்தத் திருப்பதிகங்கள் இனிய பண்களால் பாடப்பெற்ற இசைப்பாடல்களாகும். காரைக்காலம்மையார் இத்தமிழ்ப் பண்களால் வகுத்துத் தந்த இசைமுறைகள் பல்வேறு திராவிட மொழிகளின் இசை வளர்ச்சிக்கு இன்றும் அடிப்படையாக விளங்கி அனைவரையும் மகிழ்வித்து வருகிறது.

### ஆ. இளையான்குடி மாற நாயனார்

ஊர் - இளையான்குடி, காரைக்காலுக்கு மேற்கே 7கி.மீ., தொழில் - வேளாண்மை, குலம் - வெள்ளாழர்.

நள்ளிரவில் சிவனடியார் கோலத்தில் வந்த இறைவனுக்கு உணவளிக்க வீட்டில் அரிசி இல்லாததால், இளையான்குடி மாற நாயனார், அன்று பகல் தம் வயலில் விதைத்த செந்நெல்லை ஒரு கூடையில் வாரிக் கொண்டு வந்து நல்ல வகையில் சிவனடியாருக்கு அமுது படைத்துச் சிவபெருமான் நல்லருளைப் பெற்றார். (இறைவன் காட்சி அளித்தார்.) (முளைவாரிக்குட்டை என்ற வயல் இன்றும் இளையான்குடியில் உள்ளது.)

## காரைக்கால் பிரதேசத்தில் தேவாரம் பாடிய மூவர் வருகை

திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி நாயனார் மூவரும் இங்கு வந்து தேவாரம் பாடிச் சென்றுள்ளனர்.

1. திருநள்ளாறு போகமார்த்த பூண்முலையம்மை உடனுறை தர்ப்பாரண்யேசுவரர் ஆலயத்தில் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி நாயனார் மூவரும் தேவாரப் பதிகங்கள் பாடி வழிபட்டுள்ளனர்.
2. தருமபுரம் அபயாம்பிகை உடனுறை யாழ்மூரிநாதர் ஆலயத்திலும்,
3. திருத்தெளிச்சேரி சத்திநாயகி உடனுறை பார்வதீசுவரர் ஆலயத்திலும்,
4. திருவேட்டக்குடி சாந்தநாயகி உடனுறை திருமேனியழகர் ஆலயத்திலும் திருஞானசம்பந்தர் மட்டில் தேவாரப் பதிகம் பாடி வழிபட்டுள்ளார்.

# 8

# காரைக்கால் போராட்டம்

1845இல், காரைக்கால் பகுதியில், காலரா கொள்ளை நோய் விஸ்வரூபமெடுத்தாடியது! நூற்றுக்கணக்கான உயிர்களைப் பலி கொண்டது! சூலை மாதத்தில் மட்டும் இந்நோய்க்கு 200 பேர் பலியானார்கள்! ஆகஸ்ட் முதல் தேதி 13 பேர்!

பிணங்கள் வாஞ்சியாற்றின் கீழ்க்கரையிலிருந்த சுடுகாட்டில் கொளுத்தப்பட்டது. இது இன்றைய மயானக்கரைத் தெருவின் மேல்கோடியில் இருந்துள்ளது. அவ்விடத்திலிருந்து, சிறிது தெற்கே, வாஞ்சியாறு அரசலாற்றுடன் கலக்கிறது. பார்த்தால் அலகாபாத் திரிவேணி சங்கமம் போல் காட்சியளிக்கிறது. அருகில் ஓர் அரிச்சந்திரன் கோவில் இருந்ததாகக் கூறுகின்றனர்.




8 : அரசலாறு - வாஞ்சியாறு சங்கமம்
நன்றி : எம். பன்னீர்

இந்நிலையில் சூலை 31இல், சுடுகாட்டிலிருந்து வெளியாகும் புகையே, காலரா பரவுவதற்குக் காரணமாக இருப்பதால், சுடுகாட்டை வாஞ்சியாற்றிற்கு மேற்கே பச்சூர் அருகே, உடனடியாகக் கொண்டு செல்லுதல் (மாற்றிவிட) வேண்டும் எனக் காரைக்கால் ஐரோப்பியர்களும், முஸ்லீம்களும் நிர்வாகி சைந்திலேருக்கு ஒரு விண்ணப்பம் அனுப்பினார்கள்.[1]

இச்செய்தியறிந்த இந்துக்களும், ஜாதித் தலைவர்களும், உடனடியாக இதனை எதிர்த்து ஆர்ப்பாட்டத்தில் குதித்தனர்.

ஆகஸ்ட் 8இல், கொள்ளை நோய் மேலும் மேலும் பயங்கரமாகப் பரவி வந்ததால், நிர்வாகி சைந்திலேர், இனி பிணங்களை வாஞ்சியாற்றிற்கு மேற்கே மட்டுமே கொளுத்த வேண்டும் என்றும், அதுவே இனி புதிய சுடுகாடாகக் கருதப்படும் என்றும் ஆணை பிறப்பித்தார். நிர்வாகியின் உத்தரவு பிரகடனமானவுடனேயே, அனைத்து இந்துக்களும், ஜாதித்தலைவர்களும் கொதித்தெழுந்து, சுமார் 2000 பேர் ஊரின் முக்கிய வீதிகளைக் கைப்பற்றி, இரண்டு பிணங்களைப் பழைய சுடுகாட்டுக்கே எடுத்துச் செல்ல முயன்றனர். ஆனால் முடியவில்லை. காவல்துறையின் பாதுகாப்புடன் புதிய சுடுகாட்டிலேயே எரிக்கப்பட்டன.

மறுநாளும் ஒரு காலரா சாவு - சைந்திலேரின் முன்னேற்பாட்டுடனும், உறவினர்களின் ஒப்புதலுடனும் பிணம் புது சுடுகாட்டுக்கு எடுத்துச்செல்லப்பட்டது. ஆனால் வழியில் போராட்டக்காரர்கள் பிணம் போகும் வழியை மறித்து, பெரும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

15 காவலர் (போலீஸ்) சிசே என்ற மேலதிகாரியுடன் சம்பவ இடத்திற்கு விரைந்தனர். இதனால் எதிர்ப்பாளர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரித்து கைகலப்பும் ஏற்பட்டது.

உடனடியாக, மேலும் சில காவலர்கள் வந்தனர். பயனில்லை, போராட்டக்காரர்கள் எண்ணிக்கை மேலும் அதிகரித்தது. காவலர்கள்மீது சிலம்பு விளையாடிக்கொண்டே

1 *Jacques WEBER - Les Etablissements Français en Inde au XIX^e Siecle - Librairie de l'Inde, Paris - 1988 - P613, 614*

கற்களை எறியத் தொடங்கினர் கிளர்ச்சிக்காரர்கள். காவலர்களால் ஒன்றுமே செய்ய முடியவில்லை. உடனடியாகத் துப்பாக்கியால் சுட ஆரம்பித்தனர். மிரண்டு கூட்டம் கலைந்தோட ஆரம்பித்தது. ஒருவர் மாண்டார். 13 போராட்டக்காரர்களும், குலத்தலைவர்களும் கைது செய்யப்பட்டனர்.

*மறுநாள் ஊரில் மயான அமைதி!*

அண்டை பிரிட்டிஷ் இந்தியாவிலிருந்து ஏராளமான தொண்டர்கள் இந்துக்களுக்கு உதவியாக வரப்போவதாகப் பலத்த வதந்தி உலவியது. இதற்கிடையில் சைந்திலேர் 40 சிறப்புக்காவலர்களை (Special Constable) உடனடியாக நியமித்தார். இவர்கள் அனைவரும் முஸ்லீம்கள்! அத்துடன் விரைவில் 50 காவலர்களைக் காரைக்காலுக்கு அனுப்புமாறு, புதுச்சேரி குவர்னருக்கு அவசரச் செய்தியனுப்பினார். (அக்காலத்தில் கடிதப்போக்குவரத்து எளிதான செயலல்ல!)

அடுத்த நாட்களில் மீண்டும் போராட்டம் புது பலத்துடன் தொடங்கியது. தெருக்கள் அனைத்தும் போராட்டக்காரர்களின் வசம்! ஐரோப்பியர்கள் வெருண்டு போய்த் தங்கள் வீடுகளிலேயே அடைபட்டிருந்தனர். தொழிற்சாலைகள், கடைகள் மூடப்பட்டன. அரசு அலுவலகங்கள் செயலிழந்தன. மாகாணத்தில் பிரெஞ்சிந்திய ஆட்சி மறைந்து விட்டது என்ற நிலை ஏற்பட்டது.

இச்சிக்கலான நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு, நிர்வாகி சைந்திலேர் தனது சுய கவுரவத்தையும் கைவிட்டு, தஞ்சாவூர் கலெக்டரிடம் அவசரமாக 40 காவலர்களை அனுப்புமாறு வேண்டிக் கடிதம் எழுதினார். கடிதம் கண்ட உடன் 60 காவலர்கள் தஞ்சாவூரிலிருந்து அனுப்பப்பட்டு, காரைக்காலுக்கு வந்து சேர்ந்தனர். பிறகு சொல்வானேன்? உடனடியாகக் காரைக்காலில் அமைதி திரும்பியது!

ஆகஸ்ட் 13இல் மேலும் 60 காவலர்கள் தஞ்சாவூரிலிருந்து வந்தனர். காரைக்காலில் அனைவரும் வேலைக்குத் திரும்பினர். கடைகள் திறக்கப்பட்டன. அரசு அலுவலகங்கள் இயங்கத் தொடங்கின![1]

1 *Revue Historique de l'Etat de Pondichery - 1974 - 75 - P.2-3 (Thanks - Nallam Clinic - Mini Conference Hall Library)*

ஆகஸ்ட் 14இல் புதுச்சேரியிலிருந்து 30 காவலர்கள் மட்டுமே வந்தனர்! (ஆனால் தஞ்சாவூரிலிருந்து 200 காவலர்கள் வந்தனர்)

இதற்குக் காரணம், 1814 ஒப்பந்தப்படி, பிரெஞ்சிந்தியாவில் அமைதி ஒழுங்குக்குத் தேவையான, மிகக் குறைந்த அளவு காவலர்களை மட்டுமே வைத்துக் கொள்ள வேண்டும் என்பதாகும். இராணுவம் வைத்துக் கொள்ளுவதும் கூடாது.

## போராட்டத்தின் ஆணிவேர்

1845இல் காரைக்காலில் வெடித்த போராட்டத்தைப் பற்றி ஆய்வு செய்த பிரெஞ்சிந்திய அரசு கீழ்க்கண்ட செய்திகளை வெளியிட்டுள்ளது.

1840லிருந்தே காரைக்காலில் பிரெஞ்சு ஆட்சிக்கு எதிராகவும், கிறிஸ்தவ சமூகத்தினருக்கு எதிராகவும், ஒரு பலம் பொருந்திய இரகசிய அமைப்பு தலைமறைவாகச் செயல்பட்டு வருவதாகக் காரைக்கால் நிர்வாகி 1840 நவ.28இல் குவர்னருக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

1845 போராட்டத்திற்குத் தூண்டுகோல் இந்த இரகசிய அமைப்பினரே என அரசு முடிவுக்கு வந்துள்ளது. தொடர்ந்து அவர்கள் தலைமறைவாகவே செயல்படுகிறார்கள் என்றாலும் அரசு அவர்களைக் கண்டுபிடித்து வெளிக்கொணர முடியவில்லை. தேவை ஏற்படும்போது இவர்கள் வன்முறையில் ஈடுபடுவதிலும் தயங்குவதில்லை.

இத்தலைமறைவு இயக்கத்தின் "மூளை"யே பெரமசாமிப்பிள்ளைதான் என்றாலும், இவர் இந்தியாவிலுள்ள பிரெஞ்சுக்காரர்களுக்கு "முதல் நம்பர் எதிரி" என்றும், இவர் காரைக்காலிலும், புதுச்சேரியிலும் அடிக்கடி போராட்டங்களைக் கிளப்பிவிடுகிறார் என்றும், 1845இல் காரைக்காலில் நடந்த போராட்டத்திற்கு இவரே முழு காரணம் என்றும், இவர் நல்ல மக்கள் செல்வாக்கு பெற்றவர் என்றும், இவரைப் பின்பற்றுவோர்

அனேகர் உள்ளனர் என்றும், இந்துக்களின் நல்லெண்ணத்தையும், போற்றுதலையும் பெற்றவர் என்றும், பிரெஞ்சிந்திய அரசு பல விசாரணைக்குப் பின்னர் கண்டுபிடித்து முடிவுக்கு வந்துள்ளது.

மேலும் 1849இல் (சூலை, ஆகஸ்ட் மாதங்கள்) பெரமசாமிப்பிள்ளை அரசாங்கத்திற்குப் பல இன்னல்களைக் கொடுத்துள்ளார்.

ஆகவே, பிரெஞ்சுக்காரர்களுக்கு எதிரான அரசியல்ரீதியாகவும், சமய இரீதியாகவும் (1840 - 1849இல்) ஏற்பட்ட எதிர்ப்பை அலட்சியம் செய்ய முடியாது. இதனை பிரெஞ்சுக்காரர்களுக்கு எதிராக நடைபெற்ற முதல் விடுமுறைப் போராட்டம் என்றே கொள்ளுதல் வேண்டும்.

குறிப்பிட்ட நேரத்தில், தஞ்சாவூர் கலெக்டரின் உதவி வந்திராவிடில் காரைக்கால் வரலாறே வேறு திசையில் திரும்பியிருக்கும் என்கிறார் வரலாற்றறிஞர் வெபேர்.

**முக்கிய குறிப்பு**

1. தஞ்சாவூர் கலெக்டர் காரைக்கால் நிர்வாகியின் கடிதத்தைக் கண்ட அடுத்த வினாடியே, உதவிக்குச் சிப்பாய்களை அனுப்பியதற்குக் காரணம் என்ன?

காரைக்காலில் நடந்த ஐரோப்பியர் எதிர்ப்புப் போராட்டம் அடுத்துள்ள தங்களது பிரிட்டிஷ் இந்தியாவிற்கும் பரவக்கூடாதே என்ற அச்சம்!

மேலும், அதே காலக்கட்டத்தில், நாகப்பட்டினத்திலும் இந்துக்களின் சுடுகாட்டை ஊருக்கு வெளியே மாற்றி அமைத்ததால் அங்கும் எதிர்ப்பு புகைந்து கொண்டிருந்தது. ஆகவே, காரைக்கால் போராட்டம் நாகப்பட்டினத்திற்கு முன்மாதிரியாக அமைந்துவிடக் கூடாதே என்ற பயமும் தஞ்சாவூருக்கு இருந்தது!

2. இப்போராட்டத்தில் சுமார் இருநாட்கள் மாகாணத்தில் பிரெஞ்சிந்திய ஆட்சி மறைந்துவிட்டது என்ற நிலை ஏற்பட்டது. இதனைப் பிரெஞ்சுக்காரர்களுக்கு எதிராக நடைபெற்ற முதல் விடுதலைப் போராட்டம் என்றே கொள்ளுதல் வேண்டும்.

முடிவாகக் கூறுமிடத்து, 1857இல் இந்தியாவில் சிப்பாய்க்கலகம் என்று இழித்துக் கூறப்பட்ட விடுதலைப் போராட்டம் வெடிப்பதற்கு 12 ஆண்டுகள் முன்னரேயே, 1845இல் காரைக்காலில் ஒரு வலுவான விடுதலைப் போராட்டம் நடந்து ஆட்சியை ஸ்தம்பிக்க வைத்துள்ளது என்றால், இதிலிருந்து இந்தியாவிலேயே, விடுதலைப் போராட்டத்தின் முன்னோடி காரைக்கால் என்று துணிந்து கூறலாமல்லவா?

## பெரமசாமிப்பிள்ளை

காரைக்காலில் ஊரின் நடுவே இவரின் பெயரால் பெரமசாமிப்பிள்ளைத் தெரு உள்ளது. இத்தெருவின் நடுவில் இவருக்குச் சொந்தமான இருபெரும் வீடுகள் இருந்தன. ஒன்று மாடி வீடு, அதன் பக்கத்தில் மற்றொன்று ஓட்டு வீடு. மாடி வீட்டில், முன் வரவேற்பறையில், பெரமசாமிப்பிள்ளையின் முழு உருவப்படம், துணியில் வண்ண ஓவியமாகத் தீட்டப்பட்டு, கண்ணாடி போடப்பட்டு மாட்டப்பட்டிருந்தது.

படத்திலுள்ள இவரது தலைப்பாகை, நீண்ட வெள்ளைக்கோட்டு, தரையைத் தொடும் நீண்ட அங்கவஸ்திரம், காலில் திவான் காலணி (ஒருவித பூட்ஸ்), கையில் தங்கப்பூண் போட்ட கைத்தடி.[1] அத்துடன் அவரது கம்பீர மீசை அனைத்தும், இவர் ஒரு பிரபல முக்கியஸ்தராக (Notable) வாழ்ந்துள்ளார் என்பதைக் காட்டுகின்றன. இவருக்குப் பல்லக்கும் உண்டு. (சிதைந்த பல்லக்கு மாடியில் கிடந்தது).

## வாரிசுகள் [2]

பெரமசாமிப்பிள்ளையின் அடுத்தடுத்த சந்ததியர் பின்வருமாறு :

---

1. இம்மாதிரியான அணிகலன்கள், கைத்தடி, பல்லக்கு போன்றவை பயன்படுத்த பிரபலஸ்தர்களுக்கு மட்டில் அரசு அனுமதி அளித்திருந்தது அந்தக்காலத்தில்.

2 நேர்காணல் = மு. சண்முகம், மிராசுதார், புள்ளைமங்கலம், (வடபாதி மங்கலம் அருகே) தன்னிடமுள்ள நொத்தேர் ஆவணங்களிலிருந்தும், தனது முன்னோர்களிடம் கேட்டவைகளிலிருந்தும் கூறியவை.



9 : விடுதலை வீரர் பெரமசாமிப்பிள்ளை, காரைக்கால்

1. பெரமசாமிப்பிள்ளை

2. முத்து வீரப்பிள்ளை (மகன்)

3. முத்து கிருஷ்ணப்பிள்ளை (பேரன்)

4. முத்து வெங்கடாசலம்பிள்ளை (கொள்ளுப்பேரன்)

மேற்கண்ட முத்து வெங்கடாசலம்பிள்ளை தனது 50ஆவது வயதில் 1940இல் பெரமசாமிப்பிள்ளை வீதியிலிருந்த தனது பூர்வீக வீட்டில் மரணமடைந்தார்.

முத்து வெங்கடாசலம்பிள்ளைக்கு 3 மகன்கள் :

1. மகாலிங்கம்பிள்ளை

2. பரமசிவம்பிள்ளை

3. ஷண்முகசுந்தரம்பிள்ளை என்ற சண்முகம் பிள்ளை.

இதில் மகாலிங்கம்பிள்ளை 1969இல் இறந்தார். அவர் மகன் கைலாசநாதன் தஞ்சாவூரில் வசித்துவருகிறார்.

பரமசிவம்பிள்ளை - இவருக்கு ஒரு மகன், 3 பெண்கள் - இவரது மகன் சண்முகம் தருமபுரத்தில் வாழ்ந்து வருகிறார்.

ஷண்முகசுந்தரம்பிள்ளை - இவர் வடபாதிமங்கலத்திற்குப் பக்கத்திலுள்ள பிள்ளைமங்கலத்தில் நிலம் வாங்கிக் கொண்டு 1959இல் குடியேறினார். இவருக்கு 1 ஆண், 2 பெண் பிள்ளைகள்.

பெரமசாமிப்பிள்ளையின் பூர்வீக இரு வீடுகளையும், தருமபுரத்தில் இருந்த நிலங்களையும் அவரது சந்ததியினர், சிறிது சிறிதாக விற்றுவிட்டனர்.

# 9

# வேளாண்மையும் நீர்ப்பாசனத் திட்டங்களும்

காரைக்கால் ஒரு நெற்களஞ்சியம்!

காவிரியின் கிளை நதிகளும், அதிலிருந்து பிரியும் துணை வாய்க்கால்களும், வலைபின்னியது போல் குறுக்கும் நெடுக்குமாக ஓடிக் காரைக்கால் பிரதேசம் முழுவதிற்கும் நீர்ப்பாசனமாக அமைந்துள்ளன.

வாய்க்காலின் கரையைக் காலால் இடறினால் போதும், நீர் குபுகுபு என வயலுக்குள் பாயும்.

வயலுக்கு ஏற்றம் போட்டு நீர் இறைப்பது இங்குத் தெரியாத செய்தி!

இங்கு ஏரிகள் இல்லை! ஆனால் ஏராளமான குளங்கள் உண்டு. குட்டைகள் உண்டு. கிணறுகள் உண்டு.

அடிக்கடி ஏற்படும் வெள்ளங்களால் பெருமளவு "வண்டல்" வயல்களிலும், அண்டையிலுள்ள திடல்களிலும் படிந்துவிடும். இதுவே வயலுக்குப் போடப்படும் இயற்கை உரம்! "ஏரினும் நன்றால் எருவிடுதல்" அல்லவா?

காரைக்கால் தனக்கு மட்டுமின்றி, பிரெஞ்சிந்தியாவின் அரசு நிர்வாகத்தலைமை யிடமாகிய புதுச்சேரிக்கும் ஒரு நெல் உற்பத்திக்களமாக விளங்குகிறது!

- ஆறுகளில் சூன் முதல் நவம்பர் வரை நீர் கரைபுரண்டோடும். டிசம்பர் முதல் மார்ச் வரை சீராக ஓடும். மற்ற காலங்களில் நீரோட்டம் கிடையாது.

## காரைக்கால் மாகாணத்தில் காவிரி கிளை நதிகள் அட்டவணை

| எண் | பெயர் | தொடக்கம் | காரைக்கால் பகுதி நுழைவாயில் | ஆற்றின் அகலம் | துணை வாய்க்கால் | ஆற்றின் முடிவிடம் |
|---|---|---|---|---|---|---|
| 1. | நண்டலாறு | காவிரி | நல்லாத்தூர் கும்பகோணம் | 20-100 மீ | 4 | வங்கக்கடல் |
| 2. | நாட்டார் வாய்க்கால் | அரசலாறு | மேலஅன்னவாசல் | 10 மீ | 7 | வங்கக்கடல் |
| 3. | வாஞ்சியாறு | நாட்டார் வாய்க்கால் | அம்பகரத்தூர் | 12மீ | 3 | அரசலாறு |
| 4. | நூலாறு | ஆண்டார்பந்தி | நல்லம்பல் | 2-8மீ | 21 | வாஞ்சியாறு |
| 5. | அரசலாறு (அரிசிலாறு) | காவிரி உம்பளம்பாடி | விழுதியூர் | 70-150மீ | | வங்கக்கடல் |
| 6. | முல்லையாறு | வடிகால் தண்ணீர் | - | 15மீ | | அரசலாறு ஓடுதுறை |
| 7. | திருமலை ராஜனாறு | குடமுருட்டி ராசகிரி | மானாமுட்டி | 70-120மீ | 3 | வங்கக்கடல் |
| 8. | பிராவிடையானாறு | குடமுருட்டி திருச்சேறை | போலகம் | 40 மீ | | வெட்டாறு[1] (வாஞ்சியூர்) |

குறிப்பு : 1. தற்போது பிராவிடையானாறு நேரே வங்கக்கடலில் விழுகிறது.
2. காரைக்கால் பிரதேசத்தில் கிளை நதியோ, துணை வாய்க்காலோ செல்லாத கிராமமே கிடையாது.

## முக்கிய துணை வாய்க்கால்கள் அட்டவணை

| எண் | பெயர் | தொடக்கம் | முடிவு | அகலம் |
|---|---|---|---|---|
| 1. | தலைகாணி வாய்க்கால் | நண்டலாறு கோட்டகம் | கோவில்பத்து (மணலில் மறைகிறது) | 10 மீ |
| 2. | புரத்தி வாய்க்கால் | தலைகாணி வாய்க்கால் | நண்டலாறு | |
| 3. | குதிரைக்குட்டி வாய்க்கால் | நண்டலாறு வீரப்பாகம் (பிரிட்டிஷ் இந்தியா) | கோட்டகம் தலைகாணி வாய்க்கால் | 4 மீ |
| 4 | சுப்ராயபுரம் வாய்க்கால் | நூலாறு கருக்கன்குடி | வாஞ்சியாறு (இலிங்கத்தடி) | 10 மீ |
| 5. | நெல்லி வாய்க்கால் | நூலாறு கருக்கன்குடி | அரசலாறு அத்திப்படுகை | 4 மீ |
| 6. | கீழையூர் வாய்க்கால் | திருமலைராஜனாறு தென்படுகை (பிரிட்டிஷ் இந்தியா) | வங்கக்கடல் | 6 மீ |

- நீர்ப்பாசன வசதி சிறந்திருந்தும் கூட விவசாயிகள் இருபோக சாகுபடி செய்வது கிடையாது. ஒரே ஒரு போகம் மட்டுந்தான்! காரை நெல் அல்லது சம்பா நெல் பயிரிடுவார்கள். நெல் சாகுபாடியுடன் புன்செய் சாகுபடியும் செய்வார்கள்.
- ஆற்றில் பெருமளவில் நீர் வரும்போது அதனைத் தேக்கி வைத்துக் கோடைக்காலத்தில் பயிரிட ஏரிகளே கிடையாது. மேலும் அந்த எண்ணம் யாருக்கும் இல்லை.
- இந்நிலையில் 1834இல் லெஸ்பெர்தா என்ற காரைக்கால் நிர்வாகி, மாகாணத்தின் வடமேற்கிலும், தென்மேற்கிலும் இரண்டு ஏரிகள் வெட்டினால் கோடைக்கால பயிர்கள் விரிவடையும் என்ற நோக்கில் ஒரு திட்டம் தயாரித்து, புதுச்சேரி மேலிட அரசிற்கு அனுப்பிவைத்தார். திட்டம் நிறைவேறவில்லை.

## விவசாயிகளுக்குத் தீராத இடர்கள்[1]

"உழந்தும் உழவே தலை" என வள்ளுவரால் போற்றப்பட்ட வேளாண்மை சென்ற சில ஆண்டுகளாகப் பல இன்னல்களுக்கு ஆளாகி, அதன் பொலிவு குறையத் தொடங்கியது!

பிரெஞ்சுக்காரர்களுக்கும், ஆங்கிலேயருக்கும் இடையே எப்போதுமே ஜென்மப்பகை! இந்தப் பாரம்பரிய பகைமை, ஐரோப்பாவில் மட்டுமின்றி, இந்தியாவிலும் வெறியாட்டம் போட்டது, இதனால் பாதிப்படைந்தவர்கள் பிரெஞ்சிந்திய மக்களே! சான்றாக,

காரைக்காலுக்கு வரும் அனைத்து ஆறுகளும் அண்டை மாகாணமாகிய பிரிட்டிஷ் இந்தியாவைக் கடந்துதான் வருதல் வேண்டும். இந்நிலையில் ஆற்றில் நீர் பற்றாக்குறை காலங்களில், அங்கேயே மதகுப்பலகை போட்டு அடைத்துவிடுவார்கள். ஒரு

---

*1 Jacques WEBER - Un Etablissement Francais en Inde - Karikal 1832 - 1849 - memoire de maitrise - Aix-en-Provence 1971 -P 33-44 (Thanks - Nallam Clinic - Mini Conference Hall Library)*

சிறிது நீர் மட்டுமே இங்கு வரும்! ஆனால் வெள்ளக் காலங்களில், அத்தனை அபரிமித நீரும், காரைக்கால் மாகாணத்திற்குத்தான்! எல்லா மதகுகளையும் அங்கு திறந்து விட்டுவிடுவார்கள். இங்கு ஒரே வெள்ளக்காடு.

## வெள்ளப்பெருக்கு

1817லிருந்து 1824 வரை அடிக்கடி ஏற்படும் வெள்ளங்கள், ஆற்றுடைப்புகள் இவைகளைத் தடுப்பதற்கு வாய்க்கால்களை ஆழமாக வெட்டி, இரு கரைகளையும் உறுதிப்படுத்த உரிய பராமரிப்பு வேலைகள் செய்யப்படவில்லை, பணப் பற்றாக்குறை எனக் காரணம் காட்டி!

காரைக்கால் மாகாணத்தில், 1824இல் 33 வாய்க்கால் உடைப்புகள், 1825இல் 157 வாய்க்கால் உடைப்புகள், நூலாற்றில் 22 தடவை ஒரே இடத்தில் ஏற்பட்ட உடைப்பு ஆகியவை அடைக்கப்பட்டுள்ளன. (1819லிருந்து 1828வரை).

குறிப்பு : உடைப்புகளை அடைக்கப் பெரும் மரப்பலகைகள், கோங்குமரம், பனைமட்டை, நாணல், வைக்கோல் இவைகளைப் பயன்படுத்தினர்.

## காரைக்கால் நிர்வாகியின் நன்முயற்சி

ஆண்டுதோறும் உடைப்பு எடுப்பதும், அடைப்பதும் ஒரு வழக்கமாகிவிட்டதால், காரைக்கால் நிர்வாகி அனைத்து நீர் தேக்கும் மதகுகளையும், 2 மீட்டர் அகலத்திலும், 2 மீட்டர் உயரத்திலும் கட்டிப் பலப்படுத்த திட்டம் தீட்டினார் நிர்வாகி.

பின்னர், புதுச்சேரி கவர்னரிடம் அனுமதியும், 16000F நிதியும் கேட்டு எழுதியிருந்தார். (இது நடந்தது 1827இல்) 1827இல் வேலை நடக்கவில்லை (பணம் வரவில்லை) / 1828இல் மீண்டும் முயற்சி - பயனில்லை. 1829இல் கைவிடப்பட்டது. காரணம் - கேட்ட பணம் 16000F கிடைக்கவில்லை! மேலிடத்தின் ஆர்வமின்மை!! பணநெருக்கடி என்ற நொண்டிக் காரணம்.

10 : காரைக்கால் வேளாண்மை சீரமைப்பு




காரைக்கால் பிரதேச ஆறுகள், பாய்கால், வடிகால், வாய்க்கால்கள்

நன்றி: J.Weber

## நீர்ப்பாசன வேலைகளின் பொறுப்பு

அரசின் பொறுப்பு ஆற்று மதகுகளையும், வாய்க்கால் கரைகளையும் கட்டுவதும், பராமரிப்பதும்.

மதகுகளை மூடுவதும், திறப்பதும் மிராசுதாரர்களின் பொறுப்பு. சிறு வாய்க்கால்களில் அணைபோடுவதும் அவர்களின் வேலையாகும்.

அக்காலத்தில் "பாய்கால் வடிகால் முறை" மிகவும் சிறப்பாக இருந்தது. காய்ச்சல் காலங்களிலும், வெள்ளம் வரும் காலங்களிலும் பயிர்கள் ஓரளவு தப்பித்துக் கொண்டன. இருப்பினும், 1834இல் வந்த வெள்ளத்தில் செல்லூர் கிராமத்தில் தொடர்ந்து வெள்ள நீர் நின்றதால் அந்த ஆண்டு அங்கே அறுவடையே கிடையாது.

## லெஸ்பர்தா நிர்வாகி ஒரு விடிவெள்ளி [1]

1833இல், லெஸ்பர்தா (Lesperda) காரைக்கால் நிர்வாகியாகப் பணியேற்றார். அவர் செய்த முதல் பணி : இவ்வளவு ஆறுகள், இவ்வளவு வாய்க்கால்கள், இவ்வளவு செழிப்பான நிலங்கள் இருந்தும், இம்மாகாணத்தில் விவசாயம் முன்னேறாததற்குக் காரணம் என்ன, என்பதை ஆழமாக ஆராய்ந்தார். மனங்கலங்கினார்!

புதுச்சேரியிலுள்ள குவர்னர் மெலே (Melay)வுக்கு நீண்ட கடிதம் எழுதினர். அதில் அவர் முடிவாகக் கூறியது நம்மை வியக்க வைக்கும்.

"இங்குள்ள வேத புராண ஆகம சாத்திரங்கள், பாசன நீர்நிலைகளைக் கட்டுவதும், பாதுகாப்பதும், பராமரிப்பதும் அரசனின் தலையாய கடமை என வலியுறுத்துகின்றன. ஆகவே, காரைக்கால் நீர்ப்பாசனத்திட்டம் உடனடியாகச் சீர்செய்யப்படாவிடில், பிரான்சு நாடு தான் செய்ய வேண்டிய

1 *Jacques WEBER - Un Etablissement Francais en Inde - Karikal 1832 - 1849 - memoire de maitrise - Aix-en-Provence 1971-P.91 (Thanks - Nallam Clinic - Mini Conference Hall Library)*

கடமையைத் தட்டிக் கழிக்கிறது என்ற பழிக்கு ஆளாக நேரிடும்" என வலியுறுத்தி எழுதியிருந்தார்.

இக்கடிதம் கண்டபின்னரும் கூட குவர்னர் மெலேயிடமிருந்து எந்த பதிலும் வரவில்லை.

நிர்வாகத் திறமையும், செயலாற்றலும், உயரிய உள்ளமும் படைத்த லெஸ்பர்தா என்ன செய்தார் தெரியுமா?

1834ஆம் ஆண்டுக்குக் காரைக்கால் பகுதியின் செலவுகளுக்காக அரசு ஒதுக்கிய பணத்தில் மற்ற துறைகளுக்கான செலவுகளை முடிந்தவரை குறைத்துக் கொண்டு, அதில் மீதியான பணத்தைக் கொண்டு,

| | | |
|---|---|---|
| ஆற்றுமதகு | - | 6 |
| கீழ்மதகு | - | 2 |
| பாலம் | - | 1 |

கட்டி, தன் நிர்வாகத்திறமையை வெளிக்காட்டினார். காரைக்கால் பகுதி மக்களுக்கு இது ஒரு வரப்பிரசாதமாக அமைந்தது.

லெஸ்பர்தாவின் இந்நீர்ப்பாசன பணிகளினால்,

- 680 ஏக்கர் நிலங்கள் புதிதாகப் பயிரிடப்பட்டன.
- சிறு மழை பெய்தால் கூட முழுகிவிடும் "தூது போன மூலை" எனும் கிராமத்தில் 1834இல் பெருமழை பெய்தும் எந்த இழப்பும் இல்லை. கோட்டுச்சேரி கொம்யூனில் ஆண்டுதோறும் 30 வேலி நிலங்களைத் தரிசாகப் போட்டுவிடுவார்கள். ஆனால் 1834இல் 4 வேலிகள் மட்டுமே தரிசாகக் கிடந்தன.
- தென்னங்குடி, அம்பகரத்தூர், அகர காசாகுடி ஆகிய கிராமங்களில் லெஸ்பர்தாவின் சேவையால் 1834இல் அறுவடை ஓகோ என உயர்ந்துவிட்டது.

இவ்வளர்ச்சிகளைக் கண்ணுற்ற குவர்னர் மெலே அடுத்த ஆண்டிலிருந்து, நீர்ப்பாசனத்திற்காக ஒரு சிறு தொகையைக் காரைக்காலுக்கு ஒதுக்கினார். இதன்விளைவாக, 1834லிருந்து 1839 வரை -

ஆற்று மதகுகள் - 23

கீழ் மதகுகள் - 7

கட்டப்பட்டன.

**மணவாங்கல் மதகு பாசனத் திட்டம்**[1]

நெடுங்காடு பகுதியில் நண்டலாற்றில் பாய்கால் வடிகால் மதகுகள் சீராக இல்லாததாலும், அப்பகுதி தாழ்வான நிலங்களாகையாலும் நெடுங்காடு கொம்யூன் தொடர்ந்து வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு வந்தது.

அத்துடன் கோட்டுச்சேரி காரைக்கால் பாய்கால் வாய்க்கால்களுக்கு நண்டலாற்றிலிருந்து தலையணை வாய்க்கால் வழியாகச் செல்லும் நீரும் போதிய அளவு செல்வதில்லை. இதனால், நெடுங்காடு மிராசுதாரர்களுக்கும், கோட்டுச்சேரி காரைக்கால் மிராசுதார்களுக்கும் இடையே தொடர்ந்து தண்ணீர் சண்டை நடந்து கொண்டேயிருந்தது!

இதனைச் சீர்செய்ய 1838-39இல் மணவாங்கல் என்ற ஏழு கண்மாய் கொண்ட மதகு நண்டலாற்றிலும், 5 கண்மாய் கொண்ட மதகு தலகாணி வாய்க்காலிலும் கட்டப்பட்டன. இதுவே மணவாங்கல் மதகுத் திட்டமாகும். சுருங்கக்கூறின், இத்திட்டத்தால்,

- மேடாகவுள்ள கோட்டுச்சேரி காரைக்கால் பகுதிகளுக்குத் தடையின்றி நீர் கிடைத்தது.
- தாழ்வான பகுதியாகிய நெடுங்காடு நிலங்களிலிருந்து வெள்ளநீர் எளிதில் வெளியேற்றப்பட்டது.

இத்திட்டத்திலுள்ள தொழில்நுட்பம் பாசன பொறியாளர்களை வியக்க வைக்கிறது இன்றுவரை! மணவாங்கல் பாசனத் திட்டப் பொறியாளரை மக்கள் போற்றுகின்றனர் இன்றுவரை!

1 *Jacques WEBER - Un Etablissement Francais en Inde - Karikal 1832 - 1849 - memoire de maitrise - Aix -en- Provence 1971 - P. 95 (Thanks - Nallam Clinic - Mini Conference Hall Library)*

## திட்டத்தின் செயல்முறை

நிர்வாகி லெஸ்பர்தாவின் அரிய முயற்சியால், தக்க வல்லுநர்களைக் கொண்டு இத்திட்டம் 1835இல் தயாரிக்கப்பட்டு குவர்னரின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டது. இதன் மதிப்பீடு 28195F ஆகும்! அவருக்கு அடுத்த நிர்வாகி சைந்திலேர் காலத்தில் இப்பணி 1838இல் தொடங்கி 1839இல் வெற்றிகரமாக முடிவடைந்தது.



11. நண்டலாறு 7+2 கண்மாய் மதகு ( மணவாங்கல் மதகு )

இதிலிருந்து நெடுங்காட்டுக்கு வெள்ள அபாயமும் இல்லை. நெடுங்காடு கோட்டுச்சேரி காரைக்கால் மிராசுதாரர்களுக்கிடையே தண்ணீர் சண்டையும் இல்லை.

இத்திட்டத்தால்

- நெடுங்காட்டில் 265 வேலி 2 மா 93 குழி நன்செயும்
- கோட்டுச்சேரியில் 379 வேலி 16 மா 18 குழி நன்செயும்



12. தலைகாணி வாய்க்கால் ( 5 கண்மாய் மதகு )



13. தலைகாணி வாய்க்கால் ( 3 கண்மாய் மதகு )

படங்கள் : நன்றி : எம். பன்னீர்

- ➢ காரைக்காலில் 276 வேலி 16 மா 59 குழி நன்செயும்
- ➢ ஆக 921 வேலி 15 மா 70 குழி நன்செய் நிலங்கள் பயனடைந்தன.

**குறிப்பு :** '*நண்டலாற்றில் கட்டப்பட்ட 7 கண்மாய்கள் பின்னர் 9 கண் மதகாக விரிவாக்கப்பட்டது*' என்ற கல்வெட்டு மதகுச் சுவரில் புதைக்கப்பட்டுள்ளது.

**விளக்கம் :** நேர்காணல் - நூலாசிரியர், மு. சோமசுந்தரம், சி. தியாகராசன், M. கிருஷ்ணராஜ், கோ. வரதராஜுலு, சேதுராமன், D.C.E.

## நன்செய் நிலங்கள் விரிவாக்கம்

லெஸ்பர்தாவின் அரும்பணிகள் இத்துடன் நிற்கவில்லை. நன்செய் [1] நிலங்களின் பரப்பை அதிகரிக்க, கரம்பு நிலங்களையும், திடல்களையும், நன்செய் நிலங்களாக மாற்ற ஒரு யுக்தி செய்தார். புதிதாக நன்செய் நிலங்களை உருவாக்குபவர்களுக்கு நிலவரிச் சலுகையை ஏற்படுத்தினார். இதனால்

1833இல் புதிதாக 27 ஹெக்தார் நன்செய் நிலம் அதிகரித்தது.

1834இல் புதிதாக 43 ஹெக்தார் நன்செய் நிலம் அதிகரித்தது.

1835இல் புதிதாக 67 ஹெக்தார் நன்செய் நிலம் அதிகரித்தது.

1837இல் புதிதாக 6850 ஹெக்தார் நன்செய் நிலம் அதிகரித்தது.

1838இல் புதிதாக 6981 ஹெக்தார் நன்செய் நிலம் அதிகரித்தது.

1839இல் புதிதாக 7654 ஹெக்தார் நன்செய் நிலம் அதிகரித்தது.

**குறிப்பு :** நிர்வாகி லெஸ்பர்தாவின் அரும்பணி தொலைநோக்குப் பார்வை கொண்டது. ஏனெனில், இவர் மாற்றலாகி சென்றபின்னர் கூட, இவரது அயராத உழைப்பு தொடர்ந்து பலன் அளித்துவந்தது.

---

நன்செய் நிலம் - நெல் விளையும் நிலங்கள்

புன்செய் நிலம் - நெல்லைத் தவிர்த்து வேறு தானியங்கள் பயிரிடப்படும் நிலம்.

நன்செய் நிலங்களின் பரப்பு குறையவில்லை. கூடிக்கொண்டேயிருந்தது. குறிப்பாக 1850லிருந்து 1860வரை ஏற்பட்ட காய்ச்சல் காலங்களிலும் கூட (நீர் அருந்தலான காலக்கட்டம்) விளைநிலங்கள் பரப்பு அதிகரித்துக் கொண்டே சென்றது.

1850 - 1853 - 5526 ஹெக்தார் அதிகரித்தது.
1855 - 1859 - 6412 ஹெக்தார் அதிகரித்தது.

காரைக்காலுக்கு வந்த சிறந்த நிர்வாகிகளின் (Administrateurs) முயற்சியால் விளைநிலம் அதிகரித்தும் கூட, நெற்கண்டு முதலின் சராசரி அளவு மாறவில்லை. மிராசுதாரர்களும், விவசாயிகளும், பழைய சாகுபடி முறையிலிருந்து எள்ளளவும் நகரவில்லை.

ஒரு ஹெக்தாருக்கு சராசரி கண்டு முதல்

| | | |
|---|---|---|
| 1832 | ..... | 1 ஹெக்தாருக்கு 1600 கிலோ |
| 1834 | ..... | 1 ஹெக்தாருக்கு 1200 கிலோ |
| 1836 | ..... | 1 ஹெக்தாருக்கு 715 கிலோ |
| 1848 முதல் 1854 வரை | ..... | 1 ஹெக்தாருக்கு 1700 கிலோ |
| 1855 முதல் 1859 வரை | ..... | 1 ஹெக்தாருக்கு 1500 கிலோ |
| 1860 முதல் 1864 வரை | ..... | 1 ஹெக்தாருக்கு 1300 கிலோ |
| 1865 முதல் 1870 வரை | ..... | 1 ஹெக்தாருக்கு 1500 கிலோ |

(ஆதாரம் - கொர்தியே, காரைக்கால் புள்ளிவிவரம்)

**குறிப்பு** : சராசரி கண்டுமுதல் 1 மாவுக்கு 7 கலம் - 1 கலம் நெல் விலை 55 காசு!

## நூலாறு மேம்பாட்டுத் திட்டம் [1]

1848இல் காரைக்கால் மாகாணத்தில் விளைநிலங்களின் பரப்பு அதிகரித்ததால், பாசன நீர் மேலும் அதிகமாகத்

1 *Jacques WEBER - Les Etablissments Francias en Inde au XIX^e Siecle - Librairie de l'Inde, Paris - 1988 - P. 865*



14 : அரசலாறு - நூலாறு - ஆண்டார் பந்தி



15 : நூலாறு - ஆண்டார் பந்தி

தேவைப்பட்டது. ஆகவே, பிரிட்டிஷ் இந்திய அரசாங்கத்துடன் நீண்டகால பேச்சுவார்த்தைக்குப்பின், நூலாற்றிற்கு வரும் நீரின் அளவை அதிகரிக்க ஓர் ஒப்பந்தம் செய்யப்பட்டது.

இதன்படி, ஆண்டார்பந்தி கிராமத்தில் அரசலாற்றில் மட்டும் நூலாறு பிரியுமிடத்தில் ஒரு மதகு கட்டி (நீரடைக்கும் கதவுகளுடன் Shutters), காரைக்கால் பகுதிக்குத் தேவையான நீரை நூலாற்றில் திருப்பிவிட ஒப்பந்தம் கையெழுத்தாகியது. கட்டுமான செலவில் ஐந்தில் இருமடங்கை (2/5) பிரெஞ்சிந்திய அரசு ஏற்றுக் கொண்டது.

1851இல் மதகு கட்டி முடிந்தது! பிரெஞ்சிந்திய அரசும் தனது பங்கு 7419Fஐ செலுத்திவிட்டது. இதன் விளைவு என்ன?

காரைக்கால் பகுதிக்கு வரும் நீரின் அளவு மேலும் பெருமளவு குறைந்துவிட்டது. இதனைக் கண்டு துடிதுடித்துப் போன காரைக்கால் நிர்வாகியும் பொறியாளர் வால்டருடன் ஆண்டார்பந்தி சென்று பார்க்கும்போது, அதிர்ச்சியடைந்தனர். ஒப்பந்தப்படி அரசலாற்றில் மட்டும் கட்டவேண்டிய ஒரே ஒரு மதகுக்குப் பதில் அரசலாற்றில் ஒரு மதகும், நூலாற்றில் ஒரு மதகும் கட்டப்பட்டிருந்தன. (இது ஒப்பந்தத்திற்குப் புறம்பானது.) அதாவது, ஆண்டார்பந்தி கிராமத்தில் உள்ளவை : -

அரசலாற்று மதகு விவரம் :

12 கண்மாய் - 8 அடி x 5 அடி அளவுள்ள 12 அடைப்புக்கதவுகள் (Shutters)

நூலாற்று மதகு விவரம் :

6 கண்மாய் - 8 அடி x 5 அடி அளவுள்ள 6 அடைப்புக்கதவுகள்.

*குறிப்பு :* இனிமையான இயற்கைக்காட்சி - அனைவரும் பார்க்கவேண்டிய இடம்!

இதனால் நூலாற்று மதகின் அனைத்துப் பலகைகளையும் போட்டால், காரைக்காலுக்கு நீரே வராது! இதுதான் நடந்துள்ளது! இனி என் செய்வது? இதுதான் நூலாற்று ஒப்பந்தத்தின் கதை!

இந்நயவஞ்சகத்தால் காரைக்கால் விவசாயம் பெரிதும் பாதிக்கப்பட்டது.

**குறிப்பு** : நூலாற்றுப் பாசனத்தில் 46 கிராமங்களும், 26 வாய்க்கால்களும் இப்பகுதியில் உள்ளன. இன்று வரை இதன் பாதிப்பு நீடிக்கிறது.

இக்காலக்கட்டத்தில் பிரான்சில் ஒரு பலம் பொருந்திய நல்லாட்சி ஏற்பட்டது!

### பிரான்சில் ஆட்சி மாற்றம்

1848லிருந்து 1852 வரை பிரான்சில் இரண்டாவது குடியரசு ஆட்சி நடைபெற்றது. (2ème Republique).

அரசியல் கட்சிகளுக்கிடையே ஏற்பட்ட உட்கட்சிப் பூசல்கள் காரணமாக இந்த ஆட்சி 1852இல் கவிழ்ந்தது. அதைத் தொடர்ந்து, 3ஆவது நெப்போலியன் மாமன்னர் ஆட்சி (Empire) ஏற்பட்டது.

மாமன்னர் உயர்குணம் படைத்தவர். மக்களிடம் பேரன்பு பூண்டவர். நாட்டின் முன்னேற்றத்திற்கு அயராது உழைத்தவர். அவர் பிரெஞ்சிந்தியாவுக்கு ஒரு சிறந்த குவர்னர் “வெர்னியாக்” (Verniac)ஐ நியமித்தார்.

இவர் மக்கள் பற்றும், செயல்திறமையும் மிக்கவர். புதிய குவர்னர் விவசாயிகளின் நிலைமையையும், விவசாயத்தின் நிலைமையையும் ஆராய்ந்து பல திட்டங்கள் தீட்டினார்.

- தரிசு நிலங்களையும், கரம்பு நிலங்களையும் நன்செய் நிலங்களாக மாற்றுதல்.
- புன்செய் பயிர்களை விரிவுபடுத்துதல், தென்னை, வாழை, இதர பழ மரங்களை அதிகமாகப் பயிரிடுதல்.
- காய்கறி உற்பத்தியைப் பெருக்குதல்.
- கால்நடை பராமரிப்பு - மாடு, ஆடு மற்றும் பயனுள்ள மிருகங்கள் / கோழி, வான்கோழி போன்ற பறவைகள் வளர்ப்பு.
- புதிய சாகுபடி முறையை அறிமுகப்படுத்துதல்.

வெர்னியாக் குவர்னராக இருந்த காலம் விவசாயிகளுக்கு ஒரு பொற்காலம்! காரைக்கால் மட்டுமல்ல, பிரெஞ்சிந்தியா முழுவதும் விவசாயிகளின் நிலை உயர்ந்தது.

குவர்னர் வெர்னியாக், காரைக்காலில் பயிரிடும் நிலங்களின் பரப்பை மேலும் விரிவாக்கினர். இதன் தொடர்பாகப் பாசனநீர் மேலும் அதிகமாகத் தேவைப்பட்டதால், பல சிறந்த நீர்ப்பாசன திட்டங்களை ஏற்படுத்தினார். அவைகளில் குறிப்பிடத்தக்கவை மூன்று :

1. நண்டலாற்றில் ஒரு மதகு (நல்லாத்தூரில்)
2. வாஞ்சியாற்றில் ஒரு மதகு (இலிங்கத்தடியில்)
3. திருமலைராஜனாற்றில் ஒரு மதகு (மானாமுட்டியில்)

இதில் முதல் திட்டம் தொடக்கத்திலேயே கைவிடப்பட்டது. ஏனெனில் "மணவாங்கல் மதகு" சிறந்த முறையில் எல்லாத் தேவைகளையும் நிறைவேற்றுவதால்.

**வாஞ்சியாறு இலிங்கத்தடி மதகு**

வாஞ்சியாற்றில் மதகு அமைக்கும் திட்டம் 1858லிருந்து நீண்டுகொண்டே சென்றது. காரணம், புதுச்சேரி மேலிடம் வழக்கம்போல் இதிலும் ஆர்வம் காட்டவில்லை. தேவையான பணம் தருவதிலும் தாமதம் செய்தது.

காரைக்கால் நிர்வாகி "தெக்ஸ்த்தோர் தெரவிசி" புதுச்சேரி குவர்னருக்குப் பல கடிதங்கள் எழுதினார். அதில் குறிப்பாக, "வாஞ்சியாறு மதகு கட்டுவதைத் தாமதப்படுத்தினால், பின்னர் இதனைச் சரிசெய்யவே முடியாது" என எச்சரித்தார்.

ஆக, 1865இல் தொடங்கி 1868இல் இத்திட்டம் நிறைவேறியது. இருப்பினும், வாஞ்சியாறு மதகு சிறப்பாக அமைந்ததாகப் பொறியாளர்கள் பாராட்டினர்.

இதில் 3 கண்மாய்களும், 3.65 மீ x 2. 65 மீ அளவிலுள்ள மூன்று அடைப்புக் கதவுகளும் (Shutters) உள்ளன.



16 : வாஞ்சியாறு மதகு ( இலிங்கத்தடி ) பிள்ளைத் தெரு வாசல்

இம்மதகின் மேல்பகுதியிலிருந்து ''தலத்தெரு வாய்க்கால்'' பிரிந்து கீழ்த்திசை நோக்கி ஓடுகிறது.

மதகின் கீழ்பகுதியில் சுப்பராயபுரம் வடிவாய்க்கால் ஆற்றில் கலக்கிறது.

மதகு சுவரின் கிழக்குப் பக்கத்தில் ஒரு வட்டமான இரும்பு சீல் பதிக்கப்பட்டுள்ளது. அதில் Nivellement General எனப் பொறிக்கப்பட்டுள்ளது. அத்துடன் 1865 எனப் பொறிக்கப்பட்ட கல்வெட்டும் உள்ளது.

மதகுக்குக் கிழக்கே, ஆற்றோரமாக ஒரு கலைநயமிக்க (கற்சிலை) சிவலிங்கம் மக்கள் வழிபாட்டில் உள்ளது. இதன் காரணமாகவே இந்த இடம் இலிங்கத்தடி என்று அழைக்கப்படுகிறது. இவையனைத்தும் பிள்ளைத்தெரு வாசல் கிராமத்திலுள்ளது.

**நேர்காணல்:** நூலாசிரியர், M. சோமசுந்தரம், S. தியாகராசன், M.S. ரம்யா, M.S. ராகப்பிரியா, M.S. ராஜஸ்ரீ, செ. வேல்முருகன்

## மானாமுட்டி மதகு [1]

இம்மதகின் வேலைகள் 1857இல் தொடங்கி 1864இல் சிறப்பாக முடிவடைந்தன. மானாமுட்டியின் திருமலைராஜனாற்றில் கட்டப்பட்ட இம்மதகு, காரைக்கால் பகுதியில் மூன்றில் ஒரு பங்கு (1/3) விளைநிலங்களுக்குப் பாசனநீர் அளிக்கிறது.

திருமலைராஜனாறு மதகில் 11 கண்மாய்களும் 22 பலகை அடைப்புகளும் (ஷட்டர்ஸ்) உள்ளன.



17 : மானாமுட்டி மதகு திருமலைராஜனாறு

சரக்கு ஏற்றிய படகு, தோணி செல்வதற்காகக் கண்மாய்கள் அகலமாகவும் உயரமாகவும் உள்ளன.

மதகின் மேல்பகுதியில் வடக்குப்பக்கத்தில் பிரியும் நிரவி வாய்க்காலில் ஒரு கண்மாயும், இரண்டு பலகை அடைப்புகளும் உள்ளன.

மதகிற்கு மேல்பகுதியில் சிறிது தூரம் மேற்கே தென்பக்கமாக போலகம் வாய்க்கால் பிரிகிறது.

1 மானாமுட்டி தற்காலத்தில் மானாம்பேட்டை என வழங்குகிறது.



18 : நிரவி வாய்க்கால் மானாமுட்டி மதகு
( திருமலைராஜன் ஆற்றிலிருந்து ) நன்றி : எம். பன்னீர்

**மதகினால் ஏற்பட்ட நீர்வழி வசதி**

மதகுக்கு மேல் பகுதியில், ஆற்றிற்கு வடக்கே பிரியும் நிரவி வாய்க்கால், முல்லையாற்று வழியாக அரசலாற்றில் சேருகிறது.

ஆற்றிற்குத் தெற்கே பிரியும் போலகம் வாய்க்கால் பிராவிடையானாற்றில் கலக்கிறது. (அக்காலத்தில் பிராவிடையானாறு வெட்டாற்றில் விழுந்துள்ளது. இப்போது நேரே கடலில் கலக்கிறது.)

இதன் பயனாக, அக்காலத்தில் தமிழ்நாட்டிலிருந்து காரைக்காலுக்கு ஆற்றின் வழியே தோணிகள் மூலம் கொண்டுவரப்படும் நெல்மூட்டைகள், நேரே காரைக்காலுக்கும், நாகூருக்கும் சென்றடையும் வாய்ப்பை அளித்தது.

அ) திருமலைராஜனாறு - நிரவி வாய்க்கால் - முல்லையாறு - அரசலாறு (காரைக்கால்)

ஆ) திருமலைராஜனாறு - போலகம் வாய்க்கால் - பிராவிடையானாறு - வெட்டாறு (நாகூர்)

ஆக இம்மதகு, காரைக்கால் வர்த்தகத்திற்குப் பெரிதும் உதவியது. மதகு கட்டுமானச் செலவு 30332 F ஆகும். இதில் மூன்றில் இருமடங்கை (2/3) மிராசுதாரர்கள் செலுத்தியுள்ளார்கள்.

ஆகவே வெர்னியாக் குவர்னர் காலத்தில் விவசாயத்துக்கு அளித்த முன்னுரிமை காரணமாகவும், பாய்கால் வடிகால் மேம்பாட்டுத் திட்டங்களினாலும் உழவுத் தொழில் செழித்தது, முன்னேறியது!

## புன்செய் பயிர்கள்

குவர்னர் வெர்னியாக் நெல் சாகுபடிக்கு மட்டுமல்லாமல் புன்செய் சாகுபடிக்கும் நிறைய முக்கியத்துவம் அளித்தார். இதனை இப்பகுதியில் பயிர் செய்த நிலப்பரப்பே சான்று பகரும்.

✳ நெல்லும், இதர தானியங்களும் பயிரிட்ட பரப்பு (ஹெக்தார் அளவில்)

| ஆண்டு | நெல் பரப்பு (ஹெக்தார்) | இதர தானியம்[1] (ஹெக்தார்) |
|---|---|---|
| 1837-39 | 6460 | 485 |
| 1845-49 | 7045 | 343 |
| 1853 | 7127 | 348 |
| 1856 | 7421 | 688 |
| 1858 | 7460 | 730 |
| 1859-1864 | 7176 | 658 |
| 1865-1869 | 7505 | 634 |

1 இதர தானியம் என்பது கம்பு, கேழ்வரகு, உளுந்து, பச்சைப்பயறு முதலியன.

✳ மற்ற பணப்பயிர்கள் பயிரிட்ட பரப்பு (ஹெக்தார் அளவில்)

| ஆண்டு | அவுரி | புகையிலை | வெற்றிலை | காய்கறிகள் | பழ மரங்கள் | மொத்தம ஹெ ஆ. |
|---|---|---|---|---|---|---|
| 1837-1839 | 25 | 4.3 | 9 | 115 6 | 113 | 267 |
| 1845-1849 | 13.4 | 2.4 | 13.4 | 79.4 | 138 | 246.6 |
| 1853 | 30 | 0.3 | 12 | 103 | 138 | 283.6 |
| 1856 | 28 | 2 | 17 | 138 | 266 | 451 |
| 1858 | 20 | 57 | 17 | 125 | 311 | 530 |
| 1859-1864 | 35 | 9.8 | 28.5 | 125 | 311 | 509.4 |
| 1865-1869 | 40 | 6 | 21 | 146 | 311 | 524 |

ஆக,

**உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்**
**தொழுதுண்டு பின்செல் பவர்**

என்ற வள்ளுவன் காட்டிய பெருமிதம் உழவர்களிடையேயும், மிராசுதாரர்களிடையேயும் நிலவியது, வெர்னியாக் காலத்தில்!



# 10

# மீன் வளம்

மீன்பிடித்தொழில் மக்களின் உணவுத் தேவையைப் பெருமளவில் பூர்த்தி செய்யும் ஓர் உயிர்த்தொழிலாகும். இதனாலேயே, மீனவர்கள் தங்கள் உயிரைப் பணயம் வைத்து தங்கள் பயணத்தை மேற்கொண்டு, இயற்கைச் சீற்றங்களுடன் போராடி சிறந்த "பசிப்பிணி மருத்துவராக" விளங்குகின்றனர்.

காரைக்கால் பிரதேசத்தில் சுமார் 16 கி.மீ. நீள கடற்கரையுள்ளது. வடக்கிலிருந்து தெற்கு நோக்கி நேராக அமைந்துள்ள இக்கடற்கரை மணற்பாங்காகவும், தாழ்வாகவும், இலேசான சரிவாகவும் மீன்பிடித்தொழிலுக்கு ஏற்றதாகவும் அமைந்துள்ளது! இருப்பினும் கரையோரமாகச் சிலசமயம் "நீரோட்டம்" வருவதுண்டு. இந்நீர்ச்சுழலில் அகப்பட்டு இறந்துள்ளனர் சிலர்!

1825இல் காரைக்கால் பகுதியில் முக்கிய மீனவக் கிராமங்களும், கட்டுமரங்களும் :

**மீனவக் கிராமங்கள்** [1]

| | | |
|---|---|---|
| காரைக்கால் மேடு | - | 40 கட்டுமரங்கள் |
| கிளிஞ்சல்மேடு | - | 30 கட்டுமரங்கள் |
| காசாக்குடி | - | 10 கட்டுமரங்கள் |
| கோட்டுச்சேரி | - | 10 கட்டுமரங்கள் |
| மண்டபத்தூர் | - | 3 கட்டுமரங்கள் |
| காளிகுப்பம் | - | 2 கட்டுமரங்கள் |
| கருக்களாச்சேரி | - | 10 கட்டுமரங்கள் + சரக்கு ஏற்றும் படகுகள், 7 சிறுகப்பல்கள் |
| வாஞ்சியூர் | - | 20 கட்டுமரங்கள் |

நன்றி; *1 Joseph CORDIER - Historique et Statistique de KARIKAL - Presentation de François GROS - Institut Français de Pondichéry - 1971*



19 : கருக்களாச்சேரிக் கோட்டை (1760இல் இருந்தபடி)

நன்றி : Bibliothèque Nationale, PARIS.

**கருக்களாச்சேரி**

காரைக்கால் மீனவர்கள் மீன்பிடித் தொழிலில் ஈடுபடுவர். ஆனால் கருக்களாச்சேரியில் மட்டும், ஒரு பிரிவினர் கடல் வணிக ஏற்றுமதி இறக்குமதி தொடர்பான வேலைகளிலும் ஈடுபட்டனர். அவர்களிடம் அக்காலத்தில் 7 மரக்கலங்கள் இருந்துள்ளன. இவர்கள் தங்கள் மரக்கலங்களின் மூலம் அரிசி, எண்ணெய், கருவாடு போன்ற பொருள்களை இலங்கைக்கு ஏற்றுமதி செய்துள்ளனர்.

1860இல் கருக்களாச்சேரியில் ஒரு கோட்டை இருந்தது. அது கருக்களாச்சேரிக் கோட்டை அல்லது காரைக்கால் கோட்டை என அழைக்கப்பட்டது.

தற்காலத்தில் அங்குக் கோட்டையும் இல்லை. கோட்டை இருந்த சுவடும் இல்லை.[1]

**வலைகள் :** இங்குப் பயன்படுத்தப்படுபவன:

| | |
|---|---|
| பெருவலை | இருவலை |
| வெள்ளவலை | பட்சுவலை |
| இடவலை | கோவலை |

## மீன் விற்பனை

நல்ல மீன்கள் விற்பனையுண்டு. ஆனால் மீன் விலை மிகக்குறைவு. சான்றாக,

- காரைக்கால்மேட்டில் 40 கட்டுமரங்கள், 27 வலையுடன் மீன் விற்ற ஒருநாள் வருமானம் 21 F ஆகும். (சுமார் 8 ரூபாய் 40 காசு).
- கிளிஞ்சல்மேடு - 30 கட்டுமரங்கள், 23 வலை - ஒருநாள் வருமானம் - 16 F ஆகும். (சுமார் 6 ரூபாய் 40 காசு).
- காசாக்குடி - 10 கட்டுமரங்கள், 15 வலை. - ஒருநாள் வருமானம் - 11 F ஆகும். (சுமார் 4 ரூபாய் 40 காசு).

ஆக, மீனவர்களின் பணவருமானம் மிகக் குறைவு. இருப்பினும் வயிறார உணவு சாப்பிடுவார்கள். (சாப்பாட்டிற்கு நன்கு செலவழிப்பார்கள். ஆகையால் அவர்கள் உடல் திடமாக இருக்கும். இதனால் எதற்கும் அஞ்சுவதில்லை!)

மீனவர்கள் அன்றாடம் பிடிக்கும் மீன்களில் கால்பகுதியை மட்டும் அன்றே விற்பனைக்கு அனுப்புவர். மீது முக்கால் பகுதி மீன்களைக் கடல் மணலில் காயவைத்து, கருவாடு தயாரிப்பார்கள்.

---

1. இந்நூலாசிரியரும், அவரது இனிய நண்பர் தெய்வத்திரு எம்.வி. பாலனும் ஒருநாள் முழுவதும் அவ்விடம் சென்று களப்பணி செய்ததில் எவ்விதத் தடயமும் கிடைக்கவில்லை.

கருவாடு ஏற்றுமதியால் நல்ல இலாபம். பெரும்பாலும் இலங்கைக்கு ஏற்றுமதியாகும்.

## தொழில்

ஆண்கள் மீன்பிடிக்கக் கட்டுமரங்களில் சென்றுவிடுவர். பெண்கள் மீன்களைப் பக்கத்து ஊர்களுக்குத் தலைச்சுமையாக எடுத்துச் சென்று விற்று வருவார்கள்.

சூரியன், காற்று வீசும் திசை, பருவக்காற்று, மேக ஓட்டம், அலையின் தன்மை இவை அனைத்தையும் கணித்து வானிலையை அறிந்துகொண்டு தொழிலுக்குச் செல்வார்கள் மீனவர்கள்! அவர்களது வானிலை முன்கணிப்பு 99% சரியாகவேயிருக்கும்.

ஆபத்தின்றி நலமுடன் வீடு திரும்ப மீனவர்கள் முருகன், ஆஞ்சநேயர், கிழக்கத்தியார் (கடல் தேவதை), கொடிமரத்தாண்டவர், குட்டியாண்டவர், இரேணுகாதேவி, வீரன், பெரமன் ஆகிய தெய்வங்களை வழிபடுவார்கள்.

## மீனவர்களின் வரலாறு

காரைக்கால் மீனவர்களைப் பட்டினவர், பரதவர், செட்டியார், மக்குவா (macoua) என்று அழைப்பார்கள். "ஆரிய செட்டியார்" என்ற சிறப்புப் பெயரும் இவர்களுக்குண்டு.

16ஆம் நூற்றாண்டிலிருந்து சோழமண்டலக்கரைக்கு (இந்தியா) வந்த ஐரோப்பியக் கப்பல் மாலுமிகளுடனும், அதன் பின்னர் வந்த அரேபியா, மத்திய தரைக்கடல் பகுதியிலிருந்து வந்த மாலுமிகளுடனும் இவர்களுக்குத் தொடர்பு இருந்ததுண்டு. அவர்களிடமிருந்து சில தொழில் நுணுக்கங்களைக் கற்றுள்ளனர். மேலும், வந்த வெளிநாட்டு மாலுமிகள் ஆப்பிரிக்காவின் கிழக்குக் கடற்கரையிலுள்ள மீனவர்களுடன் தொடர்புடையவர்களானதால், அங்கு மீனவர்களின் பெயர் மக்குவா (macoua) என்பதால், அதே பெயரில் நமது மீனவர்களையும் அழைத்துள்ளனர். இதிலிருந்துதான் மக்குவா என்ற பெயர் வந்ததாகத் தெரிகிறது.[1]

1 நன்றி . *Les pecheurs Patnavas de Karikal* - பி. லாம்பேஜா என்ற காரைக்கால் நிர்வாகி *(Administrateur)*யின் ஆய்வுநூல் - பக்.19.

ஆதிகாலத்திலிருந்தே, பட்டணவர்கள் மீன்பிடித்தொழில் செய்தவர்களல்லர். பன்னெடுங்காலத்திற்கு முன்னர், அவர்கள் உள்நாட்டில் பட்டு நெசவும், பட்டு வணிகமும் செய்து வாழ்ந்தவர்கள். பின்னர் சமுதாயத்தில் ஏற்பட்ட கலகங்களால், கடற்கரைக்குத் துரத்தப்பட்டனர். இங்கு வந்தவர்கள் முதலில் சிரமப்பட்டுப் பின்னர் மீன்பிடித்தொழிலில் முன்னேறலாயினர் என்பது ஆய்வாளர் சிலரின் கருத்து.[1] பட்டு என்ற சொல்லில் பட் +.... என்பது இணைந்த சொல்லே பட்டணவர் ஆகும் என்பது அவர்களது முடிவு.

பட்டணவர்களிடம் இரண்டு பெரும் பிரிவுகள் உள்ளன. அவை "பெரிய பட்டணவர்", "சிறிய பட்டணவர்". ஒரு பிரிவு மற்றொரு பிரிவு வீட்டில் உண்பது கிடையாது. திருமணத் தொடர்பும் கிடையாது.[2]

## மீனவர் சமுதாயக் கூட்டமைப்பு

காரைக்கால் பகுதியில் 8 மீனவக் கிராமங்கள் உள்ளன (Macouarie). அதேசமயம், சோழமண்டலக்கரையில் தெற்கில் கன்னியாகுமரியிலிருந்து வடக்கே பரங்கிப்பேட்டைவரை 64 மீனவக்கிராமங்கள் உள்ளன. இந்த 64 ஊர்களும் ஒன்றிணைந்து ஒரே "மீனவர் சமுதாயக் கூட்டமைப்பு" ஏற்படுத்தி, அதன் வழியே மீனவர்கள் தொடர்பான பொதுநலனுக்காகப் பாடுபடுகின்றனர். இந்தச் சமுதாயக் கூட்டமைப்பில் காரைக்காலிலுள்ள 8 மீனவக்கிராமங்களும் இணைந்துள்ளன.

இச்சமுதாயக் கூட்டமைப்பு அக்காலத்தில் தஞ்சாவூர் மன்னனைத் தங்கள் ஆளுநராக ஏற்றுக் கொண்டிருந்தது. அரசரும் தனது பிரதிநிதி ஒருவரை - நம்பியார் என்று அழைக்கப்படுவார் - நாகப்பட்டினத்திற்கு (நம்பியார்க் குப்பம்) அனுப்பிவைத்து, சமுதாயக் கூட்டமைப்பின் பிரச்சினைகளைக் கவனிக்கச் செய்தார். காரைக்கால் மீனவர்களையும், நம்பியார் அடிக்கடி பார்வையிட

1 நன்றி : *Les pecheurs Patnavas de Karikal* - பி. லாம்பேஜா என்ற காரைக்கால் நிர்வாகி *(Administrator)*யின் ஆய்வுநூல் - பக்.29.

2. மேற்படி நூல் - பக். 20.

வருவார். நம்பியார் தங்கி, தனது கடமையில் ஈடுபடக் காரைக்கால் மேட்டில் ஒரு சத்திரம் இருந்தது.

## காரைக்காலில் கிடைக்கும் விதவிதமான கடல்மீன்கள்

அவற்றில் சில :

| | |
|---|---|
| வஞ்சனை | வவ்வால் |
| கோலா | கருவவ்வால் |
| பாறை | சுறும்பு |
| திருக்கை | தேங்கா பாறை |
| குருவி திருக்கை | கண்ணாடிப் பாறை |
| சுறா | உரிபாறை |
| கொம்பன் சுறா | கட்டைப்பாறை |
| வள்ளுவன் சுறா | செம்பாறை |
| இறால் | காணாங்கெழுத்தி |
| சிங்க இறால் | நெத்திலி |
| சொக்கன் | சென்னக்குண்ணி |
| கரவா | காறை |
| பண்ணிமீன் | உளுவை |
| செம்பாரி | நகரை |
| சாத்தான்குட்டி | கார்த்திகை வாளை |
| முதல்கெண்டை | கவலை... |
| நண்டு | |



# 11

# நிலவரி

நிலவரி நெல்லாகவே செலுத்தப்பட்டது (பணமாக அல்ல). கண்டு முதலாகும் நெல்லில், பயிர்ச் செலவிற்கான செலவு 14 சதவிகிதம் கழித்துவிட்டு, மீதி நெல்லைச் சமபாதியாக (50 சதவிகிதம்) அரசும், மிராசுதாரர்களும் பிரித்துக் கொள்வார்கள். நிலவரியாகச் செலுத்தப்பட்ட நெல், அரசு ஊழியர்கள் மூலம் சேமிக்கப்பட்டு, விற்பனை செய்து[1] அரசு கருவூலத்தில் (Tresor) சேர்ப்பிக்கப்படும்.

இந்நிலவரி விகிதம் (50 சதவிகிதம்) மிராசுதாரர்களையும் விவசாயிகளையும் பெரிதும் வாட்டியது. நிலவரிச் சுமையை எதிர்த்து, பல போராட்டங்கள் நடந்தன. புதுச்சேரி கவர்னருக்குப் பல விண்ணப்பங்கள் அனுப்பப்பட்டன. அதில் ஒன்றில், "நாங்கள் இரவு பகலாகக் கண்விழித்து, வியர்வை சிந்தி சேமித்த பலனை, வரி என்ற பெயரில் அபகரித்துக்கொண்டு எதற்கும் பயனற்ற ஐரோப்பிய அதிகாரிகள், கரோஸ் வண்டியில் (அலங்காரக் குதிரை வண்டியில்) வீதிதோறும் பவனி வருவதில் என்ன நியாயமுள்ளது?

ஒரு நாளைக்கு ஒரு வேளை கஞ்சிகூடக் குடிக்க வழியில்லை! ஆண்களுக்கு ஒரு சாண் ஆடை கிடைப்பதே அரிதாயிருக்கிறது. 'கையது கொண்டு மெய்யது போர்த்தி'ப் பெண்கள் வீட்டில் அடங்கிக் கிடக்கின்றனர்.

கிராமங்கள் வறுமைத்தீயில் வாடும்போது, ஐரோப்பிய குமாஸ்தாக்களின் அட்டகாசத்தாலும், வரிச்சுமையாலும் பாலூட்டும் தாயாக விளங்கும் விவசாயத்திலிருந்து மக்கள் இரக்கமின்றி

1 நிலவரியாகச் சேமித்த நெல்லை தோணிகள் மூலம் புதுச்சேரிக்கு அனுப்பி அங்கே விற்றுப் பணத்தைப் புதுச்சேரி கருவூலத்தில் சேர்த்துவிடுவார்கள். காரைக்கால் கருவூலத்திற்கு அப்பணம் திரும்புவதில்லை.

விரட்டடப்படுகிறார்கள் என்பதையும், கொடுமையான வரி விகிதம் குறைக்கப்பட வேண்டும் என்பதையும் கனம் குவர்னர் துரையின் கவனத்திற்குத் தாழ்மையுடன் கொண்டு வருகிறோம்.''[1]

இதேபோன்று மற்றொரு விண்ணப்பத்தில், ''இப்பகுதியை ஆண்ட முஸ்லீம் சர்வாதிகாரி ஹைதர் அலி கூட மகசூலில் 30 சதவிகித பாகத்தை மட்டுமே நிலவரியாகப் பெற்றார். ஆகவே தற்போது வசூலிக்கப்படும் 50 சதவிகித நிலவரி கொடுமையிலும் கொடுமை'' எனக் கூறியிருந்தனர்.

''மேலும், பிரெஞ்சு அரசு இங்குள்ள பழக்க வழக்கங்களையும், மனுநீதியையும் மதிப்பதாகக் கூறுகிறது. மனுநீதியின்படி நிலவரி 1/6 பங்கு மட்டுமே. அதாவது 16.3 சதவிகிதம். ஆகவே, இந்த 50 சதவிகிதம் வரி விதிப்பு, பிரெஞ்சு சட்டத்தையும், இந்திய சட்டத்தையும் மீறிய செயலாகும்'' என்பதை ஒரு விண்ணப்பம் குறிப்பிட்டது. இருப்பினும் 1853 வரை நிலைமை மாறவில்லை.

## நிலவரி 25 சதவிகிதமாகக் குறைப்பு

1853இல் வெர்னியாக் என்பவர் புதுச்சேரி குவர்னராக நியமிக்கப்பட்ட பின், இக்கொடுமையான 50 சதவிகித வரிவிகிதத்தைக் கண்டு மனங்கலங்கினார். உடனடியாக ஒரு குழு நியமித்து, ஆய்வு செய்தபின், 1853 பிப்.19ஆம் தேதி அரசாணையின் (Arrete) படி நிலவரியைக் கண்டு முதலில் (செலவு நீக்கி) மீதியுள்ளதற்கு 25 சதவிகிதம் என நிர்ணயித்தார்.

## நெல்லுக்குப் பதில் பணமாக நிலவரி செலுத்துதல்

காரைக்கால் மாகாண விவசாயிகளும் மிராசுதாரர்களும் பயனடையும் நோக்கில், வெர்னியாக் பணமாக மட்டுமே இனி நிலவரி செலுத்தவேண்டும் என 1853 ஏப்.27இல் ஆணை பிறப்பித்தார். அத்துடன், காரைக்கால் பகுதியில் வசூல் செய்யப்படும் நிலவரி, ஆண்டொன்றிற்கு 155000F-ஐ மிஞ்சக்கூடாது எனவும் வரையறுத்தார்.

1. (ஆதாரம் : 1840 சன. 29இல் புதுச்சேரி குவர்னர் சைன்சிமோனுக்கு அனுப்பப்பட்ட புகார் விண்ணப்பத்திலிருந்து)

## புகழேணியின் உச்சியில் வெர்னியாக்

நிலவரியை மகசூலில் 25 சதவிகிதம் எனக் குறைத்ததோடு மட்டுமன்றி, அதைப் பணமாகவே செலுத்தலாம் என ஆணை பிறப்பித்த வெர்னியாக், மிராசுதாரர்களாலும், விவசாயிகளாலும், பொதுமக்களாலும் போற்றிப் புகழப்பட்டார்.

அவரைப் புகழ்ந்து பல கவிதைகள் வெளியாயின. அவற்றில் ஒன்றின் பகுதி :-

- மாட்சிமைமிகு வெர்னியாக் அவர்களே, நீங்கள்
- உங்கள் கருணையால் சூரியனை மிஞ்சிவிடுகிறீர்கள்!
- உங்கள் அமைதியால் சந்திரனை மிஞ்சிவிடுகிறீர்கள்!
- உங்கள் ஓயா உழைப்பால் விண்மீன்களை மிஞ்சிவிடுகிறீர்கள்!
- உங்கள் வற்றாத பேருதவிகளால், மேகங்களை மிஞ்சிவிடுகிறீர்கள்!
- உங்கள் எல்லையற்ற கருணையுள்ளத்தால் காமதேனுவை மிஞ்சிவிடுகிறீர்கள்!

பெருந்திரளாகக் கூடிய மக்கள், இக்கவிதையைச் சந்தத்துடன் பாடி, ஒரு தங்கக்காசு (டாலர்) அன்பளிப்பாக அளித்தனர் வெர்னியாக் குவர்னருக்கு!

## நில அளவைப் பதிவேடு

நிலவரி வசூலுக்குத் தேவையான, ஒவ்வொரு நிலத்தின் பரப்பு, நான்கெல்லை, மதிப்பு, தன்மை இவைகளைக் காட்டும் கதாஸ்தர் (Cadastre) நில அளவைப் பதிவேடு, காரைக்கால் மாகாணத்திற்கு இதுவரை உருவாகவில்லை. ஆகவே, 1806இல் ஆங்கிலேயர்கள் பயன்படுத்திய பைமாஷ் (Paymache) என்பதன் துணைக் கொண்டே நிலவரி வசூல் செய்யப்பட்டது.

## முக்கிய குறிப்பு

பைமாஷ் என்பது 1806இல் ஆங்கிலேயராட்சி காரைக்காலில் இருந்தபோது, ஏற்படுத்திய வரிவசூல் பெயர்ப் பட்டியலாகும். இது அரசு ஊழியர்களால், ஐரோப்பியரின்

மேற்பார்வையில் தயாரிக்கப்பட்டதாகும். இதில் போதுமான தகவலில்லை.[1]

இருப்பினும், கதாஸ்தர் (Cadastre) தயாரிக்கும் வேலை 1836 சூலை 18 - திங்கட்கிழமை தொடங்கியது. மிராசுதாரர்கள் அடங்கிய ஒரு குழு நியமிக்கப்பட்டது. 1836, 1837, 1838 ஆகிய ஆண்டுகளில் இவ்வேலை விட்டுவிட்டு நடைபெற்று வந்தது. 1838இல் முழுமையாக நின்றுவிட்டது!

இதேமாதிரி 1848இல் தொடங்கிய கதாஸ்தர் தயாரிப்பும் வெற்றி பெறவில்லை!! இறுதியாக கதாஸ்தர் தயாரிப்பு 1912-1917இல் முழுமையடைந்தது.



1 நன்றி - *J WEBER*

# 12

# இதர வரிகள்

நிலவரி நீங்கலாக அரசிற்கு வருவாயைப் பெருக்கும் இதர வரிகளும், ஆண்டு வருமானமும் 1830இல் :

- புகையிலைக் கடை குத்தகை : 8820F (குத்தகைதாரர் மட்டுமே புகையிலை தொடர்பான சுருட்டு, சிகரெட், பீடி, தாம்பூலப் புகையிலை ஆகியவற்றை விற்கலாம். ஒவ்வோர் ஊருக்கும் கடைகளின் எண்ணிக்கை முன்னரே அறுதியிடப்பட்டிருக்கும். புகையிலைக் கடையில் வெற்றிலை, பாக்குடன் வேறு பொருட்களும் விற்பார்கள். குத்தகைப் போட்டி பலமாக இருக்கும்.)
- கள்ளுக்கடை குத்தகை : 8431F ( மேற்கண்டபடியே )
- சாராயக்கடை குத்தகை : 2696F
- உப்புக்கடை குத்தகை : 24608F
- சுண்ணாம்புக் கிளிஞ்சல் குத்தகை : 588F
( ஆற்றில் கிளிஞ்சல் சேகரிக்கும் உரிமை )
- ஆற்றுமீன் பிடித்துக் கொள்ள குத்தகை : 546F
- முத்திரை போடும் குத்தகை : 562F
( கடைகளிலுள்ள நிறுத்தலளவைகள், நீட்டலளவைகள் )
- தானியம் அளக்கும் பறை, மரக்கால், படி முதலியவற்றுக்கு முத்திரை போடும் குத்தகை : 3276F
- அரசாங்கத் தோட்டங்கள் குத்தகை : 120F
- பதனி இறக்கும் குத்தகை : 1024F
- ஓடத்துறைக் குத்தகை : 141F

(படகு, தோணி மூலம் ஆற்றைக் கடப்பவர்களிடம் கட்டணம் வசூல் செய்து கொள்ளும் உரிமை).

---

ஆதாரம் *(Jacques WEBER - Un Etablissement Francais en Inde - Karikal 1832 - 1849 - memoire de maitrise - Aix - en-provence 1971 - P.78 - (Thanks - Nallam Clinic - Mini Conference Hall Library)*

# 13

# இயற்கைச் சீற்றங்கள்

இரண்டு ஆண்டுகளுக்கொரு முறை பெரும்பாலும் நவம்பர், டிசம்பர் மாதங்களில் காரைக்கால் பிரதேசத்தில் இயற்கைச் சீற்றங்கள் - புயல்காற்று, பெருவெள்ளம், அடாத அடைமழை ஆகியவை மக்களையும், விவசாயிகளையும் படாதபாடு படுத்திவிடும்! புவியியல் கொள்கையின்படி தவிர்க்க முடியாத ஒரு நிகழ்ச்சியேயாகும் இது! அவற்றில் குறிப்பிடத்தக்கவை பற்றிக் கீழே காண்போம்:-[1]

**1818 அக்டோபர் 24**

உக்கிரப்புயல், அதிவேகச் சுழற்காற்று, பெருமழை - மரங்கள் சாய்ந்தன, பயிர்கள் நீரில் மூழ்கின. சுமார் 20 ஆடு, மாடுகள் மாண்டன. மக்கள் பரிதவித்தனர்.

**1820 மார்ச் 20, மீண்டும் மார்ச் 30**

புயல், பேய்மழை - மேற்கண்ட அதே இழப்பும், பரிதவிப்பும். கடற்கரையில் பல மீன்பிடி படகுகளும், சரக்கேற்றிய தோணிகளும் கடலுக்கு அடித்துச் செல்லப்பட்டன. 3 பேர் இறந்தனர். பல மீனவக்குடிசைகள் காற்றில் பறந்தன.

**1827 டிசம்பர் 6**

பெரும்புயல் - மேற்கண்டவாறு - உயிர்ச்சேதமில்லை.

**1827 டிசம்பர் 17**

பெரும்புயல் - மேற்கண்டவாறு.

---

1 *Revue Historique de l'Inde Francaise - Vol.I.-P. 240*

**1828 டிசம்பர் 2**

கொடுமையான புயல், பலத்த சுழற்காற்று, இலேசான மழை - சேதம் அதிகம்.

**1830 டிசம்பர் 2**

மிகக் கொடுமையான புயல், சுழற்காற்று, பெருவெள்ளம், பேய்மழை - பயிர்கள் மூழ்கின. மரங்கள் சாய்ந்தன. பல வீடுகள் இடிந்தன, வயல்கள் இருக்குமிடம் தெரியவில்லை, கடற்கரையில் தோணி, படகுகள் பெரும் சேதம்.

அரசு நிவாரணம் : நிலவரி குறைப்பு, மிகச்சிறிய உதவித்தொகை மக்களுக்கு. குவர்னர் மெலே, பாரீஸ் அமைச்சருக்கு அறிக்கை அனுப்பினார்.

**1836 அக்டோபர் 30**

பலத்த புயல் - சேதம் மேற்கண்டவாறு அல்ல. பயிர்கள் மூழ்கின.

**1853 மார்ச் 26/27 இரவு**

கொடுமையான புயல் - அரசலாறு சீறிப்பாய்ந்து கடற்கரைச்சாலையை விழுங்கிவிட்டது. 4000-க்கு மேற்பட்ட மரங்கள் சாய்ந்தன. 100-க்கு மேற்பட்ட ஆடு, மாடுகள் இறந்தன. கூரைவீடுகள் தரைமட்டமாயின.

நிவாரணம் : அரசு சிறு உதவித்தொகை தந்தது; கூரைவீடு இழந்தவர்களுக்கும், கால்நடைகளை இழந்தவர்களுக்கும் தரப்பட்டது.

**1856 நவம்பர் 20 மற்றும் டிசம்பர் 9**

மீண்டும் மீண்டும் புயல், பெருமழை. மேற்கண்டபடியே பேரிழப்பு, பரிதவிப்பு, அரசு உதவித்தொகை, விவசாயிகள் பரிதவிப்பு.

**1858** (தேதி தெரியவில்லை)

பெருவெள்ளம் - அரசலாறு உடைப்பு (கொள்ளிடமும் உடைப்பு), வெள்ளம் - தெருவெல்லாம் தண்ணீர் - ஏழைமக்கள்

கோவிலில் அடைக்கலம், அங்கேயே உணவு. பல ஆடு, மாடுகள் மாண்டன. பயிர்கள் நீரில் மூழ்கின.

**1863 அக்டோபர் 19**

பெரும் புயற்காற்று, பேய் மழை. படகுகள், தோணிகள் கடலில் மூழ்கின. மீனவர்களின் குடிசைகள் காணாமற்போயின. வயல்களில் பெரும்சேதம்.

**1864 அக்டோபர் 19, 28, நவம்பர் 28**

முதல் பெரும் காய்ச்சல் - நீரின்றிச் சிறு பறவைகள் (பூக்களாங்குருவி, சிட்டு போன்றவை) மாண்டன. வயல்கள் வெடிப்பு, குடிதண்ணீர்ப் பஞ்சம், பிறகு பெருவெள்ளம் - ஊரே வெள்ளக்காடு, பாலங்கள், சாலைகள் அடித்துச் செல்லப்பட்டன. தொடர்ந்து பெரும்புயல்.

**1865 நவம்பர் 25, 26, 27**

புயல், தொடர்ந்து பேய்மழை. படகுகள், தோணிகள் பல மூழ்கின. பெரும் சேதம்.

**1871 நவம்பர் 6-லிருந்து 16வரை**

முதலில் பலத்த புயல், தொடர்ந்து பேய் மழை, எங்கும் வெள்ளம், பலத்த காற்று. மரங்கள், கூரைவீடுகள் விழுந்தன. அதேமாதிரி மருத்துவமனை, துறைமுக அலுவலகம், அக்கரைவட்டம், நிரவியில் பெரும் சேதம். 5 பிணங்கள் கண்டெடுக்கப்பட்டன. காரைக்கால் நிர்வாகி மாளிகைக்கும் பெருஞ்சேதம்.

1818லிருந்து 1871 வரை 53 ஆண்டுக் காலத்தில் ஏற்பட்ட புயல் வெள்ளக் காலக்கட்டம் :

| | | |
|---|---|---|
| நவம்பர் | - | 15 தடவை |
| அக்டோபர் | - | 5 தடவை |
| டிசம்பர் | - | 5 தடவை |
| மார்ச் | - | 3 தடவை |

இன்றும் இதே நிலைதான் என்பது வேதனையே!

**முக்கியமான குறிப்பு**

அண்டத்தில் சூரிய குடும்பத்திற்கு அப்பால் சுழலும் கிரகங்கள் வரை தனது ஆராய்ச்சியை நடத்தும் இன்றைய அறிவியல் முன்னேற்றக் காலத்தில்கூட, 2004 சுனாமி ஆழிப்பேரழிவும் (கடல்கோள்), 2005 தொடர் பேய்மழை, வெள்ளங்களும், காரைக்கால், தமிழ்நாடு மக்களை எவ்வளவு பாழ்படுத்தியது என்பதை யாவரும் அறிவர். இதற்கு உதவிசெய்ய, எத்தனை ஹெலிகாப்டர்! எத்தனை இராணுவவீரர்! எத்தனை உணவுப் பொட்டலம்!... எவ்வளவு நிவாரணம்! அரசிடமிருந்து - உலக நாடுகளிலிருந்து நாம் கேட்காமலேயே உதவிகள்!

ஆனால் சுமார் 150 ஆண்டுகளுக்கு முன் நாளிதழ், வானொலி, தொலைக்காட்சி இல்லாத காலத்தில், எவ்வித உதவியும் இல்லாமல், எவ்வித நிவாரணமும் இல்லாமல், அக்கால மக்கள் நம்மைவிட. எத்தனை மடங்கு அதிகமாக அவதியுற்றிருப்பர் என்பதை நினைக்கும்போது உள்ளம் பதறுகிறது. என்னே அவர்கள் மனவலிமை!



# 14

# நிர்வாகி மாளிகை

கலைநயமிகு காரைக்கால் நிர்வாகியின் மாளிகை 1825 செப்டம்பர் 9ஆம் தேதி கட்டி முடிக்கப்பட்டது. இம்மாளிகையின் முதன்மைக் கட்டடம், இதர கட்டடங்கள், சுற்றுச்சுவர்கள் இவற்றின் கட்டுமானப் பணிகள் 7586F,19 மொத்த செலவில் உருவாக்கப்பட்டவை. படம் : முன் அட்டை முகப்பு.

| | |
|---|---|
| இதில் கட்டுமான சாமான்களின் விலை | - 4834 F, 05 |
| ஆட்கூலி | - 2752 F, 14 |
| ஆக கூடுதல் | - 7586 F, 19 ஆகும் |

குறிப்பு - ஒரு ஃபிரான் ( 1F ) சமம் இன்றைய 40 காசு

இச்செலவுக் கணக்கை, நிர்வாகி கொர்தியே என்பவர் சரிபார்த்துக் கையெழுத்திட்டுள்ளார்.[1]

இம்மாளிகை ஊரின் நடுவில், பிரம்மாண்டமான இடத்தில் எழுப்பப்பட்டுள்ளது.

துய்ப்ளேக்ஸ் வீதி, மாதாகோவில் வீதி, பழைய காய்கறி மார்க்கட் வீதி, மாரியம்மன் கோவில் வீதி ஆகிய நான்கு வீதிகளின் நடுவே இம்மாளிகையின் வளாகம் அமைந்துள்ளது. நுழைவாயில் தெற்கு நோக்கியுள்ளது!

சிறந்த கட்டடப் பொறியியல் வல்லுநர்களின் கைவண்ணம் இன்றும் அதில் பிரதிபலிக்கிறது!

அரை மணி நேரத்திற்கொரு முறை ஒலியெழுப்பி, மக்களை விழிப்புடன் தங்கள் பணியாற்றத் தூண்டும் மாபெரும்

1 நன்றி : ஆதாரம் - *Catalogue des Manuscrits des Anciennes Archives de I;Inde forse - Karikal - 1739 - 1815 - par E. Gandart Tome IV - 1993*

கடிகாரம், கட்டடத்தின் உச்சியிலிருந்து அனைவரையும் கவர்ந்திழுக்கிறது. இதன் ஒலியே அலாதி! தனி சங்கீதம்!!

இச்சிறப்புமிகு கட்டடத்தில்தான், கீழ்த்தளத்தில் நிர்வாகியின் அலுவலகமும், கூட்ட மண்டபமும் அமைந்திருந்தன. சுற்றிலும் அகலமான தாழ்வாரங்கள்!

நிர்வாகியின் குடியிருப்பு மேல்தளம், அனைத்து வசதிகளுடன் இருந்தது.

இம்முதன்மைக் கட்டடத்திற்கு வலப்புறம் (மேற்கே) கடல் வணிகத் துறை, கடல் பாதுகாப்புத் துறையின் நிர்வாக அலுவலகம் அமைந்திருந்தன. இதனை அடுத்து அரசு வருவாய்த் துறை அலுவலகம் (Bureau des Contributions) காட்சியளிக்கிறது. இது மாதாகோவில் தெருவை ஒட்டிப் பொய்யாத மூர்த்தி வினாயகர் ஆலயத்திற்கு எதிரிலே அமைந்துள்ளது.

இதனையடுத்து வடக்குத் திசையில் காவலர் இருப்பும் (Caserne) அதன் பக்கத்தில் கட்டடம், சாலை, பாலம் அமைக்கும் பொறியாளர்களின் பண்டக சாலையும் இருந்தன. கடைசி மூன்று கட்டடங்களின் நுழைவாயில்களும் மாதாகோவில் தெருவை நோக்கி வினாயகர் கோவிலைப் பார்த்துக் கொண்டு இருந்தன.

முதன்மைக் கட்டடத்திற்குப் பின்புறம் (வடக்கே) சதுரமான ஒரு தடாகம் உண்டு. எக்காலத்திலும் வற்றாத நீர்நிலை! குளத்தைச் சுற்றிலும் தே, மா, பலா போன்ற மரங்கள்!

வளாகத்தின் நுழைவாயிலில் சிவப்புத் தொப்பியணிந்து ஆயுதம் தாங்கிய காவலர் 24 மணி நேரமும் காவல் புரிவர். Militaire எனக் கூறுவார்கள். வளாகத்திற்கு முன்புறம், நீள் சதுர வெட்டவெளி. அதில் நிழல் தரும் மரங்கள்; இயற்கை ஊற்று.

வரலாற்றுச் சிறப்புமிகு இம்மாளிகை மக்களைக் கவர்ந்த வண்ணமேயுள்ளது!

பிரெஞ்சுக் கட்டடக்கலைக்கு இஃது ஓர் எடுத்துக்காட்டு!!

பாதுகாக்கப்படவேண்டிய ஒரு கலைக்கோயில்!

# 15

# காரைக்கால் பிரதேச மாகாணங்கள்

நிர்வாகத் தேவைகளுக்காக, காரைக்கால் பிரதேசம் ஐந்து மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தன. அவை வருமாறு: (1824ஆம் ஆண்டைய நிலை )

## 1. காரைக்கால் மாகாணம்

| எண் | கிராமத்தின் பெயர் | மக்கள் தொகை |
|---|---|---|
| 1. | காரைக்கால் | - |
| 2. | கீழவெளி | 8603 |
| 3. | திருமலைராஜன்பட்டினம் | |
| 4. | கீழையூர் | 6671 |
| 5. | மேலையூர் | 397 |
| 6. | போலகம் | 126 |
| 7. | வடமறைக்காடு | 715 |
| 8. | தருமபுரம் | 191 |
| 9. | அக்கரை வடமறைக்காடு | 14 |
| 10. | ஓடுதுறை | 356 |
| 11. | புதுத்துறை | 362 |
| 12. | அக்கரைவட்டம் | 773 |
| 13. | அம்மன்கோவில்பத்து | |
| 14. | ஊழியப்பத்து | 141 |
| 15. | நிரவி | 863 |
| 16. | தலத்தெரு | 463 |
| 17. | கோவில்பத்து | 380 |
| 18. | காசாக்குடி | 214 |
| 19. | கீழவாஞ்சியூர் | 632 |
| | மொத்தம் | 20901 |




நன்றி : Dr.GODINEAU - Etudes sur l'Etablissement de Karikal - Paris - 1870 - Bibliothèque Nationale, PARIS.

## II. திருநள்ளாறு மாகாணம்

| | | |
|---|---|---|
| 1. | திருநள்ளாறு | 780 |
| 2. | பேட்டை | 119 |
| 3. | அத்திப்படுகை | 105 |
| 4. | அகரநெய்வாச்சேரி | 49 |
| 5. | பச்சூர் | 34 |
| 6. | கீழஉத்தரங்குடி | 53 |
| 7. | புத்தமங்கலம் | 5 |
| 8. | தக்களூர் | 11 |
| 9. | மேலஉத்தரங்குடி | 18 |
| 10. | கீழாவூர் | 35 |
| 11. | அபிஷேகக் கட்டளை | |
| 12. | பூண்முலையாள்மங்கலம் | 161 |
| 13. | நெய்வாச்சேரி | 40 |
| 14. | பத்தக்குடி | 64 |
| 15. | தேவமாபுரம் | 153 |
| 16. | வளத்தாமங்கலம் | 45 |
| 17. | செல்லூர் | 259 |
| 18. | தென்னங்குடி | 171 |
| 19. | இளையான்குடி | 168 |
| 20. | சுரக்குடி | 312 |
| 21. | கருக்கங்குடி | 137 |
| 22. | தேனூர் | 33 |
| 23. | செருமாவிலங்கை | 48 |
| 24. | சேவபுரம் | 37 |
| 25. | ஆயாஉள்கடை | 10 |
| 26. | மடப்புறம் | 33 |
| 27. | கைலாசநாதன்கோவில்பத்து | 0 |
| 28. | மானாமுட்டி | 88 |
| 29. | தூதுபோனமூலை | 64 |
| 30. | விழுதியூர் | 466 |
| 31. | காக்காமொழி | 100 |
| 32. | அட்சயலிங்கநூல்கடை | |
| 33. | கீழமனை | 84 |
| 34. | முருகநூல்கடை | 67 |
| 35. | சுப்பராயபுரம் | 198 |
| | **மொத்தம்** | **3980** |

குறிப்பு: அக்காலத்தில் அகலங்கண்ணு கிராமம் செல்லூர் கிராமத்துடன் இணைந்திருந்ததாக்த் தெரிகிறது.

## III. நல்லழுந்தூர் மாகாணம்

| | | |
|---|---|---|
| 1. | நல்லழந்தூர் | 294 |
| 2. | அம்பகரத்தூர் | 1151 |
| 3. | பழைய அம்பகரத்தூர் | 52 |
| 4. | சேத்தூர் | 121 |
| 5. | கோவில்பத்து சேத்தூர் | 108 |
| 6. | சாத்தங்குடி | 3 |
| 7. | முப்பயித்தங்குடி | 86 |
| 8. | மாதூர் | 75 |
| 9. | கண்ணாப்பூர் | 72 |
| 10. | மேல நல்லழந்தூர் | 34 |
| 11. | தாமனாங்குடி | 46 |
| 12. | அகரசேத்தூர் | 415 |
| 13. | நல்லம்பல் | 379 |
| 14. | கோட்டாபாடி | 84 |
| | **மொத்தம்** | **2920** |

## IV. நெடுங்காடு மாகாணம்

| | | |
|---|---|---|
| 1. | நெடுங்காடு | 259 |
| 2. | மேலபுத்தகரம் | 88 |
| 3. | கோவில்பத்து | 29 |
| 4. | பருத்திக்குடி | 80 |
| 5. | மேலசெம்பியங்கால் | 19 |
| 6. | அகரமாங்குடி | 40 |
| 7. | புதுப்பேட்டை | 374 |
| 8. | கொளத்குடி | 29 |
| 9. | கோட்டப்பாக்கம் | 55 |
| 10. | அண்டூர் - தென்பாதி | |
| 11. | வடகட்டளை | 97 |
| 12. | பரணையறுப்பு | 46 |
| 13. | கோட்டகம் | 49 |
| 14. | அகரகுரும்பகரம் | 240 |
| 15. | நல்லாத்தூர் | 290 |
| 16. | நரிக்குறும்பை | 47 |
| 17. | குரும்பகரம் | 118 |
| 18. | அண்டூர் - வடபாதி | 31 |

| | | |
|---|---|---|
| 19. | மேலஅன்னவாசல் | 23 |
| 20. | கீழஅன்னவாசல் | 65 |
| 21. | பஞ்சாட்சரபுரம் | 65 |
| 22. | நடலங்குடி | 78 |
| 23. | அகரகாசாக்குடி | 158 |
| 24. | காசாக்குடி | 410 |
| 25. | இலட்சுமிநாராயணபுரம் | 26 |
| 26. | திருவேங்கடபுரம் | 27 |
| 27. | வடமட்டம் | 112 |
| 28. | கீழபுத்தகரம் | 28 |
| 29. | பஞ்சிபுரம் | 25 |
| 30. | அபிஷேகக்கட்டளை | 7 |
| | மொத்தம் | **2934** |

### V. கோட்டுச்சேரி மாகாணம்

| | | |
|---|---|---|
| 1. | கோட்டுச்சேரி | 827 |
| 2. | திருவேட்டக்குடி | 561 |
| 3. | வரிச்சிக்குடி | 753 |
| 4. | பூவம் | 186 |
| 5. | கீழசெம்பியங்கால் | 73 |
| 6. | பண்டாரவடைபுத்தகரம் | ? |
| 7. | அகரபுத்தக்குடி | 77 |
| 8. | கிளியனூர் | ? |
| 9. | கீழக்கொன்னை | 30 |
| 10. | மேலக்கொன்னை | ? |
| 11. | மன்னன்கோயில் | ? |
| | மொத்தம் | **2666** |

**கிராமங்கள் ஆக மொத்தம் - 109**

**மக்கள் தொகை ஆக மொத்தம் - 33401**

ஆதாரம் :- *Cordier (Joseph), Historique et Statistique de Karikal, Pondichery, 1971, publications de l'Institut francais d'Indologie. Presentation de Monsieur Francois Gros.*

# 16

# அரசு நிர்வாக முறை

**அரசு ஊழியர்கள்** [1]

1843இல் காரைக்கால் அரசு நிர்வாகத்தில் பணிபுரிந்த அரசு ஊழியர்கள் விவரம் வருமாறு:-

நிர்வாகி ( CHEF DE SERVICE ) - சைந்த்திலேர் (BURETTE DE SAINT-HILAIRE ) இவர் ஐரோப்பியர். அனைத்து அரசுப் பணிகளுக்கும் இவரே பொறுப்பு. இவரது அதிகாரத்தின்கீழ் பல அரசு ஊழியர்கள் இருந்தார்கள். இவர் புதுச்சேரியிலுள்ள பிரெஞ்சிந்தியக் குவர்னரின் ஆணைப்படி செயல் புரிபவர்.

| | | |
|---|---|---|
| அலுவலக மொழிபெயர்ப்பாளர் | - | சேஷாசல செட்டியார் |
| காவல் துறைத் தலைவர் | - | ழொலிவே (ஐரோப்.) |
| மருத்துவத் தலைவர் | - | டாக்டர் மஜே. (ஐரோப்.) |
| நாட்டு வைத்தியர் | - | அதிசயப்பிள்ளை |
| துணை மருத்துவர் | - | ஞானுப்பிள்ளை |
| கருவூலம் (ட்ரஷரி) | - | பிரைந்தேல் (ஐரோப்.) |
| வருவாய்த்துறைத் தலைவர் | - | மொர்வான் (ஐரோப்.) |
| தலைமை பேஷ்கார் | - | அப்பாசாமிப்பிள்ளை |
| வருவாய்த்துறை ஆய்வாளர் | - | அண்ணாப்பிள்ளை |
| அமீனா | - | தெய்வசகாயம்பிள்ளை |
| நெடுங்காடு பேஷ்கார் | - | அப்பாவுப்பிள்ளை |
| திருநள்ளாறு பேஷ்கார் | - | சுப்ரமணியப்பிள்ளை |
| நல்லழந்தூர் பேஷ்கார் | - | தம்பி பிள்ளை |
| கோட்டுச்சேரி பேஷ்கார் | - | ராமய்யர் |

1 நன்றி: *SICÉ Constant - Annuaire Statistique des Etablissements Français dans l'Inde-Année 1843 - Imprimerie du Gouvernment Pondichéry 1845.*

**காவல்துறை**

| | | |
|---|---|---|
| கமிஷனர் | - | லாஃபோர்க் (ஐரோப்.) |
| இன்ஸ்பெக்டர் | - | குழந்தைசாமி முதலியார் |
| காரைக்கால் கொத்தவால் | - | சவரி குட்டியாப்பிள்ளை |
| திருநள்ளாறு கொத்தவால் | - | வீராசாமிப்பிள்ளை |
| நெடுங்காடு கொத்தவால் | - | அய்யாவுப்பிள்ளை |
| நல்லழந்தூர் கொத்தவால் | - | இரத்தினம்பிள்ளை |
| கோட்டுச்சேரி கொத்தவால் | - | நாராயணசாமி செட்டியார் |

**பொதுப்பணித்துறை**

| | | |
|---|---|---|
| தலைமைப் பொறியாளர் | - | தியேர் (ஐரோப்பியர்) |
| ரோடு மேஸ்திரி | - | நாரணப்பய்யர் |
| குமாஸ்தா | - | கொதார் |

**நீதித்துறை**

**முதல்நிலை நீதிமன்றம்** ( TRIBUNAL DE PREMIERE INSTANCE )

| | | |
|---|---|---|
| தலைமை நீதி | - | நோயேல் (ஐரோப்.) |
| அரசு வழக்கறிஞர் Procureur Du Roi | - | ஜாம் (ஐரோப்.) |
| தலைமை சரிஸ்தார் | - | பெத்தி (ஐரோப்.) |
| சரிஸ்தார் | - | சவரிக்குட்டிப்பிள்ளை |
| சரிஸ்தார் குமாஸ்தா | - | பொன்னுசாமிப்பிள்ளை |
| அமீனா | - | ஞானப்பிரகாச முதலியார், சின்னப்பா பிள்ளை |
| இந்துக்களுக்குச் சத்தியப் பிரமாணம் பெறுபவர் | - | கிபோ சமுத்திர ஐயங்கார் |
| முஸ்லீம்களுக்குச் சத்தியப் பிரமாணம் பெறுபவர் | - | சாகேப் - காஜியார் |
| தாழ்த்தப்பட்டோருக்குச் சத்தியப் பிரமாணம் பெறுபவர் | - | சடையப்பண்டாரம் |

வழக்கறிஞர்கள்

கொதார் (ஐரோப்)
புஷே (ஐரோப்.)
இரங்கசாமி முதலியார்
சின்னசாமி முதலியார்
ஞானப்பிரகாசம் பிள்ளை
பெரிய தம்பி பிள்ளை

**சமாதான நீதிமன்றம்** ( TRIBUNAL DE PAIX )

| | | |
|---|---|---|
| நீதிபதி | - | தவ்யா (ஐரோ) |
| சரிஸ்தார் | - | முருகப்பிள்ளை |
| குமாஸ்தா | - | ஞானப்பிரகாசம் பிள்ளை |
| மொழிபெயர்ப்பாளர் | - | சவரிமுத்துப்பிள்ளை |
| அமீனா | - | சாமிநாதப்பிள்ளை, அப்பாவு முதலியார் |

**நொத்தேர்** (பத்திரப்பதிவாளர்)

| | | |
|---|---|---|
| நொத்தேர் | - | பெத்தி (ஐரோப்) |
| தவுலியன் (Tabellion) | - | அண்ணாசாமிப்பிள்ளை<br>குமாரசாமிப்பிள்ளை |

**எத்தா சிவில்** - பிறப்பு, இறப்பு பதிவகம்

| | | |
|---|---|---|
| இயக்குநர் | - | தவ்யா (நீதிபதி) |
| ஜெயில் சூப்ரெண்டண்ட் | - | ஸ்டால்மென் |

**பள்ளிக்கூடம்**

| | | |
|---|---|---|
| தலைமையாசிரியர் | - | தவியா (ஐரோப்) |
| பிரெஞ்சு ஆசிரியர் | - | ஐயாக்கண்ணுப்பிள்ளை |
| தமிழ் ஆசிரியர் | - | ஞானுப்பிள்ளை |

**அஞ்சல்துறை** - பிரிட்டிஷ் இந்தியாவுக்குச் சொந்தமானது

| | | |
|---|---|---|
| போஸ்ட் மாஸ்டர் | - | சுப்பு நாய்க்கர் |

**காரைக்கால்/புதுச்சேரி அரசு ஊழியர்களிடையே ஊதிய ஏற்றத் தாழ்வு**

| பணி விபரம் | காரைக்கால் ஊதியம் | புதுச்சேரி ஊதியம் | ஏற்றத்தாழ்வு |
|---|---|---|---|
| போலீஸ் ஆய்வாளர் | 350 F | 900 F | 550 F |
| போலீஸ் கொத்தவால் (துணை ஆய்வாளர்) | 296 F | 450 F | 154 F |
| மொழி பெயர்ப்பாளர் | 240 F | 600 F | 360 F |

*1F = 40* காசு

மேற்கண்டவை இந்திய ஊழியர்களிடையே உயர்பதவியாகும். மற்றவர்களின் ஊதியம் 50 F-ஐ தாண்டாது!

# 17

# பிரெஞ்சிந்திய நிர்வாகம்
## (புதுச்சேரி)

**தலைமையிடம் - புதுச்சேரி**

ஆளுநர் (Gouverneur) குவர்னர்: பிரெஞ்சிந்தியாவின் அனைத்து நிர்வாகத்திற்கும் இவரே தலைவர், பொறுப்பாளர். அவர் பிரான்சு அரசாங்கத்தின் ஆணைகளுக்கு ஏற்பச் செயல்புரிவார். இங்கு நிகழும் அனைத்து நிகழ்ச்சிகளையும் பிரெஞ்சு அரசுக்கு அவ்வப்போது தெரிவிப்பார்.

காரைக்கால் நிர்வாகி இவரது அதிகாரத்திற்குக் கட்டுப்பட்டு நடப்பவர்.

**நிர்வாக ஆலோசனைக் குழு** ( CONSEIL D'ADMINISTRATION )

குவர்னருக்குத் தேவையான யோசனைகளை அவ்வப்போது ஆராய்ந்து தெரிவிக்கும் குழு. இதில் ஐரோப்பிய பெருவணிகர்களும், கடல்வணிக அதிபர்களும், ஐரோப்பிய அரசு அதிகாரிகளும் நியமன உறுப்பினர்கள்.

தேவைப்படின், புதுச்சேரி பிரமுகர்களிடமும் (இந்தியர்கள்) ஆலோசனை பெறப்படும்.

**பொது ஆலோசனை மன்றம்** ( CONSEIL GENERAL )

இக்குழுவில் 10 நியமன உறுப்பினர்கள் உண்டு. அதில் 9 பேர் ஐரோப்பிய பெருவணிகர்களும், உயர் அதிகாரிகளுமாவர். அதில் ஒரே ஓர் இந்திய உறுப்பினர் - அப்பாசாமிப்பிள்ளை.

குறிப்பாக, பிரெஞ்சிந்திய வரவு செலவுத் திட்டம் தயாரிக்கும்போது இவர்களின் ஆலோசனையைக் குவர்னர் கேட்டுக்கொள்வார்.

**புதுச்சேரி பிரமுகர்கள் பட்டியல்**
( ASSEMBLEE DES NOTABLES ) ( 20 பேர் )

இப்பிரமுகர் பட்டியலிலும் 18 பேர் ஐரோப்பிய வணிகர்களும், தொழிலதிபர்களும், கடல் வணிகர்களும் நியமன உறுப்பினர்கள் ஆவர். எஞ்சிய இரண்டு பேர் உள்ளூர் பெருவணிகர்கள் (இந்தியர்).

1843இல் இருந்த இரண்டு உறுப்பினர்கள்:

1. பாலகிருஷ்ணப்பிள்ளை, பெருவணிகர்
2. குருமூர்த்தி செட்டி.

**காரைக்கால் ஆலோசனை சபைகள்**

**காரைக்கால் மண்டல ஆலோசனை சபை**
( CONSEIL D'ARRONDISSEMENT DE KARIKAL )

இதில் 5 நியமன உறுப்பினர்கள்: வணிகர்களும், அரசு உயர் அதிகாரிகளும். அனைவரும் ஐரோப்பியர்கள்.

**காரைக்கால் பிரமுகர் பட்டியல்** (20 பேர்)

இதில் 17 பேர் ஐரோப்பியர். மீதி 3 பேர் காரைக்கால் (உள்ளூர்) பிரமுகர்கள்.

1. காதர் கண்டு மரைக்காயர், பெருவணிகர்
2. குழந்தைசாமி முதலியார், மிராசுதார்
3. நமுகசினா மரைக்காயர், மதத்தலைவர்



ஆதாரம் - நன்றி: *SICÉ CONSTANT - Annuaire Statistique des Etablissen ents français dans I'Inde - Année 1843 - Imprimerie du gt. Pondicherry - 1845.*

# 18

# அரசலாறு சீரமைப்பு [1]

காரைக்காலம்மையார் காலத்திற்கு முன்பிருந்தே (கி.பி. 5ஆம் நூற்றாண்டு) காரைக்கால் சிறந்த துறைமுகமாக விளங்கியுள்ளது. இங்கிருந்து, இந்தியத் துறைமுகங்களுக்கும், இலங்கை, பர்மா, இந்தோனேஷிய, மலேசிய துறைமுகங்களுக்கும் கப்பல் போக்குவரத்து நடந்துள்ளது என்பதைப் பல ஆவணங்கள் சான்று பகர்கின்றன.

காரைக்கால் வரும் கப்பல்கள் நேராக அரசலாற்றின் உள்ளே ஒரு கி.மீ. தூரம் மேற்கு நோக்கிச் சென்று, அங்கே ஆற்றங்கரையில் அமைந்த கப்பல் துறையில் சரக்குகளை ஏற்றியும், இறக்கியும் உள்ளன.

ஆனால், காலப்போக்கில் அரசலாற்றின் முகத்துவாரத்தில் மணல்மேடு உருவாகிக் கப்பல்களும் தோணிகளும் செல்ல முடியாத நிலைமை ஏற்பட்டது.

1819இல் ஒரு சிறு கப்பல் அரசலாறு வழியாகத் துறைமுகத்திற்கு வந்துள்ளது. இருப்பினும், 1832இல் அரசலாற்றில் நீர்வரத்துக் குறுகி ஆற்றின் முகத்துவாரத்தில் மணல்மேடு உயர்ந்து விட்டபடியால் சரக்கு ஏற்றும் தோணிகள் கூட ஆற்றின் உள்ளே புகமுடியாத நிலை ஏற்பட்டுவிட்டது.

1774ஆம் ஆண்டிலேயே அரசலாற்று முகத்துவாரத்தில் ஏற்படும் மணல் குவியலைத் தவிர்ப்பதற்காக, கொர்தே (CORDEÉ) என்ற பொறியாளர் ஒரு சிறந்த திட்டம் தீட்டினார். அத்திட்டத்தின்படி அரசலாற்றில் முகத்துவாரத்திற்கு மேற்கே 2 கி.மீ. தூரத்திலிருந்து முகத்துவாரம் வரையில்:-

1 *Jacques WEBER - Les Establissements Français en Inde au XIX*[e] *Siècle - Librairie de l'Inde, Paris - 1988 - P. 894.*




**அரசலாறு – முல்லையாறு இணைப்பு**

வரைபடம் :

- ♥ ஆற்றின் இரு கரைகளையும் நேர்க்கோடாக அமைத்தல்
- ♥ இருகரைகளிலும் உறுதியான செங்கல் தடுப்புச்சுவர் கட்டுதல்
- ♥ இருகரைகளின் இடைவெளித் தூரத்தைக் குறைத்தல் (ஆற்றின் அகலத்தைக் குறைத்தல்)

இதனால் ஆற்றின் கரைகள் உறுதியாகவும், நீரோட்டம் வேகமாகவும் அமைந்துவிடும் என்பதும், முகத்துவாரத்தில் மண் குவியல் ஏற்படாது என்பதும், இதன் பயனாகக் கப்பல்கள் எளிதில் செல்லலாம் என்பதும் கொர்தே பொறியாளரின் தொழில் நுட்ப ஆலோசனையாகும்! ஆனால் இப்பரிந்துரை ஏற்கப்படவில்லை.

**குறிப்பு :-**

அரசலாறு கடலில் சங்கமமாவதற்கு முன்னர் பல கிளைகளாகப் பிரிந்து, கடலுக்குச் செல்லும் நீரின் அளவு மிகவும் குறைந்துவிடுகிறது. மணல்மேடு உருவாவதற்கு இதுவே முக்கிய காரணம். ஆற்றின் இரு கரைகளும் நேர்க்கோடாக குறுக்கப்பட்டால், அனைத்து நீரும் குறுகிய வழியில், ஆழமாக வேகமாகச் சென்று கடலில் போய்ச் சேருமல்லவா? ஆகவேதான் இத்திட்டம்.

இதற்கிடையில், 1832இல் அரசலாற்றில் தண்ணீர் வரத்து மிகவும் குறைந்துவிட்டது. ஆகவே, ஆற்றின் நீர்ப்பெருக்கை அதிகரிக்க, பக்கத்தில் ஓடும் முல்லையாற்றின் குறுக்கே இரண்டு செங்கல் நீர்த்தேக்க அணைகள் அடுத்தடுத்துக் கட்டி, முல்லையாற்று நீர் முழுவதையும் அரசலாற்றில் திருப்பிவிட, திட்டம் தீட்டி, உடனடியாக நிறைவேற்றப்பட்டது.

இதன் மொத்த செலவு 1000F மட்டுமே! சுமார் ரூ. 400. இத்திட்டத்தின் விளைவாக, கப்பல் போக்குவரத்தும், வாணிபமும் சற்றுப் புத்துயிர் பெற்றன. முல்லையாற்றை அரசலாற்றுடன் இணைத்தபின் 1834 சூன் மாதத்தில் 80 டன் கொண்ட ஒரு சிறு கப்பல் அரசலாற்றின் வழியே காரைக்கால் உள்ளே சென்று திரும்பியது!

அதே ஆண்டு, 1834, சூன் மாதம் வீசிய புயல் காற்றின் கோரத்தால், முல்லையாற்றின் இரண்டு அணைகளும் இடிந்து

பாழாயின. இருப்பினும், அவை உடனே மீண்டும் கட்டப்பட்டன. இவைகளில் முதல் தடுப்பு அணைக்கட்டு (மேற்கேயுள்ளது) உயரம் 3 மீ., அகலம் 6 மீ.; இரண்டாவது தடுப்பு (கடல் பக்கம்) உயரம் 3 மீ., அகலம் 10 மீ. பின்னர் தொடர்ந்து நீர்ப்பாதை போக்குவரத்து சிறப்பாக நடந்து வந்தது.

ஆனால், 1837இல், பிரிட்டிஷ் இந்திய அரசு அரசலாற்றில் பல நீர்த்தடுப்பு மதகுகள் கட்டியதால், அரசலாற்றில் நீர்வரத்து மிகவும் குறைந்துவிட்டது. மீண்டும் முகத்துவாரத்தில் மணல்மேடுகள் உருவாயின கப்பல், தோணி போக்குவரத்து முழுமையாக நின்றுவிட்டது.

வணிகர்கள் சிலர் வாணிகம் செய்ய நாகூருக்கே சென்றுவிட்டனர். காரைக்காலில் வாணிபம் ஸ்தம்பித்துவிட்டது.

இதனை உணர்ந்த நிர்வாகி சைந்திலேர் (Saint-Hilaire) அரசலாற்றின் இருகரைகளையும் நெருக்கி, அவற்றைச் செங்கல் சுவராகக் கட்டுவதே இந்தப் பிரச்சினைக்குத் தீர்வாகும் என உணர்ந்து, புதுச்சேரியிலுள்ள குவர்னர் சைன்சிமோனுக்கு (St.Simon) விளக்கமான அறிக்கை சமர்ப்பித்தார். இதன் முழுச் செலவு சுமார் 25000 F ஆகும் எனவும் தெளிவுபடுத்தினார்.

மேலும், இத்திட்டம் நிறைவேறினால், கப்பல் போக்குவரத்து அதிகரிக்கும் என்றும், அதனால் வசூலாகும் துறைமுக வரி இந்த செலவை 10 ஆண்டுகளில் ஈடு செய்துவிடும் என்றும் விளக்கியிருந்தார். நிர்வாகி சைந்திலேர் (Saint Hilaire)ஆக இருப்பினும் திட்டத்திற்கு அனுமதி கிடைக்கவில்லை. நிதிப்பற்றாக்குறை என்ற நொண்டிக் காரணம் காட்டப்பட்டது.

**உண்மை நிலையென்ன என்பதைச் சற்று ஆராய்வோம்**

**A.** 1838ஆம் ஆண்டு பிரெஞ்சிந்திய வரவு செலவுத் திட்டம் பின்வருமாறு:–[1]

1 *Jacques WEBER - Les Etablissements Français en Inde au XIX<sup></sup>e Siècle - Librairie de l'Inde. Paris - 1988 - P 260*

| மாகாணம் | வருவாய் (Fஇல்) | செலவு (Fஇல்) | சேமிப்பு (+) கூடுதல் செலவு (-) (Fஇல்) |
|---|---|---|---|
| காரைக்கால் | 217471 | 52366 | 165105+ |
| புதுச்சேரி | 528850 | 664826 | 135976- |
| சந்திரநாகூர் | 125097 | 138246 | 13149- |
| ஏனம் | 18500 | 21574 | 3074- |
| மாயே | 9493 | 21310 | 11817- |

*(1F = 1 France* ஃபிரான் = 40 (தற்காலக் காசு*)*

மேற்கண்ட திட்ட அட்டவணையிலிருந்து நாம் தெரிந்துகொள்வது:-

அ) காரைக்கால் தனது வருவாயைப் பெருக்கி, செலவினைச் சுருக்கி சேமித்த பணத்தை, அதாவது 165105Fஐ, புதுச்சேரிக்கும் மற்ற மாகாணங்களுக்கும் கீழ்க்கண்டவாறு செலவு செய்துவிட்டு, காரைக்காலின் அத்தியாவசிய செலவுக்கு 25000F இல்லை எனப் புதுச்சேரி குவர்னர் கூறியுள்ளார், பணநெருக்கடி என்ற பல்லவியைப் பாடி!

| | | |
|---|---|---|
| புதுச்சேரிக்கு | - | 135976 F |
| சந்திரநாகூருக்கு | - | 13149 F |
| ஏனத்திற்கு | - | 3074 F |
| மாயேவுக்கு | - | 11817 F |

ஆ) காரைக்கால் மக்களுக்கு "வாழ்வா, சாவா" என்பதை நிர்ணயிக்கும் அரசலாறு திட்டத்திற்குத் தேவையான 25000F கிடைக்காமல் நிர்வாகி அவதிப்பட்டுக் கொண்டிருந்தார்!

இ) இந்நிலையைப் பார்க்கும்போது, பட்டுக்கோட்டையாரின் ஒரு சினிமாப்பாடல்தான் நினைவுக்கு வருகிறது.

காடு விளைந்து என்ன மச்சான்
நம்ம கையும் காலும் தானே மிச்சம்! - என்பதுதான்!

இது மட்டுமல்ல, பிரெஞ்சிந்திய வரவு செலவுத் திட்டத்தில் காரைக்காலுக்கு ஒதுக்கப்பட்ட தொகை, ஆண்டுக்கு ஆண்டு குறைந்துகொண்டே வந்தது.

| ஆண்டு | காரைக்கால் செலவுக்கு ஒதுக்கிய தொகை |
|---|---|
| 1833 | 91475 F |
| 1834 | 77655 F |
| 1838 | 52366 F |
| 1840 | 26493 F |
| 1847 | 14633 F |
| 1849 | 19864 F |

இதேபோன்று சந்திரநாகூர், மாயே, ஏனம் பகுதிகளுக்கும், அடிப்படை செலவுகளுக்குக்கூட போதிய பணம் ஒதுக்கப்படவில்லை.

## B. அரசு வசூலித்த நெல் விற்பனை

நிலவரிக்காக அரசு வசூலித்த நெல்லை அரிசியாக்கி, அதனை விற்பதற்காகப் புதுச்சேரிக்கு அனுப்பப்படும். ஏனெனில் காரைக்கால் புதுச்சேரியின் நெற்களஞ்சியமல்லவா? ஆனால், அரிசி விற்ற பணம் காரைக்கால் கஜானாவுக்கு வராது.

விற்பனைக்காக அனுப்பிய அரிசியின் அளவும், விற்ற பணமும் (1 கார்ஸ் = 4800 கிலோ).

| ஆண்டு | அரிசி அளவு | விற்ற பணம் |
|---|---|---|
| 1839 | 221 கார்ஸ் | 90 807 F |
| 1840 | 200 கார்ஸ் | 73 708 F |
| 1845 | 149 கார்ஸ் | 83 321 F |
| 1847 | 159 கார்ஸ் | 59 970 F |

காரைக்காலில் முக்கிய செலவுகளுக்குப் பணமில்லாமல் நிர்வாகி தத்தளிப்பு!

## C. உண்டிச்சீட்டு ( TRAITES )[1]

உண்டிச்சீட்டு என்பது தற்கால வங்கிக் காசோலை போன்றது. புதுச்சேரி கருவூலம் காரைக்கால் கருவூலத்திற்குக்

1 *Jacques WEBER - Un Etablissements Français en Inde - Karikal 1832-1849 - mèmoire de maitrise - Aix-en-Provence 1971 - P. 71 (Thanks - Nallam Clinic - Mini Conference Hall Library)*

கொடுக்கும் உண்டிச்சீட்டிற்குக் காரைக்கால் பணம் கொடுக்க வேண்டும். அதாவது, காரைக்கால் கொடுத்த பணத்தைப் பின்னர் புதுச்சேரி கருவூலம் இங்கு அனுப்பிவிடவேண்டும். இதுதான் அந்த அமைப்பு.

உண்டிச்சீட்டு விபரம்:-

| ஆண்டு | புதுச்சேரி உண்டிச்சீட்டுக்கு காரைக்கால் கொடுத்தது | புதுச்சேரி திருப்பித் தந்தது | இன்னும் கொடுக்க வேண்டிய பாக்கி |
|---|---|---|---|
| 1834 | 255732 F | 74639 F | 181093 F |
| 1837 | 80603 F | 44915 F | 35687 F |
| 1848 | 86169 F | 23942 F | 62226 F |

இந்நிலையில் நிர்வாகி சைந்திலேர் விளக்கமாகப் புதுச்சேரி குவர்னருக்கு எழுதிய கடிதத்தில், "நிலவரி, அரிசி விற்ற பணம் புதுச்சேரி கருவூலத்திற்குச் சென்றுவிட்டது. இங்கு கள்ளு, புகையிலை போன்ற குத்தகை வரிப்பணத்தைக் கொண்டு செலவுகள் ஈடுகட்டப்படுகின்றன.

"இந்த நெருக்கடியில் புதுச்சேரியிலிருந்து வரும் உண்டிச்சீட்டுக்குக் காரைக்கால் கருவூலம் பணம் கொடுக்க வேண்டியுள்ளது" என எழுதியிருந்தார்.

***குறிப்பு*** : இதனையே டாக்டர் கொதினோ "காரைக்கால் புதுச்சேரிக்கு ஒரு நல்ல கறவைப்பசு" என்றார்.

புதுச்சேரியில் குவர்னரைச் சுற்றியிருந்த ஐரோப்பிய பெருவணிகர்களும், பாரீஸ் அரசாங்கத்துடன் நெருங்கிய தொடர்புடைய கடல் வணிகர்கள் சிலருமே இக்கயமைக்குக் காரணம்.

காரைக்கால் துறைமுக வளர்ச்சியும், வணிக வளர்ச்சியும் தங்களைப் பெரிதும் பாதிக்கும் என அஞ்சினர் கடல் வணிகர்கள் - வணிகப்போட்டி!

இதனால் "வெர்னியாக்" போன்ற ஆற்றல்மிகு குவர்னரால் கூடச் சுதந்திரமாகச் செயல்பட முடியவில்லை!

## பத்தாண்டு சென்றபின் அரசலாறு வடகரைச் சீரமைப்பு

பின்னர் 10 ஆண்டுகள் கழித்து, அரசலாற்றின் வடகரையை மட்டும் நேர் செய்து, செங்கல் தடுப்புச்சுவர் கட்டப்பட்டது. வால்டேர் எனும் பொறியாளர் இதனை 1847இல் செய்து முடித்தார். இதன் செலவு 11580 F (ரூ. 4,634.)

**குறிப்பு:** இந்த வட கரையை மட்டில் நேர் செய்து தடுப்புச் சுவர் கட்டியதே பெரும் பயனை விளைவித்தது.




22 : 1854-க்கு முன் அரசலாறு

ஆற்றில் நீர் அதிகமாகவும், வேகமாகவும் ஓட ஆரம்பித்தது. மணல்மேடுகள் மறைந்தன 1837-லிருந்து மங்கிவந்த வாணிபம், மீண்டும் தலைதூக்கியது. ஆற்றினுள் சிறு கப்பல்கள், சரக்கேற்றிய தோணிகள், படகுகள் போக்குவரத்து மீண்டும் பெருகின. மக்களும், நிர்வாகியும் ஓரளவு மகிழ்ச்சியடைந்தனர், இதாவது கிடைத்ததே என்ற எண்ணத்தில்

## அரசலாறு தென்கரைச் சீரமைப்பு

1849இல் மற்றொரு கரையை (தென்கரை) நேர் செய்து தடுப்புச்சுவர் கட்டுவதற்குக் காரைக்கால் நிர்வாகி விரிவான திட்டம் மேலிடத்திற்கு அனுப்பியும் அவர்கள் வழக்கம்போல் கண்டு கொள்ளவில்லை! அமைதி காத்தனர்!!

ஆகவே, இதன் முக்கியத்துவத்தை நன்குணர்ந்த குளோசே (Closets) எனும் பொறியாளர், புதுச்சேரி குவர்னருக்கு ஒரு மாற்று யோசனையைத் தெரிவித்தார். அதாவது, தனது சொந்த செலவில்




23 : 1856-க்குப் பின் அரசலாறு

அரசலாற்றின் தென்கரையை நேராக்கித் தடுப்புச்சுவரைக் கட்டிவிடுவது, இதற்கு ஈடாகத் துறைமுக வரியை 50 ஆண்டுகளுக்கு அவரே பெற்றுக்கொள்வது என்பதாகும். இப்பரிந்துரையையும் அரசு நிராகரித்துவிட்டது.

காரைக்கால் துறைமுக வரி பின்வருமாறு:-

| | | |
|---|---|---|
| 1844 | - | 637 F |
| 1845 | - | 623 F |
| 1846 | - | 618 F |
| 1847 | - | 1014 F அரசலாற்று வடக்கு |
| 1848 | - | 2939 F கரைமட்டில் சீர் செய்தபிறகு. |

1847லிருந்து அரசலாற்றில் மீண்டும் நீர்வரத்து குறைந்தது. மீண்டும் அதே நெருக்கடி! வழக்கம்போல் வர்த்தகர்கள் போராட்டத்தில் குதித்தனர்.

நல்லவேளையாக, அக்காலக்கட்டத்தில், 1852இல், வெர்னியாக் என்ற சிறந்த குவர்னர் பிரெஞ்சிந்தியாவுக்கு நியமிக்கப்பட்டார். (3ஆவது நெப்போலியன் ஆட்சி). வெர்னியாக் குவர்னர் 1853இல் காரைக்காலைப் பார்வையிட வந்தபோது, அரசலாறு அவரை மிகவும் கவர்ந்தது. ஆனால், ஆற்றின் அவலநிலை அவரை மிகவும் வருத்தியது. அவர் கூறினார்:-

"அரசலாற்றின் முகத்துவாரப் பகுதியைச் சீர் செய்தால் அதனால் ஏற்படும் பெரும்பயனை (பெரும் வருவாயை) இதுவரை யாரும் சரியாக உணர்ந்ததாகத் தெரியவில்லை. செய்யவேண்டிய சிறு வேலைகளைச் செய்து முடித்தால், இச்சிறு துறைமுகத்தில் மிகப் பெருங்கப்பல்கள் கூட வந்து செல்லும் என்பது மட்டுமல்ல, பிரெஞ்சிந்தியாவிலேயே காரைக்கால் மிகச் சிறந்த துறைமுகப் பட்டணமாக விளங்கும்" என்றார்.

அதே நேரத்தில், குவர்னர் வெர்னியாக் அரசலாற்றில் சீர் செய்யவேண்டிய அனைத்து விளக்கங்களையும் விவரித்து உடனடியாக வேலைகளைத் தொடங்க எல்லா ஏற்பாடுகளையும் செய்தார். அடுத்த ஆண்டிலேயே, 1854இல், வேலைகள் தொடங்கி 1856இல் முடிவுற்றது. இதன் செலவு 17477 F மட்டுமே!

**குறிப்பு :**

பிரெஞ்சிந்தியா குவர்னர் வெர்னியாக் அவர்களே இத்துறைமுக நிர்மாணத் திட்டத்தில் இவ்வளவு ஆர்வம் காட்டியிருந்தும்கூட, புதுச்சேரி மேலதிகாரிகள் போதுமான

ஒத்துழைப்பு தரவில்லை, போதுமான நிதியும் அளிக்கவில்லை. (காரணம் தெரிந்ததுதானே?)

இதன் காரணமாக, மிகக் குறைந்த செலவில் 17477Fக்கு கட்டப்பட்ட தென்கரை தடுப்புச்சுவர், 1856-லிருந்து 1860 வரை பலமுறை உடைப்பெடுத்து அதற்காக ஏறத்தாழ 50000F செலவு செய்துள்ளது பிரெஞ்சிந்திய அரசு![1]

இருப்பினும், நடைபெற்ற அனைத்துச் சீரமைப்புப் பணிகளும் எதிர்பார்த்ததைவிடப் பெரும் பயன்களை விளைவித்தன.

- ♥ ஆற்றில் நீரோட்டத்தின் வேகம் அதிகரித்தது.
- ♥ ஆற்றின் ஆழமும் அதிகரித்தது
- ♥ அத்துடன் முகத்துவாரத்தில் ஏற்படும் மண்முட்டுகள் காணாமலேயே போய்விட்டன.
- ♥ சிறு கப்பல்களும், மரக்கலங்களும் அரசலாற்றில் புகுந்து ஏற்றுமதி, இறக்குமதி செய்தன.
- ♥ வேளாண்மை விரிவடைந்தது.
- ♥ வர்த்தகம் கொடிகட்டிப் பறந்தது; கடல் வணிகமும் அப்படியே.
- ♥ பற்பல தொழில்கள் பல்கின.
- ♥ குவர்னர் வெர்னியாக் எதிர்பார்த்தவாறு விவசாயிகள் வாழ்விலும், வர்த்தகர்கள் வாழ்விலும், மக்கள் வாழ்விலும் புத்தொளி வீசத் தொடங்கியது.

## துறைமுகச் சீரமைப்பு

வெர்னியாக் குவர்னர் முயற்சியால் ஆற்றின் சீரமைப்புடன் துறைமுகமும் சீர்செய்யப்பட்டது.

- ✣ காரைக்கால் துறைமுகத்தில் 1852இல் கலங்கரை விளக்கு நிறுவப்பட்டது.

1 *Jacques WEBER - Les Etablissements Français en Inde au XIX$^e$ Siècle - Librairie de l'Inde, Paris - 1988 - P. 897.*

- அதே ஆண்டில் (1852) ஒரு சுழற்பாலம் அமைக்கப்பட்டது.
- 1855இல் துறைமுக அலுவலகம் ஏற்பட்டது.
- மரக்கலங்களில் பணிபுரியும் மீனவர்களின் நலனுக்காக, 1862இல் புது மீனவர் கிராமம் ஒன்று ஆற்றிற்கு அருகில் உருவாக்கப்பட்டது.

முடிவாகக் கூறுமிடத்து, அரசலாற்றின் சீரமைப்பால், மாகாணத்தின் வர்த்தகம் பன்மடங்கு பெருகியது.

1854இல் வர்த்தகத்தின் மதிப்பு 20 இலட்சத்திலிருந்து 40 இலட்சம் F வரை உயர்ந்தது. ஆனால் அரசலாறு சீரடைந்தபின், 1861இல் இதன் மதிப்பு 100 இலட்சம் (1 கோடி F) ஆகும்.

இதுதான் அரசலாறு சீரமைப்பின் வரலாறு!



# 19

# சாலைகள் [1]

1838ஆம் ஆண்டு வரை காரைக்கால் மாகாணத்திலேயே சாலை என்று கூறுவதற்கு ஒன்றுமே கிடையாது.

காரைக்கால் - திருமலைராஜன்பட்டணத்திற்கு இடையே அகலமான ஒற்றையடிப் பாதை ஒன்று இருந்துள்ளது.

காரைக்கால் - திருநள்ளாற்றிற்கு இடையே, நூலாற்றின் கரைதான் நடை பாதை. அங்கே பாதுகாப்பிற்கு "வழிக்கரையம்மன் கோவில்" இன்றும் அரசோச்சுகிறது.

திருநள்ளாறு தர்ப்பாரண்யேசுவரர் கோவில் கல்வெட்டில், இந்நடைபாதை "கடலாடு வீதி" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. திருஞானசம்பந்தர் திருவுருவச்சிலையை மாசிமகத்தன்று கோவிலிலிருந்து காரைக்கால் கடற்கரைக்கு ஆண்டுதோறும் கடலாடு வீதி வழியே எடுத்துச்சென்று நீராடச் செய்யும் பெருவிழா நடந்ததாகவும் குறிப்பிடுகிறது கல்வெட்டு! [2]

இது தவிர, ஆற்றங்கரைகள், ஒற்றையடிப் பாதைகள், பெரிய வயல் வரப்புகள், திடல்களின் குறுக்கே மக்கள் நடந்த சுவடுகள் இவையும் சாலைகளாகப் பயன்பட்டன.

வழியிலுள்ள ஆறுகளையும், வாய்க்கால்களையும் கடப்பதற்குப் பாலம் கிடையாது. தோணி, படகு, பரிசல் மூலமே

1 *Jacques WEBER - Un Etablissements Français en Inde - Karıkal 1832-1849 - mèmoire de maitrise - Aıx-en-Provence 1971 - P.98 (Thanks - Nallam Clinic - Mini Conference Hall Library)*

2 ஆதாரம் - கல்வெட்டுகளில் காரைக்கால் பகுதிகள் - வில்லியனூர் புலவர் ந. வேங்கடேசன், சேகர் பதிப்பகம், 2000 - பக். 195-196

அக்கரைக்குச் சென்றனர். கட்டணம் - ஓர் ஆளுக்கு ஒரு காசு ஒரு தடவைக்கு.

இதுமட்டுமல்ல, நெல்மூட்டைகளையும், பிற பொருட்களையும், தலைச்சுமையாகவோ அல்லது இரண்டு காளை மாடுகள் பூட்டிய பாரவண்டிகள், கட்டை வண்டிகள் மூலமாகவோ கொண்டு செல்வர்.

இச்சரக்குகள் ஏற்றிச் செல்லும் வண்டிகள், வயல், திடல், சிறு பாதைகள் வழியாகச் செல்லும். வண்டி அடிக்கடி கவிழ்ந்துவிடும். (வண்டி கொடை அடித்துவிட்டது என்பார்கள்) சரக்கேற்றிய வண்டிகள் ஆறுகளைக் கடப்பது ஆபத்தான செயல். சில சமயங்களில் அவை ஆற்றுநீரிலேயே அடித்துக்கொண்டு போவதுமுண்டு. இதனால் ஏற்படும் இழப்பு ஆண்டுக்குப் பல்லாயிரம் ரூபாய்களாகும்!

இப்பரிதாப நிலையைக் கண்ட காரைக்கால் நிர்வாகி லெஸ்பெர்தா, காரைக்காலை மற்ற முக்கிய ஊர்களுடன் இணைக்கும் சாலைகளை அமைக்கத் திட்டமிட்டார். அதாவது, மக்கள் நடமாட்டத்திற்கும், வண்டிகள் செல்வதற்கும் பல எதிர்ப்புகளுக்கிடையே தமது முயற்சியில் லெஸ்பெர்தா வெற்றி கண்டார்.

- 1838இல் காரைக்கால் - திருநள்ளாறு சாலை முதன்முதலில் அமைக்கப்பட்டது. இதன் செலவு 3440 F.
- 1840இல் காரைக்கால் - திருமலைராஜன்பட்டினம் சாலையும், அதே ஆண்டில் மேற்கண்ட சாலையை நிரவியுடன் இணைக்கும் சாலையும் அமைக்கப்பட்டது. இதில் முதல் சாலையின் செலவு 2700F, நிரவி இணைப்புச்சாலையின் செவு - 1298 F.

**குறிப்பு:-** ஆனால் திருமலைராஜன்பட்டினம் - நாகூர் சாலை அமைக்கப்படவில்லை.

- 1845இல் காரைக்கால் - கோட்டுச்சேரி சாலை போடத் தொடங்கப்பட்டது. ஆனால், 1849இல் தான் சாலை அமைக்கும் பணி முடிவடைந்தது. 1849இல் நண்டலாறு பாலம்

கட்டியவுடன், காரைக்கால் - கோட்டுச்சேரி சாலை, புதிய பாலம் வரை நீட்டப்பட்டது.

- 1845இல் திருநள்ளாறு - அம்பகரத்தூர் சாலை அமைக்கப்பட்டது.
- 1849இல் திருநள்ளாறு சாலையுடன் நெடுங்காட்டை இணைக்கும் சாலை அமைக்கப்பட்டது.

மேற்கண்ட சாலைகள் அமைப்பிற்குத் திட்டம் தீட்டியவர் நிர்வாகி லெஸ்பெர்தா என்றாலும்கூட, அச்சாலைகள் அமைக்கும்போது பணியாற்றியவர் சைந்திலேர் (Saint-Hilaire) என்ற மற்றொரு சிறந்த நிர்வாகியாவார்.

குறிப்பு:- மேற்கண்ட சாலைகள் இரண்டு கட்டை வண்டிகள் எதிரெதிரே எளிதாக மாறிச் செல்லக்கூடிய அளவில் அமைந்திருந்தன. இருமருங்கிலும் மரங்கள் நட்டுப் பாதுகாக்கப்பட்டன. (குறிப்பாக பூவரசமரம், ஆலமரம், வேப்பமரம், தென்னைமரம் போன்றவை).



# 20

# பாலங்கள்[1]

மேற்கண்ட லெஸ்பெர்தா திட்டத்தை, பல இன்னல்களுக்கும், எதிர்ப்புகளுக்கும் இடையே, காரைக்கால் நிர்வாகி சைந்திலேர் 10 ஆண்டுகளுக்குள் செய்து முடித்தார். என்றாலும் அவருக்கு முழு திருப்தியில்லை! ஏன்?

தானியங்கள் ஏற்றிச்செல்லும் கட்டைவண்டிகள் ஆறுகளைக் கடப்பது பெருஞ்சிரமமாக இருந்தது. இதனால் தானியங்கள் ஏராளமாகச் சிந்திப் பாழாயின. 1847இல் மட்டும் இறைந்த தானியங்களின் மதிப்பு 5000F.

தோணி, படகு, பரிசல் மூலம் மக்கள் ஆற்றைக் கடப்பார்கள். ஆள் ஒருவர்க்கு 1 காசு கொடுக்கவேண்டும். இதுவே அக்காலத்தில் கூலியாட்களுக்குப பெருந்தொகையாக உணரப்பட்டது.

1838ஆம் ஆண்டு வரை காரைக்கால் மாகாணத்திலேயே சாலை என்று கூறுவதற்கு ஒன்றுமே கிடையாது.

1 காசு என்பது தற்போதைய காசில் பாதி.
அன்று - 1 ரூபாய்க்கு 192 பைசா.
இன்று - 1 ரூபாய்க்கு 100 பைசா.

அத்துடன் வெள்ளக் காலங்களில், பெண்களும், குழந்தைகளும், முதியவர்களும் பெரிதும் பாதிக்கப்பட்டனர். ஆற்றோடு அடித்துச் செல்லப்பட்டவர்களும் உண்டு!

1 *Jacques WEBER - Un Etablissements Français en Inde - Karikal 1832-1849 - mèmoire de maitrise - Aix-en-Provence 1971 - P.100 (Thanks - Nallam Clinic - Mini Conference Hall Library)*

அத்துடன் காரைக்கால் நிர்வாகிக்குப் பாலங்கட்ட வற்புறுத்தி விவசாயிகளும், வர்த்தகர்களும், பொதுமக்களும் பல வேண்டுகோள் விடுத்தனர். நிர்வாகி சைந்திலேர் பெருமுயற்சி எடுத்துத் திட்டங்களை நிறைவேற்றினார்.

**வாஞ்சியாறு பாலம்**

1838இல் வாஞ்சியாற்றுப்பாலம் காரைக்கால் மேற்கு எல்லையில் கட்டப்பட்டது (காரைக்கால் - திருநள்ளாறு சாலையில்). இப்பாலத்தின் தென்பகுதிக்கு அருகில், நூலாறு வாஞ்சியாற்றுடன் சங்கமமாகிறது. இப்பாலத்திற்குச் சிறிது தூரம் மேற்கே (1 கி.மீ.) பச்சூரில் காரைக்கால் புதிய சுடுகாடு அமைந்துள்ளது.

மூன்று கண்கள் (வளைவு) கொண்ட இப்பாலம் 3100F செலவில் அமைக்கப்பட்டது. பாலத்தில் கீழ்க்கண்ட கல்வெட்டு காட்சியளிக்கிறது.

| |
|---|
| **1838**<br>**E.F.De - ST. HILAIRE, ADMINISTRATEUR**<br>**DUVAL PEROU...** |

**அரசலாற்றுப் பாலம்**

1840இல் அரசலாற்றுப் பாலம் காரைக்கால் தெற்கு எல்லையில் காரைக்கால் - திருமலைராஜன்பட்டினம் சாலையில் கட்டப்பட்டது. இதன் நீளம் 80 மீ. பாலத்தில் ஆறு கண்கள் உள்ளன. இவற்றில் நடுவிலுள்ள இரு கண்கள் (வளைவுகள்) மற்றவற்றைவிட உயரமாகவுள்ளன - கப்பல், தோணி போக்குவரத்திற்காக! பாலத்தின் இரு சுவர்களிலும் வழிப்போக்கர்கள் உட்காரக்கூடிய பெஞ்ச் போன்ற இருக்கைகள் அமைந்திருந்தன. இரு சுவர்களிலும் ஆறு விளக்குக் கம்பங்கள் இருந்தன. பாலத்தின் சுவரில் காணும் கல்வெட்டு வருமாறு:-

| |
|---|
| **1840**<br>**A.F.De - ST. HILAIRE, ADMINISTRATEUR**<br>**DUVAL PEROU...** |



24 : அரசலாற்றுப் பாலம் ( 2005 - இடிந்த நிலையில் )

குறிப்பு:- 2004 டிசம்பர் 26 சுனாமி கடற்கோளினால் இப்பாலத்தின் ஒரு பகுதி சிதைந்து போக்குவரத்திற்குப் பெருஞ்சிரமத்தையளித்தது. தற்போது பாலம் பழுது பார்க்கப்படுகிறது. பக்கத்தில் மற்றொரு பாலம் கட்டப்படுகிறது.

## முல்லையாற்றுப் பாலம்

இது காரைக்கால் - திருமலைராஜன்பட்டினம் சாலையில், அரசலாற்றுப் பாலத்திற்கு 1.6 கி.மீ. தூரம் தெற்கே அமைந்துள்ளது. பாலத்தில் 2 கண்மாய்(வளைவு)கள் அகலமாகவும் உயரமாகவும் உள்ளன - படகு, தோணி போக்குவரத்திற்காக. கட்டிய ஆண்டு, செலவு தெரியவில்லை.

## திருமலைராஜனாற்றுப் பாலம்

1853இல் காரைக்கால் - திருமலைராஜன்பட்டினம் சாலையில் முல்லையாற்றுப் பாலத்திற்கு 2.8 கி.மீ. தெற்கே ஊரின் நுழைவாயிலில் அமைந்துள்ளது. இதிலுள்ள கல்வெட்டில், ஆங்கிலம், தமிழ், அரபு ஆகிய மொழிகளில் “1853” என்று குறிக்கப்பட்டுள்ளது. 9 கண்மாய்கள் (வளைவுகள்) உயரமாகவும் அகலமாகவும் உள்ளன. பாலத்தின் இரு பக்கங்களிலும் பக்கத்திற்கு

3 வீதம், 6 விளக்குக் கம்பங்கள் உள்ளன. (எஃகினால் வார்க்கப்பட்டவை). வழிப்போக்கர்கள் உட்கார, பெஞ்ச் போன்ற இருக்கைகள் இருபக்கமும் உள்ளன.

*பிராவிடையானாற்றுப் பாலம்*

1870இல் பிராவிடையானாற்றுப் பாலம் (திருமலைராஜன் பட்டினம் - நாகூர் சாலையில்) திருமலைராஜன்பட்டினத்திற்குச் சிறிது தெற்கே அமைந்துள்ளது. இதன் செலவு 3434 F (அருகில் தற்போது புதிய பாலம் கட்டப்பட்டுள்ளது).



25 : பிராவிடையானாற்றுப் பாலம்

## நூலாற்றுப் பாலம்

நூலாற்றுப்பாலம் சேத்தூர் மேற்கு எல்லையில் திருநள்ளாறு - அம்பகரத்தூர் சாலையில் அமைந்துள்ளது. கட்டிய ஆண்டு, செலவு தெரியவில்லை. ஆனால் திருநள்ளாறு - அம்பகரத்தூர் சாலை 1845இல் போடப்பட்டதால், இப்பாலமும் அதே ஆண்டில் அல்லது 1846இல் கட்டப்பட்டிருக்கலாம். இப்பாலத்தில் ஒரே ஒரு கண்மாய் (வளைவு) தான் உண்டு.

## லெமேர் பாலம்

இப்பாலம் காரைக்கால் - தருமபுரம் சாலையில் தருமபுரம் கிழக்கு எல்லையில் வாஞ்சியாற்றின்மேல் கட்டப்பட்டது. பிற்காலத்தில் கட்டப்பட்ட இப்பாலம் குவர்னர் லெமேர் முயற்சியால், 1905 மார்ச் 27இல் தொடங்கி 1905 டிசம்பர் 31இல் முடிவுற்றுள்ளது. இதில் உள்ள ஒரு கல்வெட்டு:-

**POSE DE LA PIERRE LE 27 MARS 1905**
**PAR MONSIEUR LE GOUVERNEUR J. LEMAIRE**
...............
**TERMINE LE 31 DECEMBRE 1905**

குறிப்பு:- பாலங்கள் கட்டியபின் இப்பகுதி மக்கள் அனைவரும் மகிழ்ச்சிக்கடலில் மூழ்கினர் வேளாண்மையும், வர்த்தகமும் சிறந்த வளர்ச்சியடைந்தன



# 21

# கடல் வாணிகம்

வரலாற்றுக்காலத் தொடக்கத்திலிருந்தே காரைக்காலும், கடல் வாணிகமும் இணைந்தே நடைபோட்டு வருகின்றன.

சேக்கிழாரின் பெரிய புராணத்தில், காரைக்காலம்மையார் வரலாற்றில் அவர் வாழ்ந்த காலத்தில் (கி.பி. 5ஆம் நூற்றாண்டு) கடல் வாணிகம் உச்சக்கட்டத்தில் வளர்ந்திருந்ததென்பதனை நமக்குப் படம்பிடித்துக் காட்டுகிறார் ஆசிரியர். அதாவது:

"காரைக்காலம்மையாரின் கணவர்[1] பரமதத்தன் நான் கடல்மீது கப்பலிற்சென்று பெருஞ்செல்வம் கொண்டு வருவேன்" என்று கூறி, மரக்கலத்தைச் செலுத்துவதற்குரிய மீகாமன் முதலிய தொழில் புரிவோரைக் கொண்டு, தான் செல்லும் அயற்புலங்களிலுள்ள மக்கள் விரும்பும் பொருள்களைக் கப்பலில் நிறைய ஏற்றி, நன்னாளில் கடலுக்குரிய கடவுளை வழிபட்டுக் கப்பலேறிச் சென்றான். பிறகு தான் விரும்பிய தேசத்தில் கப்பலைச் செலுத்தி, அங்கு வாணிபத் துறையில் அளவற்ற பெரும்பொருளைச் சம்பாதித்து, மீண்டும் அக்கப்பலேறிப் புறப்பட்டுப் பாண்டி நாட்டிலுள்ள ஒரு கடற்கரைப் பட்டினத்தை வந்தடைந்தான்" எனக் கூறுகிறார்.

### கடல் வணிகர்களின் குலதெய்வம் - அம்மையார்

மேலும், கி.பி. ஐந்தாம் நூற்றாண்டு முதல் தமிழ்நாட்டில் கடல் வணிகர்கள் 'காரைக்கால் பேயை'த்[2] தன் குலதெய்வமாகக் கருதிப் போற்றி வழிபட்டனர். தாங்கள் அலைகடல்களைக் கடந்து

1 நன்றி : திருத்தொண்டர் புராணம் - உரைநடை - வித்துவான் தி பட்டுச்சாமி ஓதுவார்; திருப்பனந்தாள் காசித் திருமடத்தின் வெளியீடு, 2005 - பக். 231

2 காரைக்காலம்மையார் தனக்கே இட்டுக்கொண்ட பெயர் "காரைக்கால் பேய்".

வாணிபம் செய்யச் சென்றபொழுது தங்கள் குலதெய்வமாகிய அம்மையாரின் சிலையையும் தங்களுடன் எடுத்துச் சென்றனர்.[1] இவ்வாறு வாணிகத்தின்பொருட்டுத் தென்கிழக்காசிய நாடுகளாகிய தாய்லாந்து, காம்பூச்சியா (Combodge), இந்தோனேஷியா, பாலி முதலிய இடங்களில் குடியேறிய தமிழர்களால் அம்மையாரின் வழிபாடு அவ்விடங்களிலும் பரவியது. அம்மையாரின் சிலைகள் செம்பிலும் கல்லிலும் செய்யப்பெற்று கூத்தர்பிரான் திருமுன்னர் வழிபாட்டிற்காக வைக்கப்பட்டன'' என ஆய்வாளர் சு.த. திருநாவுக்கரசு கூறுகிறார். இதுவும் அக்கால கடல் வாணிகத்தின் வளர்ச்சியைக் காட்டுகிறது.

## 1817 - 1870 காலக்கட்டத்தில் கடல் வாணிகம்

தொடக்கக் காலத்தில் ஆங்கிலேயர்கள் கொடுத்த பல இன்னல்களால் கடல் வாணிகத்தில் கணிசமான முன்னேற்றம் ஏற்படவில்லை. இருப்பினும் "திரைகடலோடியும் திரவியம் தேடு" எனும் தாரக மந்திரத்தைக் காரைக்கால் வணிகர்கள் மறக்கவுமில்லை.

காரைக்கால் வந்த வர்த்தகக் கப்பல்கள் வருமாறு:-

| ஆண்டு | | கப்பல்கள் |
|---|---|---|
| 1832 | - | 420 |
| 1837 | - | 461 |
| 1845 | - | 351 |
| 1847 | - | 397 |
| 1848 | - | 420 |

காலனிகளுக்கு ஏற்றுமதியான சரக்குகளினால் பிரான்சு நாட்டிற்கு வருமானம் வருமாறு:-

| | | |
|---|---|---|
| 1842இல் | - | 223 841 F |
| 1845இல் | - | 551 174 F |
| 1849இல் | - | 471 109 F |

1 கன்னடத்தில் காரைக்காலம்மையார் வரலாறு - டாக்டர் (திருமதி) எம்.எஸ். சாந்தா - உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் - சென்னை - 600 113 - பக். 5.

1848லிருந்து 1857 வரை வாணிபம் நன்கு வளர்ந்தது. மேலும் அரசலாற்றின் கரைகள் சீரமைப்பின் பலனாக 1848இல் பிரெஞ்சிந்தியாவில் ஏற்றுமதியில் 15 சதவிகிதமாக இருந்த காரைக்கால் 1864இல் 22 சதவிகிதமாக உயர்ந்தது.

1861இல் காரைக்காலிலிருந்து கொழும்புவிற்கு ஏற்றுமதியான அரிசியின் மதிப்பு 3736 000F ஆகும். 1871இல் இதன் மதிப்பு - 2208 000F ஆகும்.

**பொல்லாத காலம்**

1854-1855லும், 1858-59லும், தண்ணீர் பற்றாக்குறையினாலும், பஞ்சத்தினாலும் மக்கள் பெரிதும் அவதியுற்றனர். வாணிபத்திலும் பின்னடைவு ஏற்பட்டது.



26 : பண்டகசாலை காரைக்கால் அரசலாற்றங்கரை-கடற்கரைச்சாலை

# 22

# அரிசி ஏற்றுமதி[1]

பன்னெடுங்காலமாகவே, அரிசி ஏற்றுமதியின் இராணியாகக் காரைக்கால், சோழ மண்டலக் கரையில் விளங்கி வந்துள்ளது. வங்கக் கடற்கரையில் ஒரு துறைமுகம் என்பது மட்டுமன்றி, அரசலாற்றின் முகத்துவாரத்திலும் அமைந்துள்ளது என்பதால் அதற்குப் பல வாய்ப்புகளும், வசதிகளும் உண்டு.

**கொள்முதல்**

காரைக்கால் அரிசி வணிகர்கள், காரைக்கால் பகுதியில் விளையும் நெல்லையும், அத்துடன் பிரிட்டிஷ் இந்தியாவில் தஞ்சாவூர், திருச்சியைச் சுற்றியுள்ள ஆற்றோரக் கிராமங்களில் விளையும் நெல்லையும் கொள்முதல் செய்வார்கள்.

கொள்முதல் செய்யப்படும் முக்கிய ஊர்களும், அரசலாறு, திருமலைராஜனாறு வழியாகத் தோணி மூலம் காரைக்கால் வரும் தூரமும் பின்வருமாறு :-

| ஊர் | தூரம் (மைல் கணக்கில்) |
|---|---|
| கரூர் | 145 |
| உறையூர் | 88 |
| திருவானைக்காவல் | 86 |
| திருச்சி | 86 |
| கோவில்கடி (Covilcady) | 80 |
| திருவையாறு | 46 |
| கும்பகோணம் | 36 |

**குறிப்பு:** நெல் கொள்முதலுடன் அரிசியும் கொள்முதல் செய்யப்பட்டது.

1 *Jacques WEBER - Un Etablissements Français en Inde - Karikal 1832-1849 - mèmoire de maitrise - Aix-en-Province 1971 - P.132 (Thanks - Nallam Clinic - Mini Conference Hall Library)*

நெல் மூட்டைகளும், அரிசி மூட்டைகளும் பெரிய தோணிகளிலும், வட்டமான தோணிகளிலும், காவிரி, அரசலாறு, திருமலைராஜனாறு வழியே கொண்டு வரப்படும் (தண்ணீர்வரத்து அதிகமுள்ள காலங்களில்). காய்ச்சல் காலங்களில் தரை வழியே மிகச் சிரமத்துடன் வண்டிகள் மூலம் கொண்டு வரப்படும்.

ஏற்றுமதியாவதற்குமுன், கொள்முதல் செய்யப்பட்ட நெல் அரிசியாகக் குத்தி மூட்டைகளில் கட்டப்படுகிறது.

அரிசி குத்துவதே ஒரு தனிக்கலை! (வலியன் குத்துதல் என்பார்கள்). அரிசி குத்தும் தொழிலில் சுமார் 5000 பேர் ஈடுபட்டிருந்தனர். இவர்களை மேற்பார்வையிட சுமார் 500 ஏஜெண்டுகள் (முகவர்கள்) இருந்தனர். பெரும்பாலும் வீட்டிலேயே இத்தொழில் நடைபெறும்.

நெல்லை உரலில் போட்டு உலக்கையால் குத்திப் புடைத்து அரிசி தயாரிப்பார்கள்.

ஆட்கள் மூலம் அரிசி தயாரிப்பது செலவு அதிகம். இதனால் பல வியாபாரிகள் குருடாயில் இஞ்சின் மூலம் இயங்கும் அரிசி ஆலை அமைக்க நிர்வாகி சைந்திலேரிடம் அனுமதி கேட்டனர்.

ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வாழ்வு இருண்டுவிடும் என்ற மனிதநேயமிக்க காரணத்தைக் காட்டி இயந்திர அரிசி ஆலை அமைக்க நிர்வாகி மறுத்துவிட்டார். இருந்தும், சில வருடங்கள் கழித்து சில அரிசி ஆலைகள் காரைக்காலில் தோன்றின.

**சரக்கு ஏற்றுமதி**

உற்பத்தியான அரிசி, கடல் மார்க்கமாக சிலோனுக்கும் (Srilanka), சென்னைக்கும், சிறு கப்பல்கள், பெரிய தோணிகள் மூலம் ஏற்றுமதி செய்யப்பட்டன.

காரைக்கால் அரிசி வெண்மையாகவும், பளபளப்பாகவும் தயாரிக்கப்படுவதால், இதற்கு எங்கும் ஏகப்பட்ட கிராக்கி! "காரைக்கால் அரிசி" என்றாலே ஒரு தனி மதிப்பு அக்காலத்தில்!

**அரிசி இறக்குமதி - ஏற்றுமதி**

| ஆண்டு | காரைக்காலுக்கு இறக்குமதி | காரைக்காலிலிருந்து ஏற்றுமதி |
|---|---|---|
| 1832 | அரிசி - 1100 கார்ஸ்<br>நெல் - 1350 கார்ஸ் | அரிசி - 1232 கார்ஸ்<br>நெல் - 600 கார்ஸ் |
| 1849 | அரிசி - 1246 கார்ஸ்<br>நெல் - 1448 கார்ஸ் | அரிசி - 1390 கார்ஸ்<br>நெல் - 1525 கார்ஸ் |

( 1 கார்ஸ் = 125 கலம், 1 கலம் = 12 மரக்கால், 1 மரக்கால் = 4 படி )

காரைக்காலில் அரிசி வாணிபம் வளர்ந்தோங்கியது, ஆங்கிலேயருக்குப் பிடிக்கவில்லை. சீர்குலைக்கும் நோக்கில் 1845-லிருந்து காரைக்காலுக்கு உள்ளே வரும் நெல்லுக்கும் அரிசிக்கும் சென்னைக்குச் செல்லும் நெல்லுக்கும் அரிசிக்கும் சுங்க வரியை உயர்த்திவிட்டனர். இருப்பினும், நெல், அரிசி ஏற்றுமதி சளைக்கவில்லை!

**அரிசி நெல் ஏற்றுமதி வருமானம்**

| ஆண்டு | வருவாய் |
|---|---|
| 1842 | 548.225 F |
| 1843 | 934.177 F |
| 1845 | 502.104 F |
| 1847 | 679.839 F |
| 1848 | 739.630 F |

குறிப்பு:- 1 ரூபாய் = 2 Francs, 40.



# 23

# எண்ணெய் ஏற்றுமதி[1]

தமிழர்களின் உணவு முறையில் நல்லெண்ணெய்க்கு ஒரு தனியிடமுண்டு. மருத்துவத்திற்கும், விளக்கெரிப்பதற்கும் இது பயன்பட்டது. எண்ணெய் தயாரிக்கும் தொழிலில் அக்காலத்தில், "வாணிப செட்டியார்" என்ற குலத்தினர் மட்டுமே ஈடுபட்டனர். எண்ணெய் செக்கில் ஆட்டப்பட்டுக் குடத்தில் இட்டுப் பாதுகாப்பார்கள். இதனையே காளமேகப் புலவர்:

"ஆடிக் குடத்தடையும், ஆடும்போதே இரையும், பிண்ணாக்கும் உண்டாம்" என்று சிலேடையாகப் பாடியுள்ளார். (இப்பாடல் பாம்பிற்கும் பொருந்தும்).

1844ஆம் ஆண்டு முதல், காரைக்காலில் உற்பத்தியாகும் எண்ணெய்களுக்கு வெளிநாடுகளில் குறிப்பாகப் பிரான்ஸ் நாட்டில் பெரும் மதிப்பு ஏற்பட்டது. ஏராளமாக நல்லெண்ணெய், தேங்காயெண்ணெய், இலுப்பை எண்ணெய் பிரான்சு நாட்டிற்கும், வேறு நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்பட்டன.

எண்ணெயிலிருந்து தயாரிக்கப்படும் சோப்பு, சவுக்காரம் ஏற்றுமதியாயின. தேங்காய் (கொப்ரா) ஏற்றுமதியாயிற்று.

1844இல் ஏற்றுமதியான எண்ணெய் விவரம் வருமாறு:-

| | | |
|---|---|---|
| இலுப்பை எண்ணெய் | - | 10000 வெல்த் |
| சோப்பு | - | தெரியவில்லை |
| நல்லெண்ணெய் | - | 5000 வெல்த் |
| தேங்காய் எண்ணெய் | - | 80000 வெல்த் |

**குறிப்பு:-** சிலோனிலிருந்து (Srilanka) தேங்காய் இறக்குமதி செய்யப்பட்டன.

---

எண்ணெய் அளவு = 1 வெல்த் = 2 காலன் (gallons) = 8 தோண்டி = 16 சேர் = 7.52 லிட்டர்

**பொருளாதார வளர்ச்சி**

| | | |
|---|---|---|
| 1842 | - | 46 எண்ணெய்ச் செக்குகள் (ஆலைகள்) |
| 1849 | - | 106 எண்ணெய்ச் செக்குகள் |
| 1849 | - | 3 சோப்புத் தொழிற்சாலைகள். |

இதனால் நூற்றுக்கணக்கான பேர்களுக்கு வேலைவாய்ப்பும், ஊரில் பொருளாதார வளர்ச்சியும் ஏற்பட்டது.

எண்ணெய் ஏற்றுமதியால் காரைக்காலுக்குக் கிடைத்த வருவாய் பின்வருமாறு:-

| | | |
|---|---|---|
| 1845 | - | 3178 F |
| 1846 | - | 1890 F |
| 1847 | - | 8233 F |



**24**

# துணி ஏற்றுமதி [1]

பன்னெடுங்காலமாகவே நெசவுத்தொழில் காரைக்காலில் சிறந்து விளங்கியுள்ளது. "விழுதியூரான் புடவை", "பட்டணத்தான் புடவை" ஆகியவை 20ஆம் நூற்றாண்டுத் தொடக்கம் வரை மக்களிடம் செல்வாக்கு பெற்றிருந்தன.

1833இல், புலிக்கான் (Pouliquen) என்ற வணிகர், நீலத்துணி வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்ய அரசிடம் அனுமதி கேட்டிருந்தார். ஆனால் செயல்படவில்லை.

1845இல் சிலோன் (ஸ்ரீலங்கா), மலேசியா, ஜாவா, ரெய்னியோம் (Reunion) பிரெஞ்சு காலனி போன்ற நாடுகளுக்குத் துணி ஏற்றுமதி செய்யப்பட்டது.

அக்காலத்தில் இப்பகுதியில் 775 நெசவுப்பட்டறைகள் இருந்தன.

| | | |
|---|---|---|
| காரைக்கால் | - | 250 |
| திருமலைராஜன்பட்டினம் | - | 468 |
| விழுதியூர், திருநள்ளாறு, முருகநூல் கடை | - | 52 |
| கோட்டுச்சேரி | - | 5 |

ஏற்றுமதி துணி வகைகள்:-

கிங்கம் (Guingam) துணி
பல வண்ணத் துணிகள்
நீலத் துணிகள் [2]
கைக்குட்டைகள்

1 *Jacques WEBER - Un Etablissements Français en Inde - Karikal 1832-1849 - mèmoire de maitrise - Aix-en-Province 1971 - P.130 (Thanks - Nallam Clinic - Mini Conference Hall Library)*

2 இப்போதுகூட, நீலக்கிடங்குத் தெரு என்ற பெயரில் ஒரு தெரு காரைக்காலில் உள்ளது.

வேலைவாய்ப்பு 1833இல் இருந்த நிலை

| | | |
|---|---|---|
| தறியாள் | - | 760 |
| நெய்பவர் | - | 760 |
| துணி வெளுப்பவர் | - | 125 |
| சாயம் போடுபவர் | - | 800 |

நெசவுத் தொழில் எண்ணிக்கை ஆண்டுதோறும் வளர்ந்தது.

ஏற்றுமதித் துணியின் மதிப்பு :

| | | |
|---|---|---|
| 1836இல் | - | 359790 F |
| 1839இல் | - | 416165 F |



# 25

# கூலிகள் ஏற்றுமதி [1]

ஆப்பிரிக்காவுக்கு அருகிலுள்ள ரெய்னியோம் தீவு (Reunion), மோரிசஸ் தீவு (Ile de Maurice), அமெரிக்காவிற்கு அருகிலுள்ள குவாதலூப் (Guadeloupe), மர்த்தினீக் தீவுகள் (Martinique) ஆகிய இடங்களுக்குக் கரும்புத்தோட்டங்களில் வேலை செய்வதற்காக ஏராளமான கூலியாட்கள், காரைக்காலிலிருந்தும் புதுச்சேரியிலிருந்தும் கப்பல்கள் மூலம் அனுப்பப்பட்டனர். இந்தியாவின் பல பாகங்களிலிருந்தும் அனுப்பப்பட்டனர். இதனையே "கூலிகள் ஏற்றுமதி" என வரலாற்றாசிரியர்கள் கூறுகின்றனர்.

வெளிநாடு சென்ற கூலியாட்கள் - பஞ்சத்தினாலும், பட்டினியாலும், ஏழ்மையினாலும் இங்கு வாடியவர்களேயாவர். குறிப்பாக :

- சித்திரவதைக்கு ஆட்பட்டவர்கள்
- அன்றாடம் கூலிவேலை கிடைக்காதவர்கள்
- நிலத்திலிருந்து விரட்டப்பட்ட உழவர்கள்
- உப்புத்தொழிலில் ஏற்பட்ட பின்னடைவுகளால் வேலையிழந்தவர்கள்.
- வேலை கிடைத்தாலும், கூலி கிடைக்காதவர்கள்.

வேறு சிலர் தரகர்களால் ஏமாற்றி அழைத்துச் செல்லப்பட்டவர்கள்.

---

1 *Jacques WEBER - Un Etablissement Francais en Inde - Karikal 1832 - 1849 - memorie de maitrise - Aix-en-Provence 1971 - P. 154. (Thanks - Nallam Clinic - Mini Conference Hall Library)*

27 : கூலிகள் ஏற்றுமதி - கடல்வழிப் பாதை




படம் [ ] கடல் வழி மார்க்கம்

## தரகர்கள்

கூலியாட்களாகச் செல்ல விரும்புவோரை ஆள்பிடிக்கும் தரகர்கள் அணுகி, "பொன்னும், பொருளும், பூமியும் கிடைக்குமென்றும், குறுகிய காலத்தில் பெரிய செல்வந்தர்களாகிவிடலாம்" என்றும் இச்சை காட்டி ஏமாற்றி, ஏற்றுமதி செய்வார்கள். அத்துடன் வேலையின்றித் திரியும் இளைஞர்கள், விதவைகள், கணவனால் கைவிடப்பட்ட அப்பாவிப் பெண்கள், குழந்தைகளுடன் துன்புறும் தாய்மார்கள் இவர்களிடமும் தரகர்கள் தங்கள் கைவரிசையைக் காட்டிக் கப்பலில் ஏற்றிவிடுவார்கள்.

இதனினும் கொடுமை, மயக்க மருந்து, போதைப் பொருள் கொடுத்து 10 - 12 வயது சிறுவர்களை வன்முறையில் கடத்திச் செல்வதாகும். காரைக்காலில் ஆள்பிடிக்கும் தரகர்கள் அடுத்துள்ள பிரிட்டிஷ் இந்தியாவிலும் ஏராளமானவர்களைத் திரட்டினார்கள்.

## அரசு அனுமதி பெற்ற கூலிகள் ஏற்றுமதி நிறுவனம்

இம்மாதிரி நிறுவனங்கள் காரைக்காலிலும், புதுச்சேரியிலும் பல இருந்தன.

தரகர்கள் தாங்கள் அழைத்து வந்த ஆட்களை இந்நிறுவனத்திடம் ஒப்படைத்துவிட்டு, நல்ல தரகு பெற்றுச் செல்வார்கள்.

அடுத்ததாக, இந்த நிறுவனங்கள், தங்களிடம் சேர்ந்த ஆட்கள் அனைவரையும், கூலி ஏற்றுமதிக்காக, வெளிநாடுகளிலிருந்து வந்து காரைக்கால் துறைமுகத்தில் நிற்கும் கப்பல் தலைவனிடம் ஒப்படைத்துவிட்டு, மிகப் பெருந்தொகையைத் தரகாகப் பெற்றுக் கொள்வார்கள்.

பின்னர் கப்பல் தலைவன், தனது நாட்டிற்குச் சென்று, கரும்புத் தோட்ட முதலாளிகளிடம் கூலிகளை விற்றுவிடுவார்.

அரசுக்குத் தெரியாமலேயே, கூலிகளைக் கள்ளத்தனமாக கடத்துவதும் ஏராளம்!




28 : கூலிகள் ஏற்றுமதி - அடிமைகள் அடைக்கப் பட்டுள்ள கப்பலின் கீழ்த்தளம் ( வரைபடம் க. சிலம்பரசன் )

1853 பிப். 5இல் காரைக்கால் துறைமுகத்திலிருந்து, ஒரேலி என்ற கப்பல்மூலம் 322 கூலிகள் மர்த்தினிக் தீவுக்கு அனுப்பப்பட்டனர்.

இந்தக் கப்பல் 15 மாதங்கள் பிரயாணத்திற்குப்பின் மர்த்தினிக் தீவுக்கு 1854 மே மாதம் போய்ச் சேர்ந்தது. பிரயாணத்தின்போது 9 பேர் இறந்தனர்! மற்றவர்கள் உயிருடன் நடைப்பிணமாக வந்து சேர்ந்தனர்.

1854இல் மீண்டும் காரைக்காலிலிருந்து 1000 பேர் 3 கப்பல்களில் மர்த்தினிக் தீவுக்கு அனுப்பப்பட்டனர்.

1854 அக்.26இல் பிரெஞ்சிந்தியா அரசின் அனுமதி பெற்ற முகவர்கள்மூலம்

10000 கூலிகள் மர்த்தினிக்குக்கும்

5000 கூலிகள் குவாதலூப்புக்கும்

அனுப்பப்பட்டனர்.

பிப். 13 முதல் அனுமதி பெற்ற முகவர்கள்மூலம் காரைக்கால், புதுச்சேரியிலிருந்து ஆண்டொன்றிற்கு 4000 கூலிகள் ரெய்னியோம் தீவுக்கு அனுப்பப்பட்டனர்.

1855இல் 2000 கூலிகள், 1856இல் 2500 கூலிகள் குவாதலூப், மர்த்தினிக்குக்கு அனுப்பப்பட்டனர்.

1857இல் சிப்பாய்க் கலகம் என்ற முதல் இந்திய சுதந்திரப் போராட்டம் நடைபெற்றது. அதன் காரணமாக, 1858லிருந்து 1860 வரை காரைக்காலிலிருந்து சுமார் 6000 கூலியாட்கள் ஏற்றுமதி செய்யப்பட்டனர்.

## கொடுமையிலும் கொடுமை

கூலிகளின் கப்பல் பயணத்தைவிடக் கொடுமையானது உலகில் ஏதுமில்லை.

- பயணத்தின் நேரம் - சுமார் 15 மாதங்கள்
- கப்பலில் உட்கார, படுக்க இடம் கிடையாது - ஒரே நெருக்கடி (இக்காலத்தில் இலாரிகளில் மாடுகளை ஏற்றிச் செல்வதுபோல).

- இவர்களின் பயணம், கப்பலின் அடித்தளத்தில், அதாவது, அங்கு குவிந்துள்ள ஏற்றுமதி சரக்குகளுக்கிடையே (அரிசி, நிலக்கடலை மூட்டைகள், துணிக்கட்டுகள், எண்ணெய் பீப்பாக்கள்).
- வெளிச்சமே கிடையாது - ஒரே இருட்டு.
- உணவு / குடிநீர் பற்றாக்குறை.
- கப்பல் ஆட்டம் / வாந்தி - காய்ச்சல் / மருந்து கிடையாது.
- இறப்பவர்களை வியாதியால் துடிப்பவர்களைக் கடலில் தூக்கி எறிவது.
- பிரயாணத்தின்போது 7 சதவிகிதத்திலிருந்து 14 சதவிகிதம் வரை சாவு!
- பெண்கள் கற்பழிப்பு.
- 2-3 குழந்தைகளுடன் செல்லும் தாய்மார்களின் நரகவேதனை. இன்னும் பல.

## கரும்புத் தோட்ட முதலாளிகளிடம் விற்பனை

இவ்வாறாகக் கப்பலில் கொண்டுவரப்பட்ட (அழைத்து வரப்பட்ட அல்ல) கூலியாட்களை, இறந்தவர்கள் போக மீதியுள்ள ஆண், பெண், சிறுவர்கள் அனைவரும் கரும்புத் தோட்ட முதலாளியிடம் விற்கப்படுகிறார்கள், ஆடு, மாடுகள் போன்று! மனித சமுதாயத்திற்கு இதைவிட இழிவு வேறில்லை! மனிதநேய சமாதியே இதுதான்!

## கூலிகளின் பணியும் வாழ்வும்

கரும்புத் தோட்டத்திற்குச் சென்ற கூலியாட்கள், விலங்குகளிலும் இழிவாக, அடிமைகளைவிடக் கொடுமையாக நடத்தப்பட்டனர்.

- நாள்தோறும் குறைந்தது 14 மணி நேர வேலை (16, 18 மணி நேரமும் உண்டு)
- உணவு, உடை, ஏதோ கொஞ்சம்! தங்குமிடம் பன்றிக் கொட்டகையைவிடக் கேவலம்.

- பெண்கள் / சிறுவர்கள் அனைவருக்கும் ஒரேயளவு வேலை. இவர்கள் வேலை செய்வதை மேற்பார்வையிட, கையில் சாட்டை, பிரம்பு, கத்தியுடன் "கண்காணிகள்" இருப்பார்கள். சாட்டையடி சத்தம் தொடர்ந்து கேட்டுக் கொண்டேயிருக்கும். கட்டிவைத்துச் சித்திரவதை செய்வதுமுண்டு!
- சில கூலிகளின் கால்களில் இரும்புச்சங்கிலி மாட்டியிருப்பார்கள், ஓடிப் போகாமலிருக்க.
- மாடு, ஆடுகளை விற்பது போல் அங்கேயே கூலிகளை விற்பதும் உண்டு. ஒரு கூலியின் விலை 2000Fலிருந்து 3000F வரை (அதாவது 800 ரூபாயிலிருந்து 1200 ரூபாய் வரை).
- வைத்திய வசதி கிடையாது.
- தோட்ட வேலைக்குச் சென்றவர்களில் 6 மாதம் அல்லது ஒரு வருடத்திற்குள் பலபேர் மாண்டு போவர்.

  1866இல் சாவு எண்ணிக்கை - 52482 பேர்கள்

  1874இல் - 44571 பேர்கள்

**அடிமைத்தன ஒழிப்பு இயக்கங்கள்**

மனித நேயமற்ற கூலிகள் ஏற்றுமதியையும், அவர்களை அடிமைகளாகப் பயன்படுத்துவதையும் எதிர்த்து உலகெங்கும் பல சிந்தனையாளர்கள் குரல் கொடுத்துள்ளனர். பலர் கட்டுரைகள் எழுதியுள்ளனர். பாராளுமன்றங்களிலும் விவாதித்துள்ளனர்.

**வில்பேர்ஃபோர்ஸ்**

இங்கிலாந்து நாட்டில் இக்கொடுமையை எதிர்த்து "வில்பேர்ஃபோர்ஸ்" (Wilberforce) எனும் மனிதநேய நல்லறிஞரின் முயற்சியால் அந்நாட்டில், 1807இல் கூலிகள் விற்பனைத் தடுப்பு சட்டம் இயற்றப்பட்டது. 1831இல் அடிமை முறையும் ஒழிக்கப்பட்டது. எல்லாவற்றிற்கும் மேலாகப் பாராளுமன்றத்தில் 1833இல் இதற்கு உரிய முறையான சட்டம் நிறைவேற்றப்பட்டது.



29 : வில்பேர்ஃபோர்ஸ் WILBERFORCE
கூலி அடிமைகள் ஒழிப்பின் தந்தை

இதன் தொடர்பாக 1843இல் பிரிட்டிஷ் இந்தியாவிலும் 'அடிமை முறை ஒழிப்புச் சட்டம்' நிறைவேற்றப்பட்டது.

**ஷெல்ஷர்**

இதேமாதிரி, பிரான்சிலும் "அடிமை முறை ஒழிப்பின் தந்தை"[1] எனப் புகழ்பெற்ற ஷெல்ஷர் (Schoelcher) என்ற சிந்தனையாளரும் தொடர்ந்து போராடித் தொழிலாளர்கள்

1 *Jacques WEBER - Pondicher et Comptoirs de l'Inde apres Dupleix - DENOEL, Paris - 1996 - P.179*



30. : ஷெல்ஷர் SCHOELCHER
கூலியடிமை முறையை உலகெங்கும் ஒழித்த மனிதநேயர்

அனுபவித்த இக்கொடுமைகளை ஒழித்துள்ளார். இதன்விளைவாக 1848 ஏப்ரல் 27இல் அடிமை முறை ஒழிப்புச் சட்டம் (Decret) வெளியானது. இவரது உருவச்சிலை புதுச்சேரி ஒதியஞ்சாலையில் (அண்ணாதிடலில்) வைக்கப்பட்டிருந்தது. தற்போது புதுச்சேரி கடற்கரையில் குழந்தைகள் பூங்காவில் மாற்றப்பட்டுள்ளது.

ஷெல்ஷரின் நற்பணியை இன்றுவரை உலகத் தொழிலாளர்கள் மறக்கவில்லை!

## கூலிகள் ஏற்றுமதியின் விளைவு

1863ஆம் ஆண்டிலிருந்து உலகச் சந்தையில் சர்க்கரை விலை வீழ்ச்சியால் கூலிகள் ஏற்றுமதியும் படிப்படியாகக் குறைந்து கொண்டே வந்து, மறைந்தும் போயிற்று.

இக்கூலிகள் ஏற்றுமதியால், காரைக்கால் துறைமுகத்திற்கு வந்த கப்பல்களும் ஏற்றுமதியும் பெருகின.

கப்பலில் கூலிகளுடன் அரிசி, எள், தேங்காய், எண்ணெய், ஆடைகள் ஆகிய பொருட்கள் ஏராளமாக நல்ல விலையில் ஏற்றுமதியாயின.

இதனால் ஊரில் பொருளாதாரம் பெருகி, பல தனவந்தர்கள் உருவாயினர்.

# 26

# காரைக்கால் நாகப்பட்டினம் இரயில்பாதை வோர்ம்ஸ் திட்டம்

(Projet Worms)

காரைக்கால் - நாகப்பட்டினம் இரயில்பாதை திட்டத்தைத் தமது சொந்தச் செலவில் நிறைவேற்றித் தர, பாரீஸ் தொழிலதிபரும் வங்கி அதிபருமான வோர்ம்ஸ் (Worms) என்பவர் அரசாங்க அனுமதி பெற விரும்பினார். அக்கால மாமன்னன் மூன்றாவது நெப்போலியன் இரயில்பாதை அமைப்பதில் மிகவும் ஆர்வம் காட்டி வந்ததால் வோர்ம்ஸ் தமது திட்டத்தைப் பிரான்ஸ் அரசாங்கத்திற்கு 1858 சூலை 13இல் விரிவாகத் தெரிவித்து, அனுமதி கேட்டிருந்தார். அதில் :[1]

- இங்கிலாந்திலுள்ள இந்திய இரயில்வே அமைக்கும் நிறுவனத்திடம் பேசி இதற்கு ஒப்புதல் பெற்றுவிட்டதாகவும்,
- இரயில்பாதைமூலம், நாகப்பட்டினத்தைத் திருச்சி வழியாகச் சேலத்துடன் இணைக்கும் திட்டம் பிரிட்டிஷ் இந்தியாவிடம் இருப்பதாகவும்,
- இதனால் காரைக்கால் பெரும்பாலான இந்தியத் தொழில் வர்த்தக நகரங்களுடன் தொடர்பு கொள்ள வாய்ப்பு இருப்பதாகவும்,
- இதன்மூலம் காரைக்கால் மாயேவுடன் இரயில்பாதை மூலம் இணைக்கும் வாய்ப்பும் உள்ளதாகவும்,
- இத்திட்டத்திற்காகச் செலவாகும் பணத்திற்கு ஆண்டுதோறும் 6 சதவித வட்டி கொடுக்க வேண்டும் என்றும்,

---

1. *Jacques WEBER - Les Etablissements Francais en Inde au XIX[e] Siecle - Librairie de l'Inde, Paris - 1988, P. 899 - 900 (5 Vol).*

➢ எல்லாவற்றிற்கும் மேலாக, பிரான்சு குடியேற்ற நாடுகளிலேயே இதுவே முதல் இரயில்பாதை என்ற *பெருமையும் இதற்கு உண்டு.*

என்பதையும் விளக்கியிருந்தார்.[1]

ஆகவே பாரீஸ் உயர்மட்ட அதிகாரிகள் இதனை வரவேற்றனர். பிரெஞ்சிந்திய அரசும் (புதுச்சேரி) இத்திட்டத்தில் ஆர்வம் காட்டியது! காரைக்காலிலும் பெருத்த வரவேற்பு.

திட்டம் நிறைவேறும் நிலையில் இருந்தது!

அக்காலத்தில் காரைக்காலில் அதிக ஏற்றுமதி, இறக்குமதி. 1855ஆம் ஆண்டு வர்த்தக மதிப்பு வருமாறு :

| | | |
|---|---|---|
| காரைக்கால் | - | 61,34,302 F |
| நாகப்பட்டினம் | - | 56,05,980 F |
| *தரங்கம்பாடி* | - | 16,20,000 F |
| நாகூர் | - | 6,59,907 F |

இந்நிலையில், காரைக்கால் - நாகப்பட்டினம் இரயில் இணைப்பு ஏற்படாவிடில், காரைக்கால் வர்த்தகம் வீழ்ச்சியடைந்துவிடும் என்ற நிலை உருவாகியது.

1. இதற்கிடையே, இந்த 16040 மீட்டர் காரைக்கால் - நாகப்பட்டினம் இரயில்பாதை அமைப்பதன் முழுச்செலவு, அதாவது, இடையிலுள்ள ஆற்றுப்பாலங்கள் கட்டும் செலவு தேவையான இஞ்சின், இரயில்பெட்டிகள் இங்கிலாந்திலிருந்து இறக்குமதி செய்யும் செலவு, இதர செலவுகள் பற்றியும்,

2. இரயில்பாதை அமைப்பதால் கிடைக்கும் வருமானங்கள் (பிரயாணிகள் மற்றும் சரக்கு வருமானங்கள்) பற்றியும்,

---

1 இந்தியாவில் முதல் இரயில்பாதை 1853இல் தொடங்கியது' *(மும்பை - தானா).* தென்னிந்திய இரயில்வே தொடங்கியது. 1858-70. முடிந்தது 1870-80இல்.

3. இரயில்பாதை அமைத்த வோர்ம்ஸ்க்கு முதலீட்டுத் தொகைக்கான வட்டி ஆண்டுதோறும் 6 சதவிகிதம் கொடுக்க வேண்டியதைப் பற்றியும்,

4. காரைக்கால் பகுதியின் மொத்த அரசு வருமானத்தையும், மொத்த செலவினங்களையும் கணக்கிட்டு, அதில் கிடைக்கும் உபரித் தொகையைத் கொண்டு வோர்ம்ஸ்க்கு ஆண்டுதோறும் கட்டவேண்டிய வட்டி செலுத்த வாய்ப்புள்ளதா என்பதையும் ஆராய்ந்த பின்பு இத்திட்டம் மிகவும் பயனுள்ளது என்றும், இதனால் காரைக்காலும், பிரெஞ்சிந்தியாவும் பயனடைவதுடன், காரைக்காலுக்கும் பிரான்சுக்கும் இடையேயுள்ள வர்த்தகத் தொடர்பு மேலும் விரிவடையுமென்றும், பிரான்சு குடியேற்ற நாடுகளிலேயே முதல் துறைமுகமாகக் காரைக்கால் விளங்கும் எனவும் முடிவு செய்தனர்.

பிரான்சு அரசு மேலிடம் இத்திட்டத்தை ஆர்வத்துடன் வரவேற்றது!

**புதுச்சேரியில் எதிர்ப்பு**

வோர்ம்ஸ் திட்டச்செய்தி, காட்டுத்தீ போலப் பரவத் தொடங்கியது. புதுச்சேரியில், அரசு உயர்அதிகாரிகளும், ஐரோப்பிய வணிகர்களும் அத்துடன் உள்ளூர் பெரும் வர்த்தகர்களும், வேறு யோசனையைத் தெரிவித்தனர். புதுச்சேரியை இந்திய இரயில்பாதையுடன் இணைக்காவிடில், புதுச்சேரி வர்த்தக நகரம் என்ற சிறப்பையே இழக்க நேரிடும் எனக் கூறி இரயில்பாதை மூலம் புதுச்சேரியை இந்தியாவுடன் இணைக்க வேண்டும் எனக் கூறினார்கள். அதாவது மறைமுகமாக வோர்ம்ஸ் காரைக்கால் - நாகப்பட்டினம் இரயில் இணைப்புத் திட்டத்தை எதிர்த்தனர்.

அத்துடன், வோர்ம்ஸ் திட்டத்திற்கு எதிராகப் பல நடவடிக்கைகளில் இறங்கினர்.[1]

[1] *Jacques WEBER - Les Etablissments Francias en Inde au XIX^e Siecle - Librairie de l'Inde, Paris- 1988-P.905.907, 911.*

புதுச்சேரி - வேலூர் இரயில்பாதை அமைக்கலாம் எனப் பலர் யோசனை கூறினர்.

வேறு சிலர் புதுச்சேரி - சேலம் இரயில்பாதை அமைப்பதே மேல் என வாதாடினர்.

பின்னர், பிரிட்டிஷ் இந்திய அரசாங்கம் சென்னை - புதுச்சேரி - கடலூர் - திருச்சி - நாகப்பட்டினம் இரயில்பாதை அமைக்கலாம் என முன் வந்தது. பின்னர் மறுத்துவிட்டது.

இதில் கவனிக்கத்தக்கது யாதெனில், புதுச்சேரி துறைமுகம் வளர்ச்சியடைந்தால், சென்னைத் துறைமுகம் தனது முக்கியத்துவத்தை இழந்துவிடும். அதன் விளைவாக, பிரிட்டிஷ் கிழக்கிந்தியக் கம்பெனி வர்த்தகர்களுக்குப் பெரும் இழப்பு நேரிடும். ஆகவே, எக்காரணத்தைக் கொண்டும் புதுச்சேரியை இணைக்கும் இந்திய இரயில்பாதை அமைப்பதில்லை என்பதில் பிரிட்டிஷ் இந்திய அரசு உறுதியாக இருந்தது! ஆனால், காரைக்கால் துறைமுக வளர்ச்சியால் அவர்களுக்கு எந்தவிதப் பாதகமுமில்லை. ஆகவே இதற்கு ஒப்புதல் அளித்தனர்.

ஆனால் பிரெஞ்சிந்தியாவைப் பொறுத்தமட்டில், காரைக்கால் துறைமுகம் வளர்ச்சியடைந்தால், அதனால் புதுச்சேரி துறைமுகம் பின்தங்கிவிடும். ஆகவே, பிரெஞ்சுக் கம்பெனியின் வணிகர்களுக்குப் பேரிழப்பு ஏற்படும்.

அத்துடன் செல்வாக்கு மிகுந்த இராணுவ தளபதி சுய்ப்ரேன் 1782இல் கூறியபடி, "அதாவது பிரெஞ்சிந்தியாவின் அரசு தலைமையிடமாக இருக்க, அரசலாற்றங்கரையிலுள்ள இயற்கைத் துறைமுகமாகிய காரைக்காலே சிறந்தது. புதுச்சேரி அல்ல" என வலியுறுத்தியவாறு இந்த இரயில்வே திட்டத்தால் காரைக்கால் பிரெஞ்சிந்தியாவின் அரசு தலைமையிடமாக மாறிவிட பலத்த வாய்ப்புகள் இருப்பதாகவும் அஞ்சினர்.

ஆகவே, அவர்கள் மறைமுகமாக எல்லா வழிகளிலும் முயன்று வோர்ம்ஸ் திட்டத்தை முறியடிக்கப் பாடுபட்டனர் என்பதில் வியப்பில்லை! அவர்களுடன், தொடர்புடைய இந்திய வணிகர்களும் இதில் இணைந்து கொண்டனர்.

ஆகவே, புதுச்சேரி இரயில்பாதை அமைப்பது பல சர்ச்சைகளையும், கருத்து வேற்றுமைகளையும் ஏற்படுத்தினாலும் கூட, புதுச்சேரி வணிகர்கள் காரைக்கால் - நாகப்பட்டினம் இரயில்பாதை அமைக்கக்கூடாது என்பதில் மிகவும் ஒற்றுமையாகச் செயல்பட்டனர். இதற்காகப் பல அதிசய காரணங்களையும் கண்டுபிடித்தனர்.

காரைக்காலுக்கு வரும் சரக்குகள், இரயில் மூலம் வருவதைவிட நீர்வழி மூலம் தோணிகளில் வருவதே மேல் எனவும், இதனால் செலவு மிகவும் குறையும் எனவும்,

புதுச்சேரியின் ஆண்டு ஏற்றுமதியின் மதிப்பு சுமார் 98,00,980 F எனவும், ஆனால் காரைக்காலின் மதிப்பு 61,34,302 F மட்டுமே எனவும்,

எல்லாவற்றிற்கும் மேலாக, காரைக்கால் இரயில்பாதை அமைத்த வோர்ம்ஸ்க்கு ஆண்டுதோறும் 105688 F வட்டி கொடுக்க வேண்டுமென்றும், இதனால் பிரெஞ்சிந்திய வரவு - செலவு திட்டம் பெரும்பாதிப்பு அடையும் எனவும்,[1] இதேபோன்று வேறு பல காரணங்களையும் கூறத் தொடங்கினர்.

இதற்குப் பதிலடியாக, டாக்டர் கொதினோ (Godineau)[1] அளித்த விளக்கம் பின்வருமாறு:-

"கறக்க முடிந்தவரை கறந்து கொள்ள உதவும் 'நல்ல பசு'வாக, புதுச்சேரிக்கு காரைக்கால் இருந்துவருகிறது. காரைக்கால் வரிவசூலில் கிடைக்கும் உபரிப்பணம், அதாவது 220000F, ஆண்டுதோறும் புதுச்சேரிக்குச் சென்று அங்கு அடிக்கடி இடிந்துவிழும் கடற்கரைச் சுவரும், நீர்வராத குடிநீர் குழாயும், நோயாளிகள் இல்லாத மருத்துவமனைகளும் கட்டப்படுகின்றன.

இந்த 220000F-ம் காரைக்காலுக்கே செலவிட்டால், வோர்ம்ஸ்க்கு கொடுக்க வேண்டிய வட்டி 105688 F-ஐ கொடுத்துவிட்டு, மீதிப்பணம் 114312 F-ஐ மற்ற வளர்ச்சி திட்டப் பணிகளுக்கும், (பாய்கால் வடிகால் சீரமைப்பு செலவுகளுக்கும்,

1 *Jacques WEBER - PONDICHERY et les comptoirs de l'Inde - P.145*

மதகு கட்டுதல், சாலை, பாலம் அமைத்தல், துறைமுக விரிவாக்கம் போன்ற இதர செலவுகளுக்கும்) பெரிதும் பயன்படும்"[1]

**வோர்ம்ஸ் திட்டத்தில் முன்னேற்றம்** [2]

இறுதியாக 1860 சன.11இல், பாரிசிலிருந்து பிரான்சு அமைச்சர், காரைக்கால் வோர்ம்ஸ் திட்டத்திற்கு அனுமதியளித்ததுடன், புதுச்சேரி குவர்னரையும் நிர்வாக சபையையும் கடுமையாகச் சாடியிருந்தார். அதாவது "நிச்சயமான திட்டத்தைக் கைவிட்டுவிட்டு, சந்தேகமான திட்டத்திற்குத் துணை சென்றதாகவும், புதுச்சேரி நலனை மட்டுமே கருத்திற்கொண்டு காரைக்கால் உரிமைகளைக் கைகழுவி விட்டதாகவும்" பாரீஸ் அமைச்சர் குறை கூறியிருந்தார்.

**புதுச்சேரியில் பகிரங்க எதிர்ப்பு**

எதிர்பாராத பாரீசின் முடிவால் அதிர்ச்சியடைந்த புதுச்சேரி வணிகர்கள், மாமன்னன் மூன்றாவது நெப்போலியனுக்கு 1860 மார்ச் 22இல் ஒரு விண்ணப்பம் அனுப்பி அதில் இரயில் பாதை அமைக்கக் காரைக்காலைவிடப் புதுச்சேரியே மேல் எனக் கூறியிருந்தனர்.

அத்துடன், பிரான்சிலுள்ள வர்த்தக சபைகளுக்கு (Chambre de Commerce) குறிப்பாக மர்சேய் (Marseille), சைன்மலோ (Saint - Malo), லெஹாவ்ர் (Le Havre), பொர்தோ (Bordeau) போன்ற வர்த்தக பெருநகரங்களிலுள்ள சபைகளுக்கு, நீண்ட கடிதம் எழுதி தங்களுக்கு ஆதரவு திரட்டினர்.

மேற்கண்ட வர்த்தக சபைகளும், புதுச்சேரி கம்பெனி வணிகர்களை ஆதரித்து, அவர்கள் விருப்பம் நிறைவேற தங்களால் முடிந்தவரை பாடுபட்டனர்.

- பொர்தோ வணிகச் சங்கம் (Bordeaux) புதுச்சேரி பிரெஞ்சு கம்பெனி வணிகர்களின் சார்பாக, புதுச்சேரி - காஞ்சிபுரம்

1) *Jacques WEBER - PONDICHERY et les comptoirs de l'Inde - P 147*

2 a) *Jacques WEBER - Les Etablissements Français en Inde au XIXè Siècle - Librairie de l'Inde, Paris - 1988 - P 911 - 912.*

b) *Dr Godineau - Etude Sur l'Etablissement de KARIKAL - Revue Coloniole 185*

இரயில் இணைப்பைப் பிரான்சு செலவிலேயே செய்து தர முயற்சி செய்தனர்.

- லெ ஹாவ்ர் (Le Havre) வணிகர் சங்கம், இன்னும் ஒருபடி மேலாக, பிரெஞ்சிந்தியாவின் முக்கிய துறைமுகம் புதுச்சேரி மட்டுமே! காரைக்கால் அல்ல என வெளிப்படையாகவே தனது உணர்ச்சியைக் கொட்டிப் பல நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

- இதேமாதிரி சைன்மலோ, மர்சேய் வணிகச் சங்கங்களும் பிரான்சு வேளாண்மை அமைச்சர், வர்த்தக அமைச்சர், பொதுப்பணி அமைச்சர் அனைவரும் ஒரே குரலாக "முக்கியத்துவம் கொடுக்க வேண்டியது புதுச்சேரி மட்டுமேயன்றி காரைக்காலல்ல" என்று ஆணித்தரமாக வாதாடினார்கள்.

- இதற்கிடையில் சென்னை கவர்னர், மீண்டும் மீண்டும் புதுச்சேரிக்கு இந்தியாவுடன் இரயில் இணைப்பு கொடுக்க முடியாது என்று ஆணித்தரமாக அறிக்கை வெளியிட்டார்.

- இருப்பினும் புதுச்சேரி குவர்னர் துய்ப்ரே (D'ubray) காரைக்கால் - நாகப்பட்டினம் இரயில் திட்டத்தை நிறைவேற்றுவதால் எந்தக் கெடுதலும் இல்லை என 1861 மே 27இல் நடந்த நிர்வாகச் சபைக் கூட்டத்தில் கூறியபோது, அனைத்துச் சபை உறுப்பினர்களும் எதிர்ப்பைத் தெரிவித்தனர். (சபை உறுப்பினர்களில் 17 பேர் ஐரோப்பியர், மூவர் உள்ளூர்)

- துய்ப்ரேவுக்கு அடுத்து வந்த குவர்னர் போந்த்தான் (Bontemps) (1863) புதுச்சேரி கம்பெனி வணிகர்களின் வலையில் விழுந்துவிட்டார்.

- புதுச்சேரி - திருப்பத்தூர் இரயில்பாதை அமைக்க படாதபாடுபட்டார் - முடியவில்லை.

- புதுச்சேரியை இந்திய இரயில் பாதையுடன் இணைப்பதை பிரிட்டிஷ் இந்திய அரசு ஆழமாகவும் முழுமையாகவும் மறுத்துவிட்டது. ஒரு தடவையல்ல, பல தடவை!

- ♦ இதற்கிடையே, பிரான்ஸ் - ஜெர்மனி சண்டை (1870)யினால், பிரான்சில் நடந்த பல அரசியல் மாறுதல்களால், இரயிலிணைப்புப் பிரச்சனை மங்கிப்போய்விட்டது. இதன் விளைவு -

- √ தயார் நிலையிலிருந்த காரைக்கால் - நாகப்பட்டினம் இரயில் பாதையும் போடப்படவில்லை.[1]

- √ பிரிட்டிஷ் அரசால் மறுக்கப்பட்ட புதுச்சேரியை இந்திய இரயில்பாதையுடன் இணைக்கும் யோசனையும் கருவிலேயே சிதைந்தது.[2]

முடிவாக "தான் கெட்டதல்லாமல் சந்திர புஷ்கரிணியையும் கெடுத்தானாம் ஒருவன்" என்ற கதைதான் நம் நினைவுக்கு வருகிறது.



1 ஒருவாறாக வோர்ம்ஸ் திட்டம் தற்போது (2005) நிறைவேறிவருகிறது. அதாவது நாகப்பட்டினம் - நாகூர் - காரைக்கால் - திருநள்ளாறு இரயில் பாதை அமைக்க நடுவண் அரசு ஒப்புதல் அளித்துப் பணமும் ஒதுக்கியுள்ளது. துரிதமாக வேலைகள் நடைபெற்று வருகின்றன.

2 புதுச்சேரி - விழுப்புரம் இரயில் பாதை 1879லும், காரைக்கால் - பேரளம் இரயில்பாதை 1895லும் போடப்பட்டன!

## 27

# அகழாய்வு செய்ய வேண்டிய இடங்கள்

பேராசிரியர் ழூவோ துய்ப்ரேயின் ஓயாத உழைப்பாலும் விடாமுயற்சியாலும் புதுச்சேரிக்கு அண்மையிலுள்ள ''அரிக்கமேடு'' என்னுமிடத்தில் நடைபெற்ற அகழ்வாராய்ச்சியின் மூலம் கிடைத்த புதைபொருட்கள் வாயிலாகப் புதுச்சேரியுடன் உரோமாபுரி மேற்கொண்டிருந்த கடல் வாணிபத்தின் விரிவையும், புதுச்சேரியின் அக்காலத் தொழில்கள் நாகரிகத்தைப் பற்றியும், உரோமாபுரி வரலாற்றுப் பேரரசன் அகஸ்டஸ் (Augustus) பற்றியும் மேலும் பல அரிய வரலாற்றுச் செய்திகளைப்பற்றியும் தெரிந்து கொள்கிறோம்.

இதேபோன்று, சிந்துவெளி அகழாய்வு, ஆதிச்ச நல்லூர் அகழாய்வு... போன்ற ஆயிரக் கணக்கான அகழாய்வுகள் நம் நாட்டில் நடைபெறுகின்றன. ♦♦ ஆனால் காரைக்கால் பிரதேசத்தில் நடைபெற வேண்டிய எந்த அகழாய்வும் நடைபெறவில்லை. அவற்றில் ஒரு சில:

- திருநள்ளாற்று மருத்துவமனையில் உள்ள புத்தர் சிலையைக் கண்டெடுத்த இடத்தைப் பற்றிய அகழாய்வு.
- செல்லூர் - அகலங்கண்ணு சாலையில், அகலங்கண்ணுக்கு அருகே இலிங்கத்தடி என்ற வயல்களில் இறைந்துகிடக்கும் சுமார் 10க்கு மேற்பட்ட சிவலிங்கங்கள் (கருங்கல் சிற்பங்கள்) உள்ள சுற்றுப் பகுதியில் அகழாய்வு.
- சேத்தூர் - மாதூர் செல்லும் வழியில் தோண்டி கண்டெடுத்த ''முதுமக்கள் தாழி'' இருந்த இடத்தின் சுற்றுப்புறம்.
- திருநள்ளாறு சுடுகாட்டுக்கு வடக்கே சிறிது தூரத்தில் ஒரு திடலில் கம்பீரமாக காட்சியளிக்கும் ஒரு சிவலிங்கம் (கற்சிற்பம்) சுற்றியுள்ள பகுதி.

- நெடுங்காடு கொம்யூன் பிள்ளைத்தெரு வாசலில் உள்ள வாஞ்சியாறு இலிங்கத்தடி மதகின் அருகில் உள்ள சிவலிங்கம் உள்ள இடம்.

இதேபோன்று இன்னும் பிற இடங்களையும் முறையாகத் தேர்ந்தெடுத்துப் பட்டியலிட்டு அகழாய்வு நடத்தினால், காரைக்கால் பகுதியைச் சுற்றியுள்ள பற்பல வரலாற்று உண்மைகள் வெளிப்படும்!

## திருமலைராஜன்பட்டினம் குருளா அகழாய்வு

- பரோஸ் (Barros) என்ற வரலாறு மற்றும் புவியியல் அறிஞர் 16ஆம் நூற்றாண்டிலேயே திருமலைராஜன் பட்டினம் ஒரு சிறந்த துறைமுகப்பட்டினமாக விளங்கியதை தா. ஆசியா (De Asia) என்ற தனது போர்ச்சுகீஸ் மொழி நூலில், சோழமண்டலக் கரையிலுள்ள மற்ற துறைமுகப் பட்டினங்களுடன் இவ்வூரையும் குறிப்பிடுகிறார்.[1]

| | | |
|---|---|---|
| நாகப்பட்டினம் | - | Negapatam |
| நாகூர் | - | Ahor |
| திருமலைராஜன்பட்டினம் | - | Triminiapatam |
| தரங்கம்பாடி | - | Tragambar |
| திருமுல்லைவாசல் | - | Triminauz |

காரைக்கால் நிர்வாகி கொர்தியே (Cordier) இதுபற்றி 1823இல் தனது நூலில்[2] குறிப்பிடுவதாவது :

“காளமேகப் புலவரின் கடுஞ்சினத்தால், திருமலைராஜன் பட்டினம் - போலகம் அருகே மண்மாரி பெய்ததாகக் கூறுகின்றனர். எனில் இது இயற்கையில் - கடவுள் சக்தியால் - ஏற்பட்ட பேரழிவா? அல்லது

1 டாக்டர் சோ. முருகேசன் - துய்ப்ரேய் கண்ட புதுச்சேரி - பக்.

2 *Joesph Cordier - Historique et Statistique de KARAIKAL - Presentation de Francois GROS - Institute Francias de PONDICHERY - 1971*

பலத்த பெரும்புயல் காரணமாகத் தென்னைமர உயரத்தில் ஆழிப்பேரலை எழுந்து, கடலோரப் பகுதியை அழித்துவிட்டு பின்சென்ற சுவடா? என்பதை ஆய்தல் வேண்டும்'' என்கிறார்.

( அதாவது சென்ற 2004 டிசம்பர் 26இல் ஏற்பட்ட சுனாமிப் பேரழிவு போன்றதாகவும் இருக்கலாம். )

மேலும் கொர்தியே கூறுகிறார் :

''பெருமழை காலங்களில் போலகத்தில் அருகிலுள்ள மண்மேடுகளில் நீர் சென்ற பிறகு, ''வெள்ளி நாணயங்கள்'' காணப்படுவதாகவும் கூறுகிறார்கள்.

மேலும் கி.மு. முதல் நூற்றாண்டில் வாழ்ந்த தாலிமி என்ற புவியியல், வானவியல், கணித கிரேக்க அறிஞர் சோழமண்டலக் கரையில் குருளா (KOUROULA) என்ற துறைமுகத்தைக் குறிப்பிடுகிறார்.

எனில், ஒருசமயம் இக்கால **போலகம்**, தாலிமி குறிப்பிடும் ''குருளா''வாக இருக்கலாமோ என்ற சந்தேகம் எழுகிறது.

**டாக்டர் உ.வே.சா. ஆய்வு**

இக்கால போலகத்தின் அருகிலுள்ள ஒரு சிவாலயம் ''புகலீசுவரர் கோயில்'' என்று வழங்குகிறது. அப்பெயரைக் கொண்டு ஆராய்ந்தால், போலகம் என்பது ''புகலகம்'' என்பதன் திரிபாக இருத்தல் கூடும் என்று தோன்றுகிறது. புகலகம் = புகும் இடம். இப்பெயர் பழைய திருமலைராஜன்பட்டினத்திற்குக் கோட்டை வாயில் வழியாகப் புகும் இடமென்பதைக் குறிப்பிக்கும் என்கிறார் டாக்டர் உ.வே.சா.

ஆகவே, இங்கு முறையான அகழாய்வு நடந்தால், திருமலைராஜன் ஆட்சி வரலாறும், வேறு பல தமிழ்நாட்டு வரலாற்று உண்மைகளும் கிடைக்க வாய்ப்புள்ளது என்கிறார் கொர்தியே.

ஆய்வுலக இளைஞர்கள் முயல்வார்களா? இளைய தலைமுறையிடம் நமக்கு நம்பிக்கையுண்டு!

( நன்றி - ஆதாரம் : டாக்டர் உ.வே.சா. திருத்தலங்கள் வரலாறு - பகுதி 2 - பக். 376 டாக்டர் உ.வே.சா. நூல் நிலையம், சென்னை - 600 090 - 1977 )

# முடிவாகக் கூறுமிடத்து

1817-1870 வரலாற்றுக் காலகட்டத்தில் காரைக்காலில் பல முன்னேற்றத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. நீர்ப்பாசன மதகுகள், சாலைகள், பாலங்களினாலும், நிலவரி விகிதக் குறைப்பினாலும், விவசாய உற்பத்தியும் உயர்ந்து கொண்டே சென்றது. மிராசுதார்களும், விவசாயிகளும் நல்ல பொருளாதார ஏற்றம் கண்டனர். அதே நேரத்தில், வர்த்தகமும் நல்ல வளர்ச்சியடைந்து, அடுத்துள்ள நாகப்பட்டினம், நாகூர், தரங்கம்பாடி துறைமுகங்களைவிட, காரைக்கால் துறைமுகத்தில் அதிகப்படியான ஏற்றுமதி, இறக்குமதி நடைபெற்றன. வணிகர்களும், பொதுமக்களும் நல்வாழ்வில் திளைத்தனர்.

பிரெஞ்சிந்திய ஆட்சியின் பயனாகவும், வெர்னியாக் போன்ற சிறந்த குவர்னரின் முயற்சியாலும், தாழ்த்தப்பட்டவர்கள் நிலை ஓரளவு மேம்பட்டாலும், திருப்திகரமான முன்னேற்றம் ஏற்படவில்லை.

24 ஆண்டு காலம் காரைப்பகுதியைப் பாழ்படுத்திவிட்டுச் சென்ற பிரிட்டிஷ் இந்திய ஆங்கிலேயர் தொடர்ந்து தங்கள் காழ்ப்புணர்ச்சியையும், அழுக்காற்றையும் கொட்டிக் கொண்டேயிருந்தனர். ஆறுகளை அடைப்பது, சுங்கவரியை உயர்த்துவது போன்ற பல இன்னல்களைக் கொடுத்துக் கொண்டே வந்தனர். இது ஒருபுறமிருக்க,

மற்றொருபுறம், காரைக்கால் விரிவாக்கப் பணிகளுக்கு - மதகு, பாலம் கட்டுதல், சாலை அமைத்தல், விவசாய வாய்க்கால்கள் சீர்செய்தல் போன்ற திட்டப்பணிகளுக்குப் புதுச்சேரி தலைமை நிர்வாகம் போதிய ஒத்துழைப்பு கொடுக்கவில்லை என்பது மட்டுமல்ல, உரிய பணம் ஒதுக்குவதுமில்லை

அத்துடன் காரைக்கால் வருமானத்தில் பெரும்பகுதியை (முக்கால் பங்குக்குமேல்) புதுச்சேரி செலவுகளுக்குப் பயன்படுத்தினர்.

அரசலாறு இருகரைகளையும் பலப்படுத்தி, சீர்செய்து, காரைக்கால் துறைமுகத்தை விரிவாக்கும் திட்டத்தையும், காரைக்காலை நாகப்பட்டினத்துடன் இணைக்கும் இரயில்பாதைத் திட்டத்தையும், நிறைவேற்றாமல் இருக்க புதுச்சேரி ஐரோப்பிய வணிகர்கள் தங்களால் முடிந்த அனைத்து இடையூறுகளையும் செய்தனர்.

''இடுக்கண் வருங்கால் நகுக'' என்ற வள்ளுவனின் வாக்கின்படி, காரைக்கால் மக்களும், கொர்தியே, லெஸ்பெர்தா, சைந்திலேர் போன்ற சிறந்த நிர்வாகிகளும் ஒருங்கிணைந்து, ''தடைக்கல் உண்டு. தடந்தோள் எங்கே?'' என்ற வெற்றி முழக்கத்துடன் அரசலாற்றின் சீரமைப்புத் திட்டத்தை இனிதே நிறைவேற்றினர்.

ஆனால், இரயில்பாதைத் திட்டம் காற்றில் பறந்தது!

இது குறித்து. சிறந்த வரலாற்றறிஞர் வெபேர் கூறுவதைக் கேட்போம் :

''காரைக்காலுக்கு அதன் உரிய பங்கு கிடைக்க பாரீஸ் அரசாங்கம் தக்க தருணத்தில் முயற்சி எடுத்திருந்தால், சோழமண்டலக்கரையிலேயே காரைக்கால் ஒரு ஜிப்ரால்ட்டராக (Gibraltar)[1] விளங்கி, அனைத்து நாட்டு வணிகக் கப்பல்களும் வந்து இளைப்பாறிச் செல்லும் (Escale) வளமிகு துறைமுகமாகவும், அமுதசுரபி போன்ற வற்றாத நெற்களஞ்சியமாகவும் விளங்கியிருந்திருக்கும்!''

1. ஜிப்ரால்ட்டர் *(Gibraltar)* ஸ்பெயின் நாட்டின் தென்கோடியிலுள்ள கப்பல் வந்து இளைப்பாறிச் செல்லும் உலகப்புகழ் வாய்ந்த துறைமுகம் - அது மத்தியத் தரைக்கடலும் அட்லாண்டிக் பெருங்கடலும் இணையும் ஜலசந்தியில் உள்ளது. (மக்கள்தொகை 25000 பேர்). - இது ஒரு பிரிட்டிஷ் காலனிநாடு.

# சொல்லடைவு

(எண்கள் பக்கத்தைக் குறிக்கும்)


அகர காசாகுடி 51
அகலங்கண்ணு 142
அகழாய்வு 142
அகஸ்டஸ் 142
அடிமையொழிப்பு இயக்கங்கள் 130
அட்டவணை 15, 16, 17, 19, 22, 23, 26, 45, 46, 64, 98, 115, 117, 119, 121, 122, 123, 135
அம்பகரத்தூர் 21, 51, 108
அம்மை நோய்த் தடுப்பு 31
அரசலாறு 57, 64, 94, 96
அரசலாற்றுச் சீரமைப்பு 94, 101, 102, 103
அரசலாற்றுப் பாலம் 110
அரசலாற்று மதகு 58
அரசு அனுமதி 125
அரசு நிர்வாக முறை 89
அரிசி ஏற்றுமதி 117
அரேபியா 69
ஆங்கிலேயர் 47
ஆதிசைவர் 23
ஆப்பிரிக்கா 69
ஆற்று மதகு 51, 52
இங்கிலாந்து 14
இதர வரிகள் 76
இந்தியர்கள் 15
இந்து சமயத்தினர் 18, 20, 22
இந்தோனேஷியா 115
இயற்கைச் சீற்றங்கள் 77
இரயில் திட்ட எதிர்ப்பு 136
இலிங்கத்தடி 60, 61
இளையான்குடி மாற நாயனார் 34
உடைப்புகள் 48
உண்டிச்சீட்டு (Traites) 99, 100
உண்மை நிலையென்ன? 97
உப்பளங்கள் 12, 13
உப்பு உற்பத்தி 11
எத்தா சிவில் (Etat Civil) பிறப்பு இறப்பு பதிவகம் 30, 91
எண்ணெய் அளவை 10, 120
எண்ணெய் ஏற்றுமதி 120
ஐரோப்பியர் 89
ஐரோப்பியர்களின் கதி 28
ஐரோப்பிய குமாஸ்தாக்கள் 72
கஞ்சா விற்பனை 14
கடலாடு வீதி 106
கடல் மீன் வகைகள் 71
கடல் வாணிகம் 114
கதாஸ்தர் 74, 75
கருக்களாச்சேரி 67
கருக்களாச்சேரிக் கோட்டை 67, 68
கருவூலம் 100
கலெக்டர் (தஞ்சாவூர்) 38, 40
கல்வெட்டு 11,106
கள்ளக்கடத்தல் 8
காம்பூச்சியா (Combodge) 115
காரைக்கால் 51,52,53,107,135
காரைக்கால் அம்மையார் 34, 94, 114, 115
காரைக்கால் இரயில்பாதைத் திட்டம் கைவிடப்பட்டது 141
காரைக்காலின் சீரழிவு 3
காரைக்கால் துறைமுகம் 104
காரைக்கால் - நாகப்பட்டினம் இரயில்பாதை வோர்ம்ஸ் திட்டம் (Worms) 134
காரைக்கால் பிரதேச மாகாணங்கள் 83
காரைக்கால் போராட்டம் 36
காரைக்கால் மண்டல ஆலோசனை சபை 93
காரைக்கால் மாகாணம் 83
காலரா 17, 36
காவலர்கள் 38
காவல்துறை 90
காவிரி கிளை நதிகள் 45
காளமேகப் புலவர் 143
கிறிஸ்தவ சமயத்தினர் 18, 20
கீழ்மதகு 51, 52
குடியரசு 32
குடியரசு (2ஆவது) 6, 59
குடியரசு (3ஆவது) 6

குருளா 143, 144
குல ஆய்வு 25
குவர்னர் 92
குவாதலூப் தீவு 124
குளோசே பொறியாளர் (Closet) 102
கூலிகள் அடிமை வாழ்வு 129
கூலிகள் ஏற்றுமதி 124
கூலிகள் ஏற்றுமதி விளைவு 133
கூலிகள் பயணம் 128
கூலிகள் விற்பனை 129
கொதினோ (டாக்டர்) Dr. Godineau 100
கொர்தியே (Cordier) 22, 143
கொர்தே (Cordee) 94, 96
கோட்டுச்சேரி 51,52,53,107,108
கோட்டுச்சேரி மாகாணம் 88
சமூகச் சீர்திருத்தங்கள் 29
சர்வஜன வாக்குரிமை 32
சாலைகள் 106
சிங்கப்பூர் 7
சிந்துவெளி 142
சிலோன் 7
சிவலிங்கம் 61
சீனா 7
சுங்கச்சாவடி 5
சுங்கமற்ற துறைமுகம் 6
சுந்தரமூர்த்தி நாயனார் 35
சுப்பராயபுரம் வாய்க்கால் 61
சுனாமி ஆழிப்பேரழிவு 80
செல்லூர் 142
சேத்தூர் 142
சைந்திலேர் நிர்வாகி 32, 89, 97, 108
சைன்சிமோன் குவர்னர் 97
டாக்டர் உ.வே.சா. 144
தரகர்கள் 125
தரங்கம்பாடி 135
தருமபுரம் 35
தலத்தெரு வாய்க்கால் 61
தலையணை வாய்க்கால் 52
தலையணை வாய்க்கால் மதகு 54
தாய்லாந்து 115
தானத்தார் 12
திருஞானசம்பந்தர் 35
திருத்தெளிச்சேரி 35
திருநள்ளாறு 35, 107, 108, 142
திருநள்ளாறு மாகாணம் 86
திருநாவுக்கரசர் (அப்பர்) 35
திருமலைராஜனாறு 64
திருமலைராஜன்பட்டினம் 107, 143
திருமலைராஜனாற்றுப் பாலம் 111
திருமலைராஜனாற்று மதகு 60, 62
திருவேட்டக்குடி 35
தீண்டத்தகாதவர் 29
துணி ஏற்றுமதி 122
துணை வாய்க்கால்கள் 46
துய்ப்புக் குவர்னர் 2
துய்வால் பெரு (Duval Perou) 110
துறைமுகச் சீரமைப்பு 104
தூது போன மூலை 51
தெக்ஸ்த்தோர் தெரவிசி நிர்வாகி 60
தெப்புய்த்தே 32
தென்னங்குடி 51
நண்டலாறு 52,53,55
நண்டலாற்று மதகு 60
நம்பியார் 70
நல்லமுந்தூர் மாகாணம் 87
நன்செய் நில விரிவாக்கம் 55
நாகப்பட்டினம் 40,70,135
நாகூர் 63,97,107,135
நாணயங்களும் அளவைகளும் 9
நாயன்மார்கள் 34
நிரவி வாய்க்கால் 63,64
நிர்வாக ஆலோசனைக்குழு (Conseil D'administration) 92
நிர்வாகி மாளிகை 81
நில அளவைப் பதிவேடு 74
நிலவரி 72
நிலவரி குறைப்பு 73
நீதித்துறை 90
நீர்ப்பாசனத் திட்டங்கள் 60
நூலாறு 57
நூலாற்றுப் பாசனம் 59
நூலாற்றுப் பாலம் 112
நூலாற்று மதகு 58
நூலாற்று மேம்பாட்டுத் திட்டம் 56
நெடுங்காடு 52,53
நெடுங்காடு மாகாணம் 87

நெப்போலியன் மாமன்னன் (3ஆவது) 6,59
நெல் / அரிசி அளவை 9
நெல் விற்பனை
(வரியாக வசூலித்த நெல்) 99
நொத்தோர் 91
பஞ்சம் 116
பண்டக சாலை 116
பாராளுமன்றத் தேர்தல் 31, 32
பாலம் 51
பாலங்கள் 109
பாலி 115
பிரமுகர் பட்டியல் (காரைக்கால்) 93
பிரமுகர் பட்டியல் (புதுச்சேரி) 93
பிராமணர் 23
பிராவிடையானாறு 63
பிராவிடையானாற்றுப் பாலம் 112
பிரான்ஸ் 7, 14
பிரான்சிஸ் ஆட்சிமாற்றம் 59
பிரிட்டிஷ் அரசு 12
பிரிட்டிஷ் இந்தியா 13, 14, 21, 58, 97
பிரெஞ்சிந்திய நிர்வாகம் 92
பிரெஞ்சுக்கட்டடக் கலை 82
பிரெஞ்சுக்காரர்கள் 1
பிள்ளைத்தெரு வாசல் 143
புதுச்சேரி கவர்னர் 72
புயல் 77, 78, 79
புன்செய்ப் பயிர்கள் 64
பெரமசாமிப்பிள்ளை 39, 40
பெரமசாமிப்பிள்ளை வாரிசுகள் 41,43
பெரான்ழே 1
பெரிய புராணம் 114
பெருமழை 77, 78, 79
பேரரசு (2ஆவது) 6
பைமாஷ் 74
பொது ஆலோசனை மன்றம் (Conseil General) 92
பொதுப்பணித்துறை 90
போராட்டக்காரர்கள் 38
போலகம் 144
போலகம் வாய்க்கால் 63
மக்கள் குடியேற்றம் 8
மக்கள் தொகை 19
மக்கள் நிலை 15
மக்கள் பெருக்கம் 16
மக்கள் விகிதாச்சாரம் 19
மணவாங்கல் மதகு 52
மத்தியத் தரைக்கடல் 69
மர்த்தினீக் தீவு 124
மாதூர் 142
மானாம்பேட்டை 62
மானாமுட்டி 60
மானாமுட்டி மதகு 62
மீனவக்கிராமம் 66
மீனவர்கள் வரலாறு 70
மீன்கள் 68
மீன்வளம் 66
முல்லையாறு 63,64,96,111
முஸ்லீம் சமயத்தினர் 18,19,20
மெலே (Melay) குவர்னர் 50,51
மோரிசஸ் தீவு (Ile de Maurice) 124
லாம்பேஜா 70
லூயி (18ஆவது) 5
லூயி ஃபிலிப் 6
லெமேர் பாலம் 113
லெஸ்பர்தா நிர்வாகி (Lesperda) 50, 53,55,107,108,109
வலங்கை இடங்கை பூசல்கள் 27
வலைகள் 68
வாஞ்சியாற்றுப் பாலம் 110
வாஞ்சியாற்று மதகு 60,61
வால்டேர் பொறியாளர் (Walter) 101
விவசாயிகள் இடர் 47
வில்பேர்போர்ஸ் (Wilberforce) 130
வெட்டாறு 63
வெர்னியாக் குவர்னர் 59, 64, 65, 74, 100, 103, 104
வெள்ளம் 77, 78, 79
வெள்ளப்பெருக்கு 48
வெள்ளாழர் 24
வெற்றிலைச் சண்டை 21
வேலைவாய்ப்பு 17
வேளாண்மையும் நீர்ப்பாசனமும் 44
ஜப்பான் 7
ஜாதி வேற்றுமையின் விளைவு 33
ஷார்ல் (10ஆவது) 5
ஷெல்ஷர் (Schoeicher) 131, 132

# துணைநூற் பட்டியல்

## தமிழ்

டாக்டர் மா. இராசமாணிக்கனார் - 'பெரிய புராண ஆராய்ச்சி' - பழனியப்பா பிரதர்ஸ், சென்னை - 600 005 - 1960.

டாக்டர் உ.வே.சா. - 'திருத்தலங்கள் வரலாறு - பகுதி 1 & 2' - பதிப்பு - வித்வான் சு. பாலசாரநாதன் - மகாமகோபாத்தியாய டாக்டர் உ.வே.சா. நூல் நிலையம், பெசன்ட் நகர், சென்னை - 600 090.

சி. கதிர்வேலாயுதம் - 'வங்கமலி கடற்காரைக்கால்' - தேனாமிர்தம் பதிப்பகம் - நல்லாத்தூர் - குரும்பகரம், காரைக்கால் - 609 603.

காரை இறையடியான் மற்றும் மு. சாயபு மரைக்காயர் - 'காரைக்கால் மஸ்தான் சாஹிப் வலியுல்லாஹ் வரலாற்றுப் பேழை' - 1992 - முத்தவல்லிகள் நிர்வாகசபை - காரைக்கால் - 609 602.

ஞானாம்பிகை குலேந்திரன் - 'காரைக்கால் அம்மையார் தென்னிந்திய இசையின் தாய்' - தமிழ் வளர்ச்சி பண்பாட்டுத் துறை, தலைமைச் செயலகம், சென்னை - 600 009.

வித்வான் தி. பட்டுசாமி ஓதுவார் - 'திருத்தொண்டர் புராணம் உரைநடை' - திருப்பனந்தாள் காசித் திருமடம், திருப்பனந்தாள் - 612 504 - ஆண்டு 2005.

டாக்டர். கே.கே. பிள்ளை - 'தமிழக வரலாறு - மக்களும் பண்பாடும்' - உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை - 600 113 - ஆண்டு 2004.

டாக்டர் (திருமதி) எம்.எஸ். வசந்தா - 'கன்னடத்தில் காரைக்காலம்மையார் வரலாறு' - உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை - 600 113 - ஆண்டு 1997.

வில்லியனூர் புலவர் ந. வேங்கடேசன் - 'கல்வெட்டுகளில் காரைக்கால் பகுதிகள்' - 2000 - திருமுடி பதிப்பகம், வில்லியனூர் - 605 110.

## FRANÇAIS

**Cordier Joseph** - Historique et Statistique de Karikal - Presentation de Français GROS - IFP (Institut Français de Pondichèry), 1971.

**Cordier Joseph** - Historique et Statistique de Karikal, Vol.II - Presentation et Indexation des deux volumes par Jean DELOCHE - IFP, 1989.

**DUBREUIL (Jouveau)** - Articles publies à la Revue Historique de I'Inde Française, Vol.8 - 1952 et vol 9.

**E. Gaudart** - Catalogue des Manuscrits Tome IV - 1816 - 1855 - Imprimerie du gouvernment Pondichèry - 1942.

**GODINEAU Docteur** - Etude sur I' Etablissement de Karikal - Paris 1859.

**Le Gentil** - Voyage dans les mers de I'Inde (1799).

**SICE CONSTANT** - Annuaire Statistique des Etablissement français dans I'Inde - Annèe 1843-Pondichèry 1845.

**WEBER Jacques** - Un etablissements Français eu Inde - au XIX siècle (1816-1914) - Librairie de I'Inde - Paris.

**WEBER Jacques** - Pondichèry et les comptoirs de I'Inde après Dupleix - DENOËL - Paris - 1996.

**WEBER Jacques** - Un ètablissements français eu Inde - Karikal - 1832-1849 - Mèmoire de Maîtrise Aix en Provence 1971.

## ENGLISH

**Rev. Fr.G.U. Pope** - A Textbook of Indian History - W.H. Allen & Co., London - 1880.

**Dr.S. SASIVALLI** - KARAIKAL AMMAIYAR - International Institute of Tamil Studies, Chennai - 600 113. - (1984).

**WILLIAMS JACKSON (A.V)** - History of India in nine volumes - Reprint - AES, New Delhi - 1987

# புதுச்சேரித் திராவிடவியல் ஆராய்ச்சி நிறுவனம்

புதுச்சேரி

| | |
|---|---|
| டாக்டர் சோ. முருகேசன் | நிறுவநர் இயக்குநர் |
| டாக்டர் ஆர். கிருஷ்ணமூர்த்தி | நிறுவநர் உறுப்பினர் |
| டாக்டர் ஆர். வெங்கட்டராமன் | நிறுவநர் உறுப்பினர் |
| டாக்டர் தாமஸ் லெமன் | நிறுவநர் உறுப்பினர் |
| டாக்டர் எஸ். பன்னீர்செல்வம் | நிறுவநர் உறுப்பினர் |
| புலவர் ந. வேங்கடேசன் | நிறுவநர் உறுப்பினர் |
| திரு. என். திருவேங்கடசாமி | நிறுவநர் உறுப்பினர் |
| டாக்டர் இராச. திருமாவளவன் | நிறுவநர் உறுப்பினர் |
| திரு. எம். முருகேசன் | நிறுவநர் உறுப்பினர் |
| திரு. வே. செல்வராஜு | நிறுவநர் உறுப்பினர் |

## வெளிவந்த நூல்கள்

1. **கசாலின் பார்வையில் அரிக்கமேடு** **1997**
ஆசிரியர் டாக்டர் சோ. முருகேசன்
(தமிழ்நாடு அரசு தமிழ் வளர்ச்சித் துறையின் 1997ஆம் ஆண்டு சிறந்த நூலுக்கான பரிசு பெற்றது)

2. **துய்ப்ரேய் நோக்கில் புதுச்சேரி** **2000**

3. **திருநள்ளாற்றுப் புராணம் (மூலமும் உரையும்)** **2003**

4. **வரலாற்றில் திருநள்ளாற்றுத் தர்ப்பாரண்யேசுவரர் திருக்கோவில் - ஓர் ஆய்வு** **2004**

அலுவலகம் :
**அம்மா மந்த்ராலயா**
6, செல்லான் நகர், புதுச்சேரி - 605 011.
இந்தியா.




**காரைக்கால் நகரமும் சுற்றுப்புறமும் விளக்கம்**

**கட்டடங்கள்**

1. நிர்வாகி மாளிகை
2. கடல் வணிகத் துறை
3. வருவாய்த்துறை
4. சிப்பாய் இருப்பிடம்
5. அரசு மருந்துக்கடை பார்மசி
6. மார்க்கட்
7. காவல்நிலையம்
8. உப்புக்கடை
9. சிறைச்சாலை
10. மருத்துவமனை
11. பழைய துறைமுக ஆபீஸ்
12. புதிய துறைமுக ஆபீஸ்
13. சைன்த்தான் ஆலை
14. முதல்நிலை நீதிமன்றம்
15. சமாதான நீதிமன்றம்
16. மாதாகோவில் (பெரிய)
17. மாதாகோவில் - சைந்த் அன்துவான்
18. பொதுப்பணித்துறை பண்டகசாலை

**பள்ளிவாசல்கள்**

1. மஸ்தான் பள்ளி
2. தைக்கால் பள்ளி
3. மெய்தீன் பள்ளி
4. கபாடா பள்ளி
5. அசரா பள்ளி
6. மீரா பள்ளி
7. காதிரும் பள்ளி

**கோவில்கள்**

A. பிள்ளையார் கோவில்
B. தெப்பக் கோவில்
C. கைலாசநாதர் கோவில்
D. பெருமாள் கோவில்
E. மாரியம்மன் கோவில்
F. பிள்ளையார் கோவில்
G. பிள்ளையார் கோவில்

**தெருக்கள்**

a. பொறையார் சாலை
b. மார்க்கட் வீதி
c. மாதாகோவில் வீதி
d. பார்மசி தெரு
e. தரங்கம்பாடி வீதி
f. சுவான்மால் வீதி
g. மஸ்தான் பள்ளி வீதி
h. சுண்ணாம்புக்காரத் தெரு
i. மருத்துவமனைத் தெரு
j. திப்புசுல்தான் வீதி
k. திருநள்ளாறு வீதி
l. பிராமணர் தெரு

**PLAN**
**de la Ville de KARIKAL**
**et de ses environs.**

- Etangs et Rivieres
- Edifices publics
- Mosquées
- Pagodes
- Champs à Nélys
- Terrains d'habitation

**Légende.**

**EDIFICES**

1. Hôtel du Gouvernement
2. Administration de la Marine.
3. Domaine.
4. Caserne.
5. Pharmacie du Gouvernement
6. Bazar.
7. Thana
8. Magasin de Sel.
9. Prison.
10. Maison de Santé
11. Ancien Bureau du Port
12. Nouveau Bureau du Port.
13. Usine S^te Anne
14. Tribunal de première Instance
15. Justice de Paix.
16. Eglise de Notre-Dame des Anges
17. Eglise S^t Antoine de Padoue
18. Magasin du Génie.

**MOSQUÉES**

1. Mastanpally
2. Mahammed-Casoumarécar-taïkal
3. Meidinepally.
4. Capadapally
5. Assarapally.
6. Mirapally
7. Cadiroumpally.

**PAGODES**

A. Poulléar-Covil
B. Toppé-Covil
C. Caïlachanader-Covil.
D. Peroumal Covil.
E. Mariammin-Covil.
F. Poulléar-Covil.
G. Poulléar-Covil.

**RUES.**

a. Rue de Poréar.
b. Rue du Bazar.
c. Rue de l'Eglise
d. Rue de la Pharmacie
e. Rue de Tranquebar
f. Rue du Gouvernement.
g. Rue de Mastanpally
h. Rue des Chaufourniers
i. Rue de l'Hôpital
j. Rue de Tippou
k. Rue de Tirnoular
l. Rue des Brahmes

நன்றி : **Dr. GODINEAU - Etudes sur l'Etablissement de Karikal - Paris - 1870 - Bibliothèque Nationale. Paris.**



# நூலாசிரியரைப் பற்றி...

காவிரி நதியின் கிளைவாய்க்கால்களால் சூழப்பெற்ற தஞ்சாவூர் மாவட்டத்தின் "நெற்குப்பை" எனும் கிராமத்தில் 1927 நவம்பர் 6 இல் இந்நூலாசிரியர் திரு. சோ. முருகேசன் பிறந்தார்.

**பெற்றோர்** : திருநள்ளாறு சு.செ. சோமசுந்தரம்பிள்ளை – திருமதி பர்வதம்மாள்.

**கற்ற கல்வி** : BACCALAURÉAT (PARIS)
LICENCE EN LINGUISTIQUE (MONTPELLIER, FRANCE)
DOCTEUR (LETTRE) DE L'UNIVERSITE MONTPELLIER (FRANCE)
MASTER OF ARTS (MADRAS)
P.G. Diploma in Teaching of English - Central Institute of English (Hyderabad)

**ஆற்றிய பணி** : ஆசிரியர், புதினக்கல்லூரி, காரைக்கால்
முதல்வர் ஆசிரியப் பயிற்சிப்பள்ளி, காரைக்கால்
முதல்வர், புதினக் கல்லூரி, காரைக்கால்
காரைக்கால் மாகாண கல்வியதிகாரி (DELEGUE DU CHEF DE SERVICE DE I'INSTRUCTION PUBLIQUE), காரைக்கால்
SPECIAL OFFICER FOR FRENCH EDUCATION, Govt. of Pondichery, Pondichery.
JOINT DIRECTOR OF EDUCATION, Govt. of Pondichery, Pondichery.
இயக்குநர், புதுச்சேரி மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனம் (PILC) புதுச்சேரி
தலைவர், புதுச்சேரி திராவிடவியல் ஆராய்ச்சி நிறுவனம், புதுச்சேரி.

**துணைத் தலைவர்** : புதுச்சேரி மாநில வரலாற்றுச் சங்கம் (Societe Historique de l'Etat de Pondichéry.)
Alliance Française, Pondichéry.
Comparative Law Society, Pondichéry.

**வெளியிட்ட நூல்கள்:** ஐந்து. அதில் "கசாலின் பார்வையில் அரிக்கமேடு" என்ற நூல் தமிழ்நாடு அரசு தமிழ் வளர்ச்சித் துறையின் சிறந்த நூல்களுக்கான பரிசு பெற்றது. (1977இல்). இவரைப் பற்றி நீதிநாயகம் தவித் அன்னுசாமி அவர்கள் கூறியது: "நூலாசிரியர் முதிய ஆசான். போதனா முறையில், இந்தியா, மேனாடுகளிலுள்ள சிறந்த பயிற்சிக்கூடங்களில் பயின்றவர். பல ஆசிரியர்களை உருவாக்கியவர். சொல்ல வந்ததைத் தெளிவாகவும், சுவையாகவும் எடுத்துரைக்கும் திறம் பெற்றவர்."

வரலாற்றை வடித்தளிக்கும் முனைவர் சோ. முருகேசன் அவர்கள் பல்லாண்டு வாழ்ந்து பல நூல்கள் படைப்பாராக!

அன்புடன்
வெள்ளையாம்பட்டு சுந்தரம்